புத்தம் புதிய தேன்சுவை நாவல்

# ரமணிசந்திரன்

ரூ.25/-



அழகிய
மங்கையர்
நாவல்

# பேசும் பொற்சித்திரமே

உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ்நாவல்

# பேசும் பொற்சித்திரமே



ரமணிசந்திரன்



பதினைந்து நாட்கள்!

பதினைந்து பிறவிகளுக்குச் சேர்த்துப் பாடுபட்டு முடித்தாயிற்று.

இதற்கு முன்னாலும், அந்தப் பிசாசால்... தங்கை என்று மனதால் நினைக்கக்கூட முடியாத இயலாத ஜென்மம். ஈனப்பிறவி! அவளால் எவ்வளவோ துன்பம்தான்! வேதனைதான்! ஆனால், அதை விடவும் அவர்களைத் தவிக்க வைத்தது, அவளால் ஏற்பட்ட தலைகுனிவுதான்!

ஓர் இள வயதுப் பெண் வீட்டை விட்டு வெளியேறியதையே 'அப்பாடா' என்று ஒரு வித நிம்மதியாக உடன் பிறந்த அண்ணனே உணர வேண்டுமானால், அவள் எப்படிப்பட்ட ராட்சசியாக இருக்க வேண்டும்?

அண்ணன் மட்டுமல்ல, பத்து மாதம் சுமந்து பெற்ற தாயும் கூடத்தான்.

"கூடவே இருந்து கொல்லாமல், எங்கேனும் போய்த் தொலையட்டும் விடு" என்றும் மகளைத் தேட வேண்டாம் என்றும், அவளுடைய அன்னையே மகனைத் தடுக்க வேண்டுமானால், அந்தப் பெண்ணால், பெற்றவள் எவ்வளவு துயரத்தை அனுபவித்திருக்க வேண்டும்?

இப்போது இறந்தே போனது கூடப் பெரிய வருத்தமாக இல்லையே!

துயரம்தான்! ஆனால், இவள் கொஞ்...சம் நல்ல பெண்ணாக இருந்திருக்கக் கூடாதா? என்ற ஏக்கம்தான் இருவருக்குமே அதிகமாக இருந்தது. அந்த அளவுக்கு அவர்களை நோகடித்து, பாசத்தை சாகடித்தும் விட்டவள்.

அந்த அரைகுறை ஆடையும், ஆபாச நடையும், அவுட்டுச் சிரிப்பும்... எங்கேதான் படித்தாளோ?

எந்நேரமும் வலியைப் பொறுத்து மறைக்க முயலும் தாயின் மரத்த முகம் நினைவுவர, ஆனந்தனின் நெஞ்சு கொதித்தது.

சின்ன வயதில் இருந்தே எழிலரசி பிடிவாதக்காரிதான். எதைச் செய்யச் சொன்னாலும், முடியாது என்பதுதான் அவளது முதல் பதிலாக இருக்கும்.

பாலைக்குடி, பருப்பு சாப்பிடு என்று, உணவு கொடுப்பதற்குக்கூட காலில் விழாத குறையாக அம்மா, அவளிடம் கெஞ்சிக் கூத்தாட நேரும்.

குரலை உயர்த்தினாலோ, அவ்வளவுதான்! எழிலரசியின் கூச்சலில், அம்மாவைக் கூறு கிழிப்பதற்குத் தாத்தா, பாட்டி, சின்னத் தாத்தா எல்லோரும் கூடி விடுவார்கள். அத்தனை ஆண்டுகள், அன்னை எப்படித்தான் தாங்கினாளோ?

எல்லோரையும் முந்திக்கொண்டு, ஆனந்தனுடைய தந்தை இறந்ததும், மரகதம் அடங்கிப் போகக் காரணமாக இருந்தது எனலாம். தாங்கும் கணவன் இல்லாதபோது, எந்தத் தைரியத்தில் அவள் குரலை உயர்த்துவாள்?

ஆனால், குடும்பத்துப் பெரியவர்கள் என்று இருந்தவர்கள் செய்த



வினைதான் இந்த இழிநிலைக்கு முக்கியமான காரணம் என்பது, ஆனந்தனின் கருத்து! அப்பப்பா! எழிலுக்குத்தான் எவ்வளவு செல்லம் கொடுத்தார்கள்!

அந்தக் குடும்பத்தில் சில தலைமுறைகளாகவே, பெண் குழந்தைகளே இல்லையாம். இங்கே அப்பா ஒரே பிள்ளை என்றால், சின்னத் தாத்தா வீட்டில் இருவரும் பையன்களே! அந்தப் பிள்ளைகளுக்கும் ஆண் குழந்தைகளே!

சும்மாவே அவர்கள் எரிச்சலுற்று இருந்தபோது, அண்ணன் வீட்டிலும், முதல் மகவாக, சற்றுக் காலம் தள்ளியே ஆனந்தன் பிறந்திருந்தான்!

இதுவும் ஆண்பிள்ளைதானா என்று பெரியவர்கள் உச்சுக் கொட்டினார்கள்.

ஆனால், வீட்டு ஆண்களுக்கு எப்படி இருந்தாலும், மரகதத்துக்கு தன் பிள்ளையில்லாக் குறை தீர்ந்தது என்று மிகுந்த ஆனந்தமே... மேலும் நாலு ஆண்டுகளின் பின்பு, அவள் மறுபடியும் கருவுற்று, ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கவும், வீட்டில் ஒரே கோலாகலமாம்!

ஏற்கனவே சொந்த மருமகள்களுடன் சிறு தகராறில் இருந்த சின்னத் தாத்தா, இந்தப் பேத்தியைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்காக, இங்கேயே வந்து உட்கார்ந்து விட்டார். அண்ணன் தம்பிக்குள் அவ்வளவு ஒற்றுமை!

ஆனால், அவர்செய்ததுதான் பெரிய கொடுமையாகிப் போயிற்று. மகன்கள், மருமகள்கள் மேல் ஏற்பட்ட கோபத்தில், தன் பங்குச் சொத்தாகக் கொண்டுவந்தது முழுவதையும், அவர், பேத்தி எழிலரசிக்கே எழுதி வைத்துவிட்டார்.

அவரவர் காலம் முடியுமுன் அந்தத் தலைமுறையினர்கொடுத்த செல்லம் ஒருபுறம்., பதினெட்டு வயதிலிருந்து விருப்பம் போலச் செலவு செய்யவென்று, அவள் பெயரில் அவர்கள் வைத்திருந்த பணம் ஒருபுறமாக, எழிலரசியின் பேயாட்டத்துக்குத் தங்கு தடையே இல்லாமல் போயிற்று.

தாயின் கண்ணீரைப் பார்த்துவிட்டு, ஒரு தரம் ஆனந்தன் சற்றுக் கடுமையாகப் பேசவும், வீட்டை விட்டே போய்விட்டாள்.

அதைக்கூடத் தாயும் மகனும் முதலில் பெரிதாக எண்ணவில்லை. இப்படி எழிலரசி வீட்டை விட்டுப் போவதும், ஓரிரு நாட்கள் கழித்து, இன்ன இடத்தில், இப்படிக் கிடக்கிறாள் என்று தகவல் வந்து, குனிந்த தலை நிமிராமல் ஆனந்தன் போய் அவளைத் தூக்கி வருவதும், கண்ணீருடன் மரகதம் அவளுக்குப் பணிவிடை செய்வதும், அந்த வீட்டில் பழக்கமாகிவிட்ட ஒன்று.

அடித்து உதைத்தால், அடங்கமாட்டாளா என்று ஆனந்தனுக்குத் தோன்றும்! ஆனால், ஒருதரம் மிரட்டுவது போலக் கையை ஓங்கியதற்கே, போலீசைக் கூப்பிட்டு, ஒரே ரகளையாகி விட்டது.

தாயாரும் வந்து நின்று, மகன் பக்கமாகப் பேசிய பிறகுதான், அந்தப் பெண் காவலர்கள் சும்மாப் போனார்கள்.

இது நமக்குத் தேவைதானா என்று தாய், மகன் இருவருமே, அவளிடமிருந்து, அப்படியே ஒதுங்கி விட்டார்கள்.

மெதுவாகச் சொல்லிப் பார்க்கலாம் என்று, அண்ணனோ, அன்னையோ அருகில் வந்து அமர்ந்தால், எழிலரசி எழுந்து, விலகிப் போய்விடுவதுதான் வழக்கம். அதற்குமேல், அவளைக் கூப்பிட்டு எதையும் சொல்ல, இவர்களுக்கும் மனம் வராது. தைரியமும் இராது.

இந்தச் சுடுகாட்டில் இருக்கப் பிடிக்கவே இல்லை என்பது, அவ்வப்போது, அண்ணன், அன்னை காதில் விழும்படி, எழில் உரக்க யோசிக்கும் வார்த்தைகள்.

அன்றும் அப்படித்தான். சாப்பாட்டுத் தட்டைச் சுவரில் விசிறியடித்துவிட்டுக் கை கழுவப் போனாள் பெண்.

"அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டு, எந்த மகாராணியும் இந்த வீட்டில் இருக்கத் தேவையில்லை" என்று பதிலைத் துப்பிவிட்டு, ஆனந்தன் தன் வேலையைப் பார்க்கக் கிளம்பிப் போனான்.

இந்த நிலையில், மகள் கண்ணில் படாமல் ஒதுங்கிக் கொள்வது மேல், என்று மரகதமும் பின்னறைப் பக்கம் போய்விட்டாள்.

தடால் முடால் என்று எழிலரசியின் அறையில் சத்தம்



கேட்டபோதும், அவளோ வேலையாட்களோ அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. அப்புறம், அவர்கள் தலையல்லவா உருளும்!

கால் டாக்சி ஒன்றை வரச் செய்து, அதில் ஏறிப் போனவளைப் பற்றிக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகத் தகவலே இல்லை.

எங்கே எப்படி உருண்டு கிடக்கிறாளோ? வந்து அள்ளிக்கொண்டு போங்கள் என்று யார் கூப்பிடப் போகிறார்களோ என்ற வெறுப்பும் கவலையுமாகச் சில பல தினங்கள் கழிந்தன.

அப்படி ஓர் அழைப்பு வரவில்லை. வராது என்று ஆனதும் "வயதுப் பெண். என்ன முடிவு என்றாலும், அது கெட்டதாகவே இருந்தாலும், விவரம் தெரிந்து விட்டால் நன்றாக இருக்குமே!" என்று முனகினாள் பெற்றவள்.

அதற்கு முன்பே, ஆனந்தன் தானே பொறுப்பெடுத்து, ஓரளவு தங்கையைப் பற்றி விசாரித்திருந்தான்.

அதன்படி, அவளது பாங்க் கணக்கில், பணம் மாதந்தோறும் பணம் எடுக்கப்பட்டு வந்தது. அவனுக்குத் தெரிய வந்திருந்தது. அது மட்டுமல்ல. அந்தப் பணம் மும்பையிலிருந்து எடுக்கப் பட்டிருந்ததையும், பாங்க் நண்பர் மூலம் அவன் அறிந்திருந்தான்.

எடுக்கப்பட்ட பணம், மும்பை வாழ்வுக்குக்கூட மிக அதிகமே!

ஆகவே, அவள் தன் வாழ்க்கை முறையைச் சீர்ப்படுத்தி இராவிட்டாலும், இங்கே போல, அங்கங்கே விழுந்து கிடக்கிற அளவு மோசமில்லை என்ற நிம்மதி அவனுக்கு.

மற்றபடி, உன் தங்கை இந்த மாதிரித் தன்னுணர்வு இல்லாமல் கிடக்கிறாள் என்று, மும்பையிலிருந்து அவனிடம் சொல்வது, இந்த செல்ஃபோன் யுகத்தில் கடினம் இல்லையே!

தப்பான இடம் எதிலும் மாட்டியிருப்பாளோ என்ற ஐயத்தை, அவள் பணம் எடுத்த விதம் போக்கியது.

அதற்கு மேல், எழிலரசி எப்படி இருக்கிறாள், என்ன மாதிரி வாழ்கிறாள் என்று விசாரித்து அறிய, ஆனந்தனுக்கு விருப்பமில்லை. அதைப் பற்றி அறிவானேன்? இப்படி நம் தங்கை வாழ்கிறாளே என்று

வருத்தப்படுவானேன்?

அவளைத் திருத்த முடியும் என்றால், இன்னும் எவ்வளவோ கஷ்டத்தை எவ்வளவு என்றாலும் அனுபவிக்கலாம்தான். ஆனால், ஒரு பயனுமே விளையாது என்று உறுதியாகத் தெரிந்தபின், அதில் தலையிடுவது, குளவிக் கூட்டில் கையை விடுவது போல வெகு துன்பகரமான மடத்தனம்.

தெரிந்த விவரத்தைப் பகிர்ந்து கொண்டபோது, அவனுடைய தாயின் கருத்தும் அவனையே ஒத்திருந்தது.

"அவள் பிறக்காமலே இருந்திருக்கலாம் தம்பி" என்று மட்டுமே மரகதமும் ஏக்கத்துடன் கூறினாள்.

அதன் பிறகு, எழிலரசியின் பேச்சே வீட்டில் எழவில்லை.

குடும்பச் சொத்து, நல்ல தோற்றம், தொழிலில் வெற்றி, ஒரு குறை சொல்ல முடியாத நடத்தை என்று பல சிறப்புகளும் இருந்ததால், அவனுக்குத் திருமணம் பேசிப் பலர் வந்தார்கள்.

மரகதமும் ஆசையாகவே மகனிடம் கேட்டாள்.

ஆனால் "இளம் பெண் என்று எவளைப் பார்த்தாலும், எழில் நினைவே வந்து, ஒரே வெறுப்பாக இருக்கிறதும்மா. இந்த உணர்வு எப்போது மறைகிறதோ, அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்ற மகனின் பேச்சை மீறி, அவளும் வற்புறுத்தவில்லை.

ஏனெனில், அந்தப் பச்சை ரணத்தின் வலி அவளும் அனுபவிப்பதுதானே? "உன் மனம் ஒரு நிலைக்கு வரும்போது சொல்லப்பா" என்றதோடு, பேச்சை முடித்துக் கொண்டாள் பெற்றவள்.

எனவே, அந்தப் பேச்சு அப்படியே நின்றது.

அடுத்த சில ஆண்டுகளில், தாயும் மகனுமாக, அந்த வீட்டில் மெய்யாகவே நிம்மதியாக வாழ்ந்தனர் எனலாம்.

தாயார் சில மாதங்களுக்கு ஒருமுறை, நல்ல உயர்தர ஆன்மீகச் சுற்றுலா போய் வருமாறு, ஆனந்தன் ஏற்பாடு செய்தான். தெய்வ தரிசனங்களும், பல்வேறு மனிதர்களுடன் பழகியதுமாக, மரகதத்துக்கு, இழந்த உற்சாகம் விரைவிலேயே திரும்பியது.



ஆனந்தனும், அவனது தொழிலில் முழுக் கவனம் வைத்ததால், அது வளர்ந்து விரிவாக்கத்துக்குத் தயாராக இருந்தது. சென்னையில் ஒரு கிளையைத் தொடங்கலாமா என்று ஆனந்தன் யோசித்துக் கொண்டிருந்த நேரம் அது.

இனிமேல், மகன் திருமணத்துக்குத் தடை விதிக்கமாட்டான் என்று மனதில் தோன்றிவிட, அதற்கான ஏற்பாடுகளை, மரகதம் செய்யத் தொடங்கினாள்.

மகனின் சம்மத்துடன்தான்.

வாழ்வில் மகிழ்ச்சியையும், நிம்மதியையும், தாயும் மகனும் சுகமாக உணரத் தொடங்கிய அப்போதுதான், திடுமென வீழ்ந்த இடி போல, எழிலரசி இறந்துவிட்டதாக, ஒரு மருத்தவ மையத்திலிருந்து ஆனந்தனுக்குச் செய்தி வந்தது.

மனதளவில் தங்கையை ஒரேடியாக ஒதுக்கி வைத்திருந்ததாலோ என்னவோ, ஒரு கணம், இது யாருக்கோ போக வேண்டிய தகவல் தப்பாக தனக்கு வந்துவிட்டது என்று கூட, ஆனந்தன் நினைத்து விட்டான்.

ஆனால், அடுத்த கணமே உடன் பிறந்தவளை இப்படி மறப்பதா என்று, அவனுக்கு மிகவும் அவமானமாகிப் போயிற்று. தன்னையே நொந்து கொண்டு, விவரம் கேட்டான்.

சம்பந்தமே இல்லாமல், பூனா அருகே இருந்தது, அந்த மருத்துவ மையம்.

அவனது குழப்பமும், திகைப்பும் புரிந்து, அவர்கள் ஃபேக்ஸில் அனுப்பிய விவரங்கள், படங்கள் சந்தேகத்துக்கே இடமில்லாமல், அது எழிலரசிதான் என்று நிரூபித்தன.

என்னதான் வெறுத்திருந்தாலும், பெற்றவள் ஆயிற்றே! விவரம் அறிந்ததும், தானாடாவிட்டாலும் சதையாடிவிட்டது.

"என்னடா சொல்கிறாய்?" என்ற தடுமாற்றத்துடன் சுவரைப் பிடித்துக்கொண்டு நின்றவளின் அருகே "அம்மா..." என்று மகன் விரைந்து செல்லுமுன் அவளே முயன்று சற்று சுதாரித்துக் கொண்டாள்.

"நிச்சயமாகத் தெரியுமா,தம்பி?"

"ஆமாம்மா. எல்லா விவரங்களும் இந்த மருத்துவமனையில் இருந்து அனுப்பியிருக்கிறார்கள். மித மிஞ்சிய போதை மருந்துகள். உடம்பில் பாதிப்பு ஏற்பட்டதும், அவளாகப் போய்ச் சேர்ந்திருக்கிறாள். அவளுக்குத் தெரியாவிட்டாலும், மருத்துவர்களுக்கு அவளது உடல்நிலை பற்றி முழுமையாகத் தெரிந்திருக்கும் அல்லவா? தேவைப்பட்டால் பொறுப்பேற்கக்கூடிய அடுத்த உறவு தெரியாமல் சேர்த்துக் கொள்ள முடியாது என்று விட்டார்களாம். நல்லவேளையாகக் கற்பனை முகவரி எதையும் கொடுக்காமல், என் பெயரையே கொடுத்திருக்கிறாள். இரண்டு நாட்கள் முன்னதாகவே என்னைக் கூப்பிடச் சொன்னார்களாம். கூப்பிட்டதாகவும், நான் வந்து கொண்டிருப்பதாகவும், பொய் சொல்லியிருக்கிறாள். இப்படிப் பட்டென்று அடங்கிப் போய்விடக் கூடும் என்று அவளே எதிர்பார்க்கவில்லை போல! எல்லாம் முடிந்து, என்னிடம் பேசிய பிறகுதான், நம்மிடம் அவள் ஒன்றுமே சொல்லவில்லை என்று மருத்துவமனை நிர்வாகத்துக்குப் புரிந்திருக்கிறது.. அம்மா... இப்போது என்ன செய்ய வேண்டும். உங்களுக்கு என்ன தோன்றினாலும், சொல்லுங்கள், அதன்படியே செய்வோம்" என்று, குரலில் கனிவுடன் கேட்டான் பிள்ளை.

எல்லா இடங்களிலும் மகள்கள், தாய்க்காகப் பார்ப்பார்கள் என்று சொல்வார்கள். மகளிடம் கிடைக்காதது, அவளுக்கு மகனிடம் கிடைத்திருக்கிறது!

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லையடா. ஒரு நல்ல குடும்பத்தில் நம் வயிற்றில் பிறந்து, சீராட்டி பாராட்டி வளர்த்த பெண், இப்படி எங்கேயோ அனாதையாகக் கிடந்து உயிரை விட்டிருக்கிறதே என்று கஷ்டமாக இருக்கிறது. ஆனால், அதையும் மீறிக்கொண்டு... ஒரு தாயாய் இருந்து கொண்டு நான் இதைச் சொல்லக் கூடாதுதான். ஆனால், உள்ளூர ஒரு நிம்மதியும் இருக்கிறது தம்பி. நம் பெண் இதற்கு மேல் எந்த அசிங்கத்துக்கும் ஆளாக மாட்டாள், நம்மையும் ஆளாக்க மாட்டாள் என்ற நிம்மதி. என்னதான் அவளைப் பற்றி



பேசாவிட்டாலும், உள்ளூர அந்தப் பயம் நமக்கு இருக்கத்தானே செய்தது? போப்பா. போய் அங்கே என்ன முறையில் கடைசிக் காரியங்களைச் செய்ய முடிகிறதோ, அந்த மாதிரி அங்கேயே செய்துவிட்டு, வந்துவிடும்மா" என்றாள் அன்னை.

"அம்மா, கடைசித் தரமாக அவளைப் பார்த்தோமில்லையே என்று அப்புறம் வருத்தமாக இருக்கக் கூடாதும்மா. அதனால்...." என்று தொடங்கியவன் வாக்கியத்தை முடிக்கும் முன்னரே, மரகதம் குறுக்கிட்டாள்.

"இல்லைப்பா. முன்பு கண்டகண்ட நிலையில் அவளைத் தூக்கிக் கொண்டு வருவாயே, அப்போதே அவள் பிறந்தபோது இருந்த அழகை நினைத்து வேதனையாக இருக்கும். இப்போது, உயிரே போயிருக்கிறது. அந்த அளவுக்கு ஆரோக்கியம் கெடுவது என்றால், முகம் என்ன நிலையில் இருக்கும்? இறுதியாக அந்தத் தோற்றம் என்னுள் நிலைபெற வேண்டாம். நீயே எதையேனும் செய்து முடித்துவிடு, கண்ணா" என்று கெஞ்சுவது போலக் கூறி முடித்தாள் தாய்.

அதற்கு மேல் மகனும், தாயை வற்புறுத்தவில்லை.

பூனா அருகே இருந்த அந்த மருத்துவ மையத்திற்கு சென்று, எழிலரசி விஷயமாகச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடித்துவிட்டு, அவளது நோய் பற்றி, மருத்துவமனையில் கொடுத்த சிலபல காகிதங்களோடு திரும்பி வந்து சேர்ந்தான்.

"எல்லாம் எழிலரசி தொடர்பான காகிதங்கள் அம்மா. அவளது நோய் என்ன, அது ஏன் வந்தது, எப்படி வளர்ந்தது, எப்படி முற்றியது... என்பன போன்ற விவரங்கள், துணிமணி மற்ற பொருட்களை அங்கேயே யாராவது ஏழைகளுக்குக் கொடுக்கச் சொல்லி, விட்டு வந்துவிட்டேன். இவைகளை மெல்லப் பார்த்துக் கொள்ளலாம், என்று கொண்டு வந்தேன்" என்று புத்தக அலமாரியின் அடித் தட்டில் போட்டு வைத்தான்.

தொடர்ந்து அன்றாட வேலைகளில் மனதைச்செலுத்திய அவனுக்கு, அலமாரி அடித்தட்டில் கிடந்த காகிதக் கட்டு அடியோடு

மறந்து போயிற்று.

அத்தோடு, சென்னைக் கிளைதொடங்கும் வேலையிலும் ஆனந்தன் வெகு மும்முரமாக இருந்தான். இரண்டு முறை சென்னை சென்று, அலுவலகம், தங்குமிடம் எல்லாம் பார்த்து ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பினான்.

இந்த விரிவுபடுத்தலை வெற்றிகரமாகச் செய்வதிலேயே அவனது முழுக் கவனமும் இருந்தது.

கூடவே, அப்படி அவன் அடுத்ததைத் தொடங்கும்போது, இங்குள்ள அலுவலகமும், எப்போதும் போல முழுத் திறனுடன் செயல்படுவதற்கான ஏற்பாடுகளையும், அவன் முழுமையாகத் திட்டமிட்டுச் செய்ய வேண்டியிருந்தது.

இதிலேயே முழுக் கவனத்துடன் இருந்தவனை, அன்று மரகதம் அவசரமாக அழைத்தாள்.

தாயின் குரலில் இருந்த படபடப்பை உணர்ந்து, மற்ற வேலைகளை நிர்வாகியிடம் ஒப்படைத்துவிட்டு, ஆனந்தன் வீட்டுக்கு விரைந்தான்.

விரைந்து வந்த மகனிடம் மரகதம், தன் மகளது மருத்துவமனை அறிக்கையின் ஒரு பகுதியை எடுத்துக் காட்டினாள்.

அந்த வீட்டுப்பெண்ணாகப் பிறந்து, வளர்ந்து, மறைந்தும் போன எழிலரசி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய் என்று அந்த அறிக்கை சொன்னது!

அந்தக் குழந்தை ஒரு பெண் மகவு என்று கூறிய அறிக்கை, அதற்கு மேல், அந்தச் சிசுவைப் பற்றிய விவரம் எதையும் தெரிவிக்கவில்லை.

அந்தக் குழந்தையின் கதி என்ன? இப்போது அது எங்கே இருக்கிறது?





# பேசும் பொற்சித்திரமே 2

மகன் அறிக்கையைப் படித்து முடிக்கும் வரையும் பொறுமையை இழுத்துப் பிடிப்பது, மரகதத்துக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

பெரிய கண்களும் செப்பு வாயுமாக முகம் பார்த்துச் சிரித்த அந்த நாள் மகள் நினைவு வர, அவளைப் போலவே ஒரு சிறு குழந்தையைக் கற்பனையில் உருவாக்கி விட்டிருந்த அந்தத் தாய்க்கு, வேறு எந்த நினைவுமே மனதில் தோன்ற மறுத்தது.

அவளுக்கு ஒரு பேரக் குழந்தை!

மெத்து மெத்தென்று ஓர் அழகிய குழந்தையைக் கையில் ஏந்தியிருப்பது போல, ஓர் உணர்வு அவளைத் தாக்க, மரகதம் தன்னை மறந்து போனாள்.

இடையில், உள்ள பக்கங்களை ஒரு நோட்டமிட்டுவிட்டு, தாயை நிமிர்ந்து பார்த்தான்.

“குழந்தையைப் பற்றி, மருத்துவமனையில் ஒன்றுமே சொல்லவில்லையேம்மா...”

“அதுதான் எனக்கும் புரியவில்லை தம்பி. அதெப்படி அந்தக் குழந்தையைப் பற்றி எதுவுமே சொல்லாமல் விட்டு விட்டார்கள்? இவளது மருத்துவ அறிக்கையில், அது தேவையில்லை என்று எண்ணினார்களா? அல்லது... அனாதை என்று யாருக்காவது கொடுத்திருப்பார்களா? ஆனால், நாம் அப்படி ஒன்றும் அக்கறையற்று விட்டுவிட மாட்டோம் என்று, அவர்களுக்குத் தெரிய வேண்டாமா?...” என்று படபடத்த தாயார் மகன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் “என்ன தம்பி, விட மாட்டோம்தானே?” என்று ஏக்கமும் வருத்தமுமான குரலில், மெல்லக்கேட்டாள்.

“அது... அதை அப்புறமாக முடிவு செய்வோம். ஆனால், அந்தக் குழந்தை, மருத்துவமனைக்கு வந்ததாகவோ, அங்கே இருந்ததாகவோ தகவல் இல்லையம்மா. குழந்தை அங்கே இருந்திருந்தால், கூட்டிப் போங்கள் என்று தலையில் கட்டி

அனுப்பியிருப்பார்களே! அனாவசியமாக, ஒரு சிசுவின் செலவை, அவர்கள் ஏன் செய்யப் போகிறார்கள்? அவர்கள் தந்த செலவுக் கணக்கை மேலோடமாகத்தான் பார்த்தேன். ஆனால், அதில் எந்த இடத்திலும், ஒரு குழந்தைக்கான செலவாகக் குறிப்பே இல்லையே. ஒருவேளை..." என்று மகன் இடையில் பேச்சை நிறுத்தவும், மரகதம் பதறிப் போனாள்.

"என்னடா தம்பி, நீ என்ன சொல்லுகிறாய்? எழிலுடைய மகள், இப்போது உயிரோடேயே இல்லை என்றா? ஐயோ! என் பேத்தி..." என்று பெற்றவள் கலங்கித் தவிக்கவும், மகன் இடையிட்டு பேசினான்.

"என்னம்மா, யோசியாமல் என்ன பதட்டம், இது? குழந்தையின் செலவு பற்றிக் குறிப்பிடவில்லை என்றால், அது இறந்துதான் போயிருக்க வேண்டுமா? தன் நிலைமையை உணர்ந்து, எழிலே மகளை யாரிடமாவது கொடுத்து வளர்க்கச் சொல்லியிருக்கக் கூடாதா? அதற்கு ஒரு தகப்பனும் இருப்பான்தானே? தன் உடல் நிலையை எண்ணி, பிள்ளையை அதன் தந்தையிடமே அவள் கொடுத்திருக்கலாமே! எழில் என்றால், உங்களுக்கு மிக மோசமான விஷயங்கள்தான் நினைவு வருகின்றன!" என்றான் குரலில் சிறு கண்டனம் தொனிக்க.

"நல்லதை நினைப்பதற்கு, அவள் என்றைக்கு இடம் கொடுத்தாள்?" என்று மகன் பேச்சை ஒப்புகிறபோதே, மரகதத்துக்கு இன்னொரு சந்தேகம் உண்டாயிற்று.

"அப்படி அடுத்தவரிடம் விடுவது என்றால், நம்மிடம்தானே தர வேண்டும்? அவள் குழந்தையை நம்மை விட யார் நன்றாகக் கவனிக்க முடியும்? நீ சொல்லுகிற தகப்பன் பற்றியெல்லாம் எனக்கு நம்பிக்கையே இல்லை, தம்பி. இவளோடு சேர்ந்து கூத்தடித்தவன்! அவனிடம் போய்ப் பிள்ளையை எப்படி விடுவாள்?" என்று கேட்டாள்.

விட்டு வந்திருக்கும் வேலையை நினைக்கையில், ஆனந்தன் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டுதான் பேச



வேண்டியிருந்தது. ஆனால் கலங்கித் தவிப்பவள் அவனுடைய தாய்! பெண்ணை விடத் துணிந்தவளுக்குப் பேத்தியை பற்றிய கவலை, மிகவும் பெரிதாக இருந்தது. இல்லையென்றால், இந்தக் கேள்வி கேட்கமாட்டாள்.

இரக்கத்துடன் தாயைப் பார்த்து "என்றைக்கம்மா எழில், உங்களையும் என்னையும், தனக்கு நல்லது செய்கிறவர்களாகப் பார்த்திருக்கிறாள்? கொஞ்சமாவது, அந்த எண்ணம் இருந்திருந்தால், மருத்துவமனையில் சேரும்போதே, நமக்குச் சொல்லியிருக்க மாட்டாளா? சின்னத் தாத்தா சொத்தை அவளுக்குக் கொடுத்ததால், நமக்கு அவளிடம் பொறாமை, வெறுப்பு என்ற கருத்து அவளுக்கு. தன்னையே பிடிக்காதவர்களை மகளின் பாதுகாவலர்களாக எப்படி எண்ணுவாள்.? அத்தோடு, அவள் யாரிடம் குழந்தையைக் கொடுத்திருந்தாலும், அது தாயான அவளது உரிமை. அதில் நாம் தலையிட முடியாதும்மா. அதனால், அவள் பேச்சை விடுங்கள். விட்டுவிட்டு, அவளை மறக்க முயற்சி செய்யுங்கள்" என்று முடித்தான் அவன்.

மகனின் பேச்சு, தாயின் மூளைக்குச் சரியாகவே பட்டது.

ஆனால், மனது மூளையைப் போல யோசிப்பது இல்லையே!

தன் பேரக் குழந்தையைப் பார்த்தே தீர வேண்டும் போல, அவள் மனம் அடித்துக் கொண்டது. சின்னக்குழந்தை! தன் தேவையை எடுத்துச் சொல்லக் கூடத் தெரியாத சிசு! பெற்ற தாய்க்கு பிள்ளை சொல்லாமலே, அதன் தேவை, தானாகத் தெரியும்!

ஆனால், இது தாயில்லாக் குழந்தை ஆயிற்றே! பேசும் வயதும் ஆகவில்லை!

பேத்தியை நினைக்க நினைக்க, மரகதத்தால், அதை விட முடியவில்லை. நினைக்காமல் ஒதுக்கவும், சற்றும் இயலவில்லை.

எனவே, மகனைப் பார்த்து "நீ சொல்வதெல்லாம் ரொம்பவும் சரியாகத்தான் தெரிகிறது. ஆனால், இந்த ஒன்றை யோசித்துப் பார். என் பேத்தியை, எழில் ஒப்படைத்திருக்கும் ஆளும், அவளைப் போல ஒருவராகத்தானே, இருப்பார்கள்? அவர்களிடம் வளரும்

பிள்ளை, பிற்காலத்தில் எப்படி இருக்கும்? உன் தங்கை போல இன்னொரு ஜீவன் உருவாக விடக் கூடாதும்மா. அத்தோடு, அத்தோடு..." என்றவளுக்கு மேலே பேச முடியாமல் கண்ணீர் முட்டிக்கொண்டு வந்து, குரலும் தழுதழுத்தது.

"அம்மா, ப்ளீஸ்!" என்றான் மகன். "உங்களுக்கென்ன, எழில் மகளைப் பற்றி அறிந்தாக வேண்டும். அவ்வளவுதானே? ஏற்பாடு செய்கிறேன். நீங்கள், இந்தக் கண்ணீர், கிண்ணீர் எல்லாம் இல்லாமல், சாதாரணமாக இருக்க முயற்சி செய்யுங்கள்" என்றுரைத்துக் கிளம்பினான்.

என்ன ஏற்பாடு என்று, பிள்ளையைக்கேட்க, மரகதத்துக்கு ஆசைதான். ஆனால், அவனுக்கு எரிச்சல் மூட்டி விடக்கூடாதே என்று, ஆவலை அடக்கிக்கொண்டு பேசாதிருந்தாள்.

அவள் மகன் தானாகவே செய்கிறவன், அவனுக்குத் தார்க்கோல் போடக்கூடாது!

இரண்டு வாரங்கள் கழித்து, ஆனந்தன் தாயிடம் வந்து அமர்ந்தான்.

கையில் இருந்த வாரப் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, மரகதம் கேள்வியாய் மகனைப் பார்த்தாள்.

பிள்ளை நேரடியாக விஷயத்துக்கு வந்தான் "அம்மா, எழிலுடைய குழந்தை இருக்குமிடம் தெரிந்துவிட்டது. பெற்ற தகப்பனிடம்தான் இருக்கிறது. அவன்தான் வளர்க்கிறான். இன்னுமொன்று, எழிலின் நடவடிக்கை பிடிக்காமல், இருவருக்கும் அடிக்கடி தகராறு வருமாம். இதற்கு மேல் ஒத்துவராது என்று இருவருமாகச் சேர்ந்து முடிவெடுத்துப் பிரிந்திருக்கிறார்கள். பிள்ளையை, எழிலேதான், அவனிடம் விட்டுவிட்டுத் தான் மட்டுமாக கிளம்பிவிட்டாளாம்! தாயும் சம்மதித்துக் கொடுத்ததினால், அவனை விட அதிக உரிமை, நமக்கு குழந்தை மேல் கிடையாது. பெற்றவன் பார்த்துக் கொள்வான் என்று நிம்மதியாக இருங்கள்" என்று எழுந்தான்.

அத்தோடு விஷயம் முடிந்தது என்பதுபோல, வேறு சிந்தனையோடு செல்லும் மகனை, மரகதம் ஏக்கத்தோடு விழி



உயர்த்திப் பார்த்தாள்.

அந்தக் குடியிருப்புக்கு, அந்தக் கார் புதியது. அந்த அடுக்கு மாடி ஃப்ளாட்டுகளில் வசித்தோர் பெரிய கார்களைப் பார்த்தது இல்லை என்று சொல்ல முடியாது. கடைசி வீட்டு உரிமையாளர், பென்சே வைத்திருக்கிறார். ஸ்கோடா, ஆடி எல்லாமே இருந்தன.

அதனால், பெரிய கார் ஒன்றும் அங்கே பிரமாதமில்லை. ஆனால், இந்தக் கார், உள்ளே வந்ததுமே எல்லோர் கவனத்தையும் கவர்ந்திருந்தது.

காரணம், அதை நிறுத்துவதற்காக இடத்தை காலி செய்து தருமாறு, ஹார்ன் மூலம் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

செய்தியும் வேறு யாருக்கும் அல்ல. பக்கவாட்டு பால்கனியில், பாப்பா துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருந்த சுபாங்கிக்குத்தான்.

ஆனால், இவனென்ன, இந்த இடத்தைக் கேட்பது?

அந்தக் கார்பார்க்கிங் உரிமை, அவளது வீட்டுக்கு நேர் எதிர் ஃப்ளாட்டின் சொந்தக்காரர்களதுதான். அவர்கள் இந்த நாட்டிலேயே இல்லாமல் வெளிநாடு சென்றதோடு, ஃப்ளாட்டை விற்பதற்கும் ஏற்பாடு செய்து விட்டிருந்தார்கள். கிட்டத்தட்டப் பேச்சு வார்த்தை முடிந்து, அதை வாங்கப் போவதும், கல்லூரியில் சுபாங்கியோடு பயின்ற நர்மதாவுடைய குடும்பம் என்றும், சுபாங்கிக்குத் தெரியும்.

கூடவே பக்கத்தில் அந்தப் பார்க்கிங் இடம் காலியாகத்தானே கிடக்கிறது என்று, சுபாங்கி, அந்த இடத்தில் தன் ஸ்கூட்டியை நிறுத்தி வைத்திருந்தாள்.

இப்போது எவனோ வந்து 'ஙைஙை' என்கிறானே! கொஞ்ச நேரம் முயற்சி செய்து பார்த்துவிட்டு, தானாகப் போய் விடுவான் என்று எண்ணித் தன் வேலையில் முனைந்தாள் அவள்.

பொறுத்துப் பார்த்தும், கார்க்காரன் விடுவதாக இல்லை.

எரிச்சலுற்றவளாக, கையில் எடுத்த, அடுத்த துணியை

வாளிக்குள்ளேயே போட்டுவிட்டு, விடுவிடுவென்று வேகமாகப் படியிறங்கிப் போனாள், சுபாங்கி.

அந்த ஆளை, நறுக்கென நாலு வார்த்தை கேட்டே ஆக வேண்டும்! என்ன? மனிதர்கள் வேடிக்கைக்காகவா, அவரவர் வீட்டில் முடங்கிக் கிடப்பார்கள்? ஏதாவது வேலை இருக்கும் என்று போகாமல், விடாமல், ஒப்பாரி வைக்கிறானே!

விடுமுறை நாள், எத்தனையோ இடங்கள் காலியாகக் கிடக்கின்றன. வந்த வேலை முடியும்வரை, சற்று நேரம் எந்த இடத்திலாவது நிறுத்திவிட்டுப்போக வேண்டியதுதானே, அதை விட்டு, இந்த இடம்தான் வேண்டும் என்று என்ன அழிச்சாட்டியம் இது?

வேகமாக வந்த சுபாங்கியைப் பார்த்ததும் கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்த வாட்ச்மேனின் முகம் சட்டென மலர்ந்தது "இதோ பாப்பாவே வந்திட்டதே! அம்மா, இந்தய்யா காரை நிறுத்தணுமாம். உங்க வண்டியை எடுக்கச் சொல்கிறாங்க" என்று பிரச்சினையின் விவரம் தெரிவித்தான்.

சுபாங்கிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

லட்சுமி ஆன்ட்டி வெளிநாடு சென்றதில் இருந்து, மூன்று மாதங்களுக்கும் மேலாக, அவள்தான் அந்த இடத்தில் ஸ்கூட்டியை நிறுத்திக் கொண்டிருக்கிறாள். ஆன்ட்டியின் அனுமதியோடுதான். அலுவலகத்துக்குப் போக, வர அவர்களே ஏற்பாடு செய்வார்கள் என்பதால், நாள் முழுவதுமே, அவளது ஸ்கூட்டி அங்கேதான் நிற்கும். கிட்டத்தட்ட சொந்த இடம் போல!

இவன் யார் புதியவன், அவளை இடம் பெயர்ந்து போகச் சொல்வதற்கு?

அதிலும் துரை காரிலேயே வேரோடிவிட்டது போலக் காரிலிருந்து இறங்கக்கூட இல்லாமல், காவலாளைக் கூப்பிட்டுப்பேசச் சொல்லுகிறான்!

'விசிட்டர்'கள் வண்டிகளை உள்ளே கொண்டு வருவதே கூடாது. வாசலிலேயே எழுதிப் போட்டிருப்பதை மதியாமல் அத்து மீறி



உள்ளே வந்ததும் இல்லாமல், என்ன பெரிய அலட்டல்?

அவளும் வாட்ச்மேனிடமே பதில் சொன்னாள் "வாட்ச்மேன். சற்றி நிறைய இடங்கள் காலியாகக் கிடக்கின்றன. அதில் எங்கேயாவது நிறுத்திக்கொண்டு, வந்த வேலை முடிந்ததும் காரை எடுத்துப் போகச் சொல்லுங்கள். இன்னொரு தரம் வருவதானால், இந்தக் குடியிருப்பு விதிப்படி, காரை வெளியிலேயே நிறுத்திவிட்டு வரவேண்டும் என்று ஞாபகமாகச் சொல்லி அனுப்புங்கள்" என்று சிறு ஏளனம் விரவிய குரலில் கூறிவிட்டு, அலட்சியமாக உள்ளே செல்லத் திரும்பினாள்.

ஆனால், "என் இடத்தை விட்டு, நான் ஏன் என் வண்டியை வெளியே நிறுத்த வேண்டும்? தகராறு பண்ணாமல், முதலில் ஸ்கூட்டியை எடுக்கச் சொல்லுங்கள், வாட்ச்மேன். அவர்களாக எடுத்துவிட்டால் நல்லது. நானாக நகர்த்தினால், வண்டி வேறே மாதிரி ஆகிவிடும்" என்று அழுத்தமான குரலில் கூறி கார்க் கதவை திறந்து இறங்கினான், அந்தக் கார்க்காரன்.

வண்டி வேறே மாதிரி ஆவது என்றால், உடைத்து விடுவானாமா? என்ன திமிர்!

"என் வண்டியை தொட்டால் தெரியும்!"என்று பதிலுக்குச் சிலுப்பியவளுக்கு அவன் 'என் இடம்' என்றது இன்னும் ஆத்திரமூட்டியது!

அவளை என்ன, அக்கம் பக்கம் ஒன்றும் தெரியாத வெறும் கூட்டுப் புழு என்று எண்ணினானா? அல்லது, பந்தாவாக ஒரு பெரிய காரில் வந்து இறங்கினால், ஏதோ தேவதா அம்சம் என்று எண்ணி, அவன் சொல்வதை எல்லாம் ஒத்துக்கொண்டு சலாம் போடுவாள் என்று நினைப்பா?

அவனை விழி உயர்த்திப் பார்த்துப் பேச நேர்ந்தது. காரணமற்று சினத்தை இன்னும் கூட்ட "அத்தோடு, பாருங்கள் மிஸ்டர், இந்த இடம், இடத்துக்கு உரிய ஃப்ளாட் எல்லாம் லட்சுமி ஆன்ட்டியுடையது என்று எனக்குத் தெரியும்" என்றாள் அவள் எடுப்பாக.

"அது சரித்திரம்" என்றான் அவன் சுருக்கமாக.

விற்றாகிவிட்டதா என்ற சிறு துணுக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் "இப்போது நர்மதா அப்பா வாங்குகிறார் என்று தெரியும்" என்றாள் கெத்தாக.

எப்படியும் இது உன்னதில்லை என்பதை நிலைநாட்டிவிட வேண்டும் என்பது அவளுக்கு. அடுத்தவர் சொத்தில் அவன் அதிகாரம் காட்ட முடியாதே!

ஆனால் "நீ சொல்கிற நர்மதாவுடைய தந்தைதான் மிஸ்டர் நாராயணன் என்று நினைக்கிறேன். அவர் இந்த ஃப்ளாட்டை வாங்கவில்லை. அடுத்த தெருவில், கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு ஃப்ளாட்டைத்தான் வாங்குகிறாராம். வேண்டுமானால், தேவாசாரை நேரிலேயே பார்த்து விசாரித்துக் கொள்! என்ன இப்போதாவது சந்தேகங்கள் தீர்ந்தனவா? இனியேனும்..." என்று வந்தவன் சொல்லி முடித்தபோது, ஒருகணம் சுபாங்கி திகைத்து நின்றாள்.

நர்மதா அப்பா, அன்று அவ்வளவு உறுதியாகச் சொன்னாரே! நர்மதாவும், அதையே சொல்லித்தான் குதித்தாள் "பார், பார் உன் எதிரேயே வந்து, உன்னை ஓயாது தொணதொணத்து, போரடிக்கப் போகிறேன்!" என்று எவ்வளவு குதூகலமாகக் கூறினாள்.

ஆனால் இவன்.... 'என் இடம்' என்று எவ்வளவு உறுதியாகக் கூறுகிறான்!

இவன் பொய் சொல்லத் தேவையில்லை. அத்தோடு, நாராயணன் என்ற பெயர் அவனுக்குத் தெரிந்திருக்கிறது என்றால்... இப்போது வெற்றிகரமாக பின் வாங்க வேண்டியது, அவள்தான்.

ஆனால், அந்தக் கார்க்காரனை விரட்டிவிடும் வேகத்தில் ஓடி வந்தவள், ஸ்கூட்டியின் சாவியை எடுத்து வரவில்லையே!

முகம் கன்றிச் சிவக்க, ஒரு தெளிவற்ற "சாரி" யுடன் ஸ்கூட்டியை பூட்டி திறவாமலே மெதுவாக நகர்த்த முயன்றால், உள்ளிருந்த பரபரப்பில், அது இலகுவாக நகர்த்த வராமல் சிக்கியது. பின் பாகத்தைத் தூக்கி வைக்கவும் இயலாமல், வண்டி யானைக் கனம் கனத்தது.



வெட்கத்தை விட்டு, வாயைத் திறந்து ஒழுங்காக சாரி சொல்லிவிட்டு சாவியை எடுத்து வருவது தவிர வேறு வழியில்லை என்று அவள் அவமானக் குன்றலுடன் முடிவு செய்தபோது, இன்னும் இருகரங்கள் ஸ்கூட்டியை எளிதாகத் தூக்கி, காரின் வழியிலிருந்து அகற்றி வைத்தன.

"தாங்க்ஸ்" என்றாள் அவள் எழும்பாத குரலில்.

"அதை நான்தான் சொல்லவேண்டும். மேற்கொண்டு அனாவசியமாகப் பிரச்சினை பண்ணாமல் உடனே விலகிக் கொண்டதற்கு" என்று இலகுவாகக் கூறியவாறே, காரில் ஏறிக் கொண்டான் அவன்.

என் வேலை முடிந்தது, 'போய்த் தொலை என்கிறானா?'

சும்மாவே குன்றிப் போயிருந்தவளுக்கு, இன்னமும் முகம் கன்றியது.

சே, என்ன கேவலம்! இவன், அந்த ஃப்ளாட்டை வாங்கியிருப்பது தெரியாமல், என்னவெல்லாம் பேசிவிட்டாள்! அரைவேக்காடு என்று எண்ணியிருப்பானோ?

ஏதேதோ யோசித்தபடியே திரும்பிப் போனவளுக்கு, உள்ளூர ஒன்று உறுத்தியது.

அவ்வளவு உறுதியாகச் சொல்லிவிட்டு, நர்மதாவுடைய வீட்டில், இந்த ஃப்ளாட்டை ஏன் வாங்கவில்லை?

அது மட்டுமல்ல. இனி, இந்தச் சண்டைக்காரன், அவளுக்கு எதிர் வீட்டுக்காரன்! வரப்போகக் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கப் போகிறவன்! என்ன கெட்ட காலம்!

பக்கத்தில் வைத்திருந்த செல்ஃபோனை எடுத்து, நர்மதாவைத் தொடர்பு கொண்டாள்.

வகுப்புத்தோழி செல்லை எடுத்ததும், "என்னம்மா, நல்ல நாள் பார்த்துப்பால் காய்ச்ச வரப் போகிறீர்களாமே! கேள்விப் பட்டேன்!" என்றாள் குரலில் கடுப்புடன்.

"ஏய்... கோபப்படாதேய்யா! என் மேல் தப்பே கிடையாதுப்பா! பத்திரம் முடிக்கப் போகிற சமயம், எங்கள் வக்கீலே வந்து,

அப்பாவிடம் பேசுகிறார். இரண்டு தெரு தள்ளி, இதே விலையில், இதைவிட நூறு சதுர அடி பெரிய வீடு கிடைக்கிறது. வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்! மெய்யாகவே, ஹால் எவ்வளவு பெரிது தெரியுமா? வீட்டு விசேஷங்களை, அதிலேயே நடத்திக் கொள்ளலாம்! எப்படி குறைத்துப் போட்டாலும், பத்து லட்சம் அதிகம் பெறும் இதற்கு அதை மாற்றி வாங்கிக் கொண்டால், அப்படியே லாபம் என்று சொன்னார். இது, புதுவீடு வேறு. தப்புதண்டா, கெட்டது எதுவும் நடந்திருக்க வாய்ப்பே இல்லை. அப்பா வாஸ்து பார்ப்பதிலும், பிரமாதமாக இருந்தது. சரிதான் என்று பெரியதற்கே மாறிவிட்டோம். எல்லாம் என்ன அவசரம் என்கிறாய்! எதிரே நீ இல்லையே என்று, அதுதான் ஒரே ஒரு வருத்தம்! உனக்கு ஃபோன் பண்ணிச் சொல்லக்கூட நேரமே இல்லைப்பா! ரொம்ப சாரி!" என்று முடித்தாள் அவள்.

இரண்டில் ஒன்று போனால், மீதி ஒன்று என்று சொல்லப் பிரமாத மூளை தேவையில்லை.

நர்மதாவுடைய தந்தை இப்போது வாங்கியிருக்கும் ஃப்ளாட், கீழே தகராறு செய்த, அந்தக் காராளனுடையது. அல்லது, அவனுக்குச் சொந்தமாகியிருக்க வேண்டியது. ஆனால், பத்து லட்சம் ரூபாய் அதிகப் பெறுமானம் உள்ள அந்த வீட்டை அவருக்கு விட்டுக் கொடுத்துவிட்டு, இவன் இந்த வீட்டை வாங்கிக்கொண்டு, இங்கே வந்திருக்கிறான்! அதாவது, பத்து லட்சம் ரூபாய் நஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று இந்த ஃப்ளாட்டை வாங்கிக்கொண்டு, இங்கே வசிக்க வந்திருக்கிறான்!

ஏன்? என்ன காரணம்? நிச்சயமாக ஏதோ இருக்கிறது!

ஏனெனில், ஆதாயம் இல்லாமல் யாரும், பத்து லட்சரூபாயைத் தூக்கி வீச மாட்டார்கள்!

ஒருவேளை யாரும் தீவிரவாதியோ, யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழ இங்கே வந்திருக்கிறானோ என்ற ஐயம், சுபாங்கிக்கு வந்தது. திகைத்து நிமிரு முன்பே, அந்த எண்ணம் காணாமலும் போனது.



ஏனெனில், இப்படி வெளிப்படையாக இவ்வளவு பணத்தை நஷ்டப்படுத்திக் கொண்டு, எந்தத் தீவிரவாதியும் வீடு வாங்க மாட்டான்... ரொம்ப வெளிப்படையாக இல்லை என்றாலும், நாராயணன் சாருக்கு, விஷயம் தெரியும்தானே? இதை, எந்தத் தீவிரவாதியும் விரும்பமாட்டான்!

சற்று நேரம் உபயோகமற்று யோசித்துவிட்டு, சுபாங்கி அலுப்புடன் எழுந்தாள்.

அனேகமாகத் நாராயணன் அங்கிளைப் போல இவனும், வாஸ்து பைத்தியமாக இருந்து, அவனது பிறந்த நாளுக்கு, இந்த ஃப்ளாட்தான் சரி என்பதால், நஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று இங்கே வந்திருக்கிறானோ என்று நினைத்தால், அதுவும் சரியாக வராமல் இடையில் இடித்தது.

அவ்வளவு வாஸ்து பார்க்கிறவன், அடுத்த தெரு ஃப்ளாட்டுக்கும் முதலிலேயே பார்த்திருப்பான்தானே? அத்தோடு, தேவா அங்கிளுக்கு இரண்டு இடங்களும் பொருத்தம் என்றால், இவனுக்கும் அப்படித்தானே இருக்க வேண்டும்?

என்னவோ, எதிர் ஃப்ளாட்காரன் விஷயத்தில் எதுவும் சரியாகத் தெரியவில்லை. எதற்கும், அவனிடம் சற்று அதிகப்படிக் கவனத்துடனேயே இருக்க வேண்டும். எப்படியும், இன்னும் சற்று நேரத்தில், தடுப்பூசியைப் போட்டுக்கொண்டு, குழந்தையோடு அம்மா வந்து விடுவார்கள். அதற்குள், அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றது போலக் குக்கரில் சாதத்துக்கு வைக்க வேண்டும்.

மாடிக்குச் செல்லும்போது பூட்டிய கதவைத் திறக்கையில், முதுகில் ஏதோ குத்துவது போன்ற உணர்வு அவளுக்கு

திரும்பிப் பார்த்தால் யாருமில்லை.

எதிர் வீடு காலியாகக் கிடந்தே பழகிவிட்டதால், இப்போது ஆள் வந்துவிட்டது என்ற உணர்வே உறுத்துகிறது என்று, தனக்குத்தானே ஒரு காரணம் சொல்லிக்கொண்டே உள்ளே போய்க் கதவைச் சாத்தினாள் அவள்.

சும்மாவே வீட்டில் ஆயிரம் பிரச்சினைகள்.

தடுப்பூசி போட்டுக் கொண்டு வந்தால், பாப்பா வேறு சும்மா அழும்! அதற்கு மேல் அப்பா கத்துவார். அம்மா அழுவார்கள். அண்ணனைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

இத்தனைக்கும் மேல் நேர் எதிர் வீட்டில் இந்தச் சண்டைக்காரன் வேறு குடிவர வேண்டுமா என்று எரிச்சலுடன் எண்ணும்போதே, அவன் அலட்சியமாக விட்டுக் கொடுத்த அந்தப் பத்து லட்சம் பணக்கணக்கு. சுபாங்கியை மருட்டியது. நிச்சயமாக, இதில் கிரிமினல்த்தனமாக ஏதோ இருக்கிறது!

இந்த மர்ம எதிர் வீட்டுக்காரனை, வீட்டுப் பக்கம் வரவே விடக்கூடாது!



# பேசும் பொற்சித்திரமே 3

எதிர்வீட்டுக்காரனிடம் இருந்து, முடிந்தவரை விலகியே இருக்க வேண்டும் என்று சுபாங்கி முடிவு செய்திருக்க, அது தெரியாமல் மறுநாள் காலையிலேயே, பக்கத்தில் தான் குடி வந்திருப்பதை, அந்தக் குடும்பத்துடைய முக்கியமான அங்கத்தினர்களுக்கு, அவன் தெரிவித்துக் கொண்டான்.

காலை வேளையில், பத்திரிகையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, கடைசி எழுத்து வரை படித்து முடிப்பது, கணபதியின் வழக்கம். அந்த நேரத்தில், அவரை யாரும் தொல்லை செய்வது இல்லை. எப்போதுமே பத்திரிகை படிக்கும்போது யாரும் குறுக்கிட்டால் அப்படியே மூடு கெட்டு, நாள் முழுதும் உம்மென்று இருப்பார். சும்மாவே மூடு கெட்டே இருக்கும் இப்போதோ, கண்டபடி கத்தத் தொடங்கி விடுவார்.

எனவே, யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்கவும், அடுப்பை அணைத்துவிட்டே, செந்திரு ஓடோடி வந்தாள்.

ஆனால், திறந்திருந்த கதவைச் சும்மா ஒரு முறைமைக்குத் தட்டிய ஆனந்தன் வீட்டினுள்ளேயே வந்து விட்டிருந்தான். கையில் பழங்கள் ஒரு ஸ்வீட் பாக்ஸ் பெட்டியுடன் கூடிய தட்டுடன்.



பத்திரிகையில் இருந்து தலையைத் தூக்கிக் கணபதி கேள்வியாக நோக்க, செந்திரு "நீங்க..." என்று வினவ, "வணக்கம் சார்" என்று இளையவன், வீட்டுத் தலைவரைப் பார்த்தே பதில் சொன்னான்.

"சார், நான் எதிர் ஃப்ளாட்டுக்கு குடி வந்திருக்கிறேன். பெயர் ஆனந்தன். அம்மாவும் வர முடிந்திருந்தால், முறைப்படி அழைத்துப் பாலைக் காய்ச்சிச் சுற்றிலும் எல்லோருக்கும் கொடுத்திருப்பார்கள். எனக்கு அதெல்லாம் சரியாகத் தெரியாது. அதனால், எதிர்காலம் நல்ல நட்பை ஏற்படுத்தட்டும் என்று பழங்கள், இனிப்புடன் உங்களிடம் வந்தேன். தயவு செய்து, எடுத்துக் கொள்ள வேண்டும், ஆன்ட்டி" என்று வினயமாகக் கூறித் தட்டை டீபாய் மீது வைத்தான்.

முகம் மலர்ந்துவிட்டபோதும், செந்திரு கணவன் முகத்தைச் சம்மதத்துக்காகப் பார்த்தாள். அங்கே கடுப்பைக் காணாததே, அவளுக்கு ஆறுதல்!

மேலும் நிம்மதியூட்டும் விதமாகத்தலையசைத்துவிட்டு "முதலில் உட்காருங்கள். எதிர் வீடு என்கிறீர்கள். போக வர, அப்படிப் பார்க்க வேண்டியிருக்கும். எங்கள் வீட்டுக் காஃபி ரொம்ப நன்றாக இருக்கும். சாருக்கு ஒரு கப் கொண்டு வந்து கொடும்மா" என்றார் கணபதி மனைவியிடம்.

"சார் எல்லாம் வேண்டாம், சும்மா ஆனந்தன் என்றால் போதும்" என்றான் அவன் வினயமாக.

"உட்கார்ந்துபேசிக் கொண்டிருங்கள். இதோ இரண்டே நிமிடத்தில் காஃபி போட்டுத் தருகிறேன்" என்று சமையல் அறைக்குள் விரைந்தாள் செந்திரு.

வேற்றுகுரல் கேட்கவும், அறையின் வாயிலருகே வந்து கவனித்த சுபாங்கியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. உள்புற கதவின் வழியே சமையலறையை அடைந்தவள், ஆத்திரத்துடன் தாயிடம் சீறினாள்.

டீபாயின் பெரும் பகுதியை பழத்தட்டு நிரப்ப, மீதி இடத்தில் சில புத்தகங்கள் இருந்தன.

அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்ட ஆனந்தன், ஹாலின் உள்

மூலையில் இருந்து 'ட' வடிவில் உள்ளடங்கி இருந்த இடத்தில், சாப்பாடு மேஜை கிடப்பதைக் கண்டதும், எழுந்தான். பழத்தட்டை கையில் தூக்கி, 'இதை அங்கே கொண்டு வைத்து விடுகிறேன் சார், மேடம் காஃபியை வைக்க வசதியாக இருக்கும்" என்றுவிட்டுத் தட்டை அங்கே கொண்டு போய் வைத்தான்.

கூடவே அடுத்திருந்த சமையல் அறைக்குள் நடந்த வாக்குவாதமும், வேண்டாமலே அவனது காதில் விழுந்தது.

"...சும்மா இருடி, புதிதாகக் குடி வந்திருக்கிறான். அக்கம் பக்கம் ஆட்கள் வேண்டும் என்று இனிப்பு வாங்கி வந்து தருகிறான். இதில் என்ன குறையைக் கண்டாய்? எனக்கென்னமோ நல்ல குணமாகத்தான் தெரிகிறது"என்றது, காஃபி போடச் சென்ற திருமதி கணபதியின் குரல் என்பது நன்கு தெரிந்தது.

"இனிப்பைக் கொண்டு வந்து நீட்டிவிட்டால், நல்லவனாமா? அந்த இனிப்பிலேயே மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துத் திருடுகிறவர்கள் பெருகிவிட்ட காலம் இது. யாரையும் சட்டென்று நம்பக் கூடாதும்மா. இந்த ஆள், எதிர் வீட்டை வாங்கி வந்து உட்கார்ந்திருக்கிறான், சரிதான். ஆனால் உள்ளே வந்தால் நம் வீடு முழுவதையும் நோட்டமிடுகிறானே..."

மேலே நில்லாமல் திரும்பிவிட்டான் அவன்.

முதல்நாள் 'பார்க்கிங்' இடத்துக்காகத் தகராறு செய்தவள்! போகிறது என்று விட்டுத் தொலைத்திருக்க வேண்டுமோ? அனாவசியமாக இங்கே ஒரு விரோதியை உருவாக்கிக் கொண்டானா?

கெட்டிக்காரியாக வேறு இருப்பாள் போல! அவனது பார்வை வரை கவனித்திருக்கிறாளே!

ஆனால் எண்ணி வந்த நோக்கம் இன்னும் நிறைவேறவில்லையே!

மன ஓட்டத்தை முகத்தில் காட்டிக் கொள்ளாமல், "இங்கே மெயின்டனன்ஸ்' எல்லாம் எப்படி சார்? தண்ணீர் தடையற்று வரும் என்றார்களே!'" என்று வீட்டுத் தலைவரிடம் பொதுவான விஷயங்களை ஆனந்தன் விசாரிக்க, அவரும் உரிய விவரங்களைக்



கொடுத்தார்.

காஃபியோடு வீட்டம்மா வரவும், மரியாதையுடன் எழுந்து, ட்ரேயை வாங்கி வைத்து, பார்வைப் இப்புறம், அப்புறம் அகலாமல் சிறு புன்னகையுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஆனந்தன் கிளம்பினான்.

காஃபியைப் பாராட்டவும் மறக்கவில்லை. அந்த அளவுக்கு, அது நல்ல காஃபி என்பது, ஓர் அதிகப்படியான காரணம்.

வீட்டுக்குத் திரும்பி வந்தவனுக்கு ஒரே யோசனை! அவனுக்கு முக்கியமானவர்கள் ஒருவரையும் காணோமே!

கணபதி சாரோடு பேசும்போது, வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று சாதாரணமாகக் கேட்பதுகூட முடியாமல் போயிற்று! அந்த வம்புக்காரி, அதற்கு என்ன விளக்கம் கொடுப்பாளோ என்ற பயம்!

சும்மாவே, மிக மிக நகாசாகக் கையாள வேண்டிய விஷயம்! இப்போது அந்தப் பெண்ணின் பேச்சினால், இன்னும் கொஞ்சம் பின்னடிக்க வேண்டியிருந்தது.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாதபடி, எதிர் வீட்டு நடமாட்டங்களை ஆனந்தன் கவனித்ததில், திருவாளர் கணபதி, தன் அலுவல் இடத்துக்கு, முதலில் கிளம்புகிறவராக இருந்தார், அடுத்துச் சென்றவள், அந்தச் சண்டைக்காரி.

இப்போதுள்ள வழக்கப்படி, அவளது அலுவலகத்திலிருந்து, ஒரு டாக்சி வந்து, அவளை அழைத்துச் சென்றது.

"அம்மா, அலுவலகத்திலிருந்து டாக்சி எண்ணை அனுப்பி விட்டார்கள். ஐந்து நிமிஷங்களில் டாக்சி தெரு முனைக்கு வந்துவிடும். கிளம்புகிறேன். பை, மா" என்று அவள் தாயிடம் விடை பெற்றது, அவன் காதில் தெளிவாகவே விழுந்தது.

இன்னும் எத்தனை பேர் காதிலும் விழுந்ததோ?

இதை வைத்து, அவளுக்கு ஒரு கெடுதலும் பண்ண முடியாதாக்கும்! பெரிதாகப் பெற்றவளுக்கு புத்தி சொல்ல வந்துவிட்டாள்!

இந்த வீட்டு வாரிசு, இந்தப் பெண்ணுடைய அண்ணன், அவன்

எங்கே போனான்? அவனுடைய அருமை மகள், அந்தக் குழந்தையின் சத்தத்தையே காணவில்லையே!

ஒருகணம், ஆனந்தனுக்குத் திக்கென்றது!

ஒருவேளை அது இந்தக் குடும்பமே அல்லவோ? எங்கேயோ ஏதோ தவறு நேர்த்திருக்குமா? அவன் எதிர்பார்த்தது போல இல்லாமல், இது நல்ல குடும்பமாகவும் தோன்றுகிறது!

ஆனால், நல்ல மரத்திலும் புல்லுருவி தோன்றுவதில்லையா?

ஏன்? அவன் குடும்பத்திலேயே இல்லையா? அதேபோல, இங்கேயும் ஒருவன் பிறந்திருக்கலாம்!

ஒருவேளை, அவர்கள் இருவரும் இந்த வீட்டில்தான் இல்லையோ? குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவன் எங்கேனும் போய்விட்டானா? அவ்வளவு திட்டமிட்டு, பல லட்சங்கள் நஷ்டப்பட்டு, இந்த வீட்டுக்கு வந்ததே வீண் என்று ஆகிவிடுமா?

அப்படி இருந்தால், அடுத்து என்ன செய்வது என்று, கவலையுடன் அவன் யோசித்தபோது, அமுதகானம் போல அவன் காதுகளில் ஒரு சின்னக் குழந்தையின் சிணுங்கல் ஒலி கேட்டது. பெரிய அழுகைக்கு முன்னோடி!

வேண்டா வெறுப்பாக வந்ததுதான். ஏற்கனவே நொந்து போயிருந்த தாயார் இனியும் வருந்தக் கூடாது என்பதுதான், வரும்போது அவனது நோக்கமாக இருந்தது.

ஆனால், இப்போது அந்தச் சிணுங்கல் ஒலியில் ஆனந்தனின் உடல் முழுதும் சிலிர்த்துப் போயிற்று. இனிச் செய்ய வேண்டியது பற்றி மனம் ஏதேதோ திட்டமிடத் தொடங்கியது.

சத்தமாகச் சிணுங்கத் தொடங்கிய குழந்தையின் குரல் சட்டென நின்று போயிற்று. ஆனால், திருமதி கணபதியின் குரல், ஏதோ கொஞ்சுதலாகப் பேசி ஆறுதல்படுத்துவது போலக் கேட்கவும், ஆனந்தன் அமைதியடைந்தான்.

வீட்டினர் குழந்தையிடம் பிரியமாகத்தான் இருக்கிறார்கள் போலும்! தாயை நினைத்து மகளை வெறுக்கவில்லை!

இதை நல்லதாகவும் எடுக்கலாம், கெட்டதாகவும் எடுக்கலாம். எது



என்று போகப் போகத்தான் தெரியும்!

இப்போதைக்கு குழந்தையின் பெயர் என்ன? பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

ஆவலில் மனம் துடித்தபோதும், ஆனந்தன் பொறுமை காத்தான். அந்தப் பெண் தவறாக எண்ணக் கூடிய எதையும், அவன் இப்போது செய்யக்கூடாது!

ஆனால், கடவுளே அவன் பக்கமிருந்து செயல்பட்டது போல, வெளிப்புறமாகக் காய்க்காரன் குரல் கேட்டது.

ஆனால், எதிர்வீட்டுப் பெண்மணி காய் வாங்குவதற்கு வருவாளா என்று அவன் யோசிக்க, அதுவும் நடந்தது!

அதற்கும் மேலாகக் கையில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தாள்!

இப்போது அவனை யாரும் குறை சொல்ல முடியாது!

நிம்மதியோடு கதவை நன்கு திறந்துகொண்டு, ஆனந்தன் வெளியே வந்தான்.

எதிர்வீட்டுப் பெண்மணி, அதற்குள்ளாக காய்க்காரன் அருகே சென்றிருந்தாள்.

அவளைத் தொடர்ந்து சென்று, "காரட், வெள்ளரி எல்லாம் இருக்கிறதாப்பா?" என்று காய்க்காரனிடம் கேட்டபடி, பாட்டியின் தோளில் சுகமாகச் சாய்ந்திருந்த குழந்தையைப் பார்த்தான் ஆனந்தன்.

பற்றி இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் துடித்த மனதை அடக்கிக்கொண்டு, "ஆன்ட்டி பாப்பாவை வேண்டுமானால், நான் வைத்துக் கொள்கிறேனே? நீங்கள் காய்களைப் பொறுக்கி எடுக்க வசதியாக இருக்கும்" என்று அனுமதி கேட்டான்.

அவள் இரு மனதாய் யோசிக்கவும் "அப்படியே எனக்கும் கொஞ்சம் வெள்ளரிக்காய் எடுத்துக் கொடுங்கள், ஆன்ட்டி. ஒருதரம் நான் எடுத்ததில் எல்லாம் கசப்பாகிப் போயிற்று. முதலில் பாப்பாவைக் கொடுங்கள்" என்று கையை நீட்டினான்.

பேத்தியை சந்தேகமாகப் பார்த்து "இவள் வருவாளோ,

என்னவோ" என்று பெரியவள் இழுக்கும்போதே, அவன் சொடக்குப் போட்டுக் காட்ட, குழந்தை அவனிடம் சிரித்துக் கொண்டே தாவிச் சென்றது.

"ஆச்சரியம்தான்! இவள் லேசில் அடுத்தவரிடம் போக மாட்டாள்... ரத்தத் தொடர்பு மாதிரி, உடனே வந்துவிட்டாளே!" என்று ஆச்சரியப்பட்டுவிட்டு, செந்திரு காய்களைப் பொறுக்கி எடுக்கலானாள்.

காய்க்காரனும் தன் பங்குக்கு, இந்த ரத்த தொடர்பு பற்றி அளந்து விட்டு, புதுமுகமாக வந்திருந்த ஆனந்தன் பற்றி விசாரித்தான், அவனுக்கு இன்னொரு வாடிக்கை ஆயிற்றே!

காய் வாங்கிக்கொண்டு வரும்போது, "உள்ளே வந்து ஒரு காஃபி குடியுங்களேன்" என்று ஆனந்தனை அழைத்தாள் செந்திரு.

ஆனால், அவளுடைய மகளின் பேச்சு நினைவிருந்ததால், வீட்டுக்கு வெளியிலேயே நின்று "இல்லை ஆன்ட்டி. அதுதான் காலையிலேயே குடித்துவிட்டேனே. இந்தாருங்கள், இவளைப் பிடியுங்கள்" என்று குழந்தையைக் கொடுத்தான்.

தொடர்ந்து "எப்போதாவது ஏதாவது உதவி தேவை என்றால், தயங்காமல் என்னைக் கூப்பிடுங்கள், ஆன்ட்டி. அம்மாவை விட்டு வந்ததற்கு உங்களுடன் பேசுவது மனதுக்கு இதமாக இருக்கிறது." என்று அவன் சொன்ன தினுசில், செந்திருவின்மனம், அவனிடம் பாகாய் உருகிப் போயிற்று!

குழந்தையைப் பற்றிய எந்தக் கேள்வியையும் ஆனந்தன் கேட்பதாக இல்லை.

சும்மாப்பார்த்தால் ஊகிக்க முடியுமோ என்னவோ? ஆனால், ஆராய்ச்சிக் கண்ணுடன் கவனித்த ஆனந்தனுக்கு, மெல்லிய புகை படிந்தாற்போல, அந்த வீட்டார் அனைவரின் முகங்களிலும் ஒரு மகிழ்ச்சியற்ற மனநிலையைக் கண்டுகொள்ள முடிந்தது.

அவ்வருத்தத்தின் காரணம் என்னவாக இருக்கக்கூடும் என்ற ஒரு தெளிவும் அவனுக்கு இருந்தது.

எனவே, பிற்பாடு அவன் யார் என்ன என்பது வெளிப்படும்



சமயத்தில், தவறாகப் பொருள் கொள்ளக்கூடிய எதையும் சொல்லி விடக்கூடாது என்பதில், அவன் கவனமாக இருந்தான்.

அதுவும் வெறும் பார்வையிலேயே குற்றம் காண்கிறவள் இருக்கும் இடமாயிற்றே!

இன்னமும், அந்தவீட்டில் அவனுக்கு முக்கியமாக ஒரு நபரை ஆனந்தன் சந்திக்கவே இல்லை! அவன் அந்த வீட்டில்தான் இருக்கிறானா? அல்லது, மகளைக் கொண்டுவந்து பெற்றோரிடம் தள்ளியதோடு பொறுப்பு தீர்ந்தது என்று, எங்கேனும் போய்விட்டனா?

விஷயம் தானாக வரட்டும் என்று, இதைப் பற்றியும் ஆனந்தன் வாயைத் திறவாமல் தன் வேலையைப் பார்த்துக்கொண்டு பொறுமையாகக் காத்திருந்தான்.

அந்தப் பொறுமைக்கு முடிவு, அந்த வெள்ளிக்கிழமை இரவு வந்தது.

'பாரடைஸ்' குடியிருப்புக்கு வந்ததிலிருந்து நாலு நாட்களாக, ஆனந்தன் பார்த்த அளவில், திரு.கணபதி, அவருடைய மனைவி செந்திரு, மகள் சுபாங்கியோடு, சின்னக் குழந்தை பவித்ரா தவிர வேறு யாரும் அந்த வீட்டுக்கு வரவோ, போகவோ இல்லை.

மிகச் சிறு அளவில் திறந்து வைத்திருந்த ஜன்னல் வழியே, அதன் கனத்த திரையின் பின்னே இருந்து, அவனும் கவனித்துக் கொண்டேதான் இருந்தான். அவனது கண்காணிப்பு மட்டும் அந்தப் பெண் சுபாங்கிக்குத் தெரிந்தால், நீதி மன்றத்தில் வழக்குகூட தொடர்ந்து விடக்கூடும். எனவே வெகு எச்சரிக்கையுடனேயே ஆனந்தன் அந்த வீட்டை உளவு பார்த்தான்.

முதல்நாள் முழுவதும் பார்த்திருந்தும் வீட்டு மகன் கண்ணில் படவில்லை.

மற்ற மூன்று நாட்களும், சொந்த வேலையைப் போய்ப் பார்த்துவிட்டு, மற்ற நேரம் மட்டுமே அவனது உளவு வேலை நடந்தது.

அதனால் பெரிதாகப் பலன் இல்லை என்றாலும், அந்தக்

குடும்பத்தைப் பற்றி, ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது.

அதாவது, கணபதி ஒரு கடுப்பு நாயகம்! அவருடைய மனைவி செந்திரு, 'ம்' என்றால், கண்ணில் நீரை நிரப்பிக் கொள்கிற ரகம்!

எதற்காவது கத்துவதும், உடனே தணிந்து "சரி சரி. அழாதே, திரு. மன்னித்துக்கொள்" என்று குழைவதும் ஒருநாளைக்கு, மூன்று முறையாவது நடக்கும்!

கூடவே "என்னை உனக்குத் தெரியாதா?"வும் சேர்ந்தால் "ஐயோ, சாரிப்பா! நீங்கள் உள்ளூர நீறிக் கொண்டு இருப்பது, எனக்குத் தெரியாதா? இதற்குப் போய் அழுது, உங்களை இன்னமும் வருத்தப்படுத்திவிட்டேனே. நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும்" என்று அவருடைய திருமதியின் மன்னிப்பு வேண்டல் தொடரும்.

ஒருவருக்கொருவர் உருகுவதில், அவர்களது அன்னியோன்னியம் தெரியும்.

பரிதாப்படும்போதே ஆனந்தனுக்கு குழப்பமாகவும் இருக்கும்.

பெற்றோர் விருப்பத்துக்கு மாறான திருமணமாகவே இருக்கலாம். ஆனால், மும்பையில் வசித்த எழில், இவர்கள் இப்படி நோகும்படி என்ன செய்திருப்பாள்? அவள் என்ன செய்திருந்தாலும், அவள் இறந்தே விட்டாள் எனும்போது, மன்னித்து மறக்க வேண்டாமா?

எதிர் வீட்டுப்பெண்மணியின் மென்மையோடு, இந்த மனநிலை முரண்பட்டுத் தெரிந்தது அவனுக்கு.

இரவு தூங்கும் வரை, இதையெல்லாம் நினைத்துக் குழம்பியபோதும், எல்லாமே காலையில் அவனுக்கு மறந்து போகும். அப்பாவும் மகளும் வேலைக்குச் சென்று, காய்க்காரன் வரும் வேளைக்காக, ஆவலாகக் காத்திருப்பான்.

செந்திரு காய் வாங்கும்வரை, குழந்தையைத் தூக்கி வைத்திருக்கும் அந்த சில நிமிஷங்களுக்காகவே, அன்றைய பொழுதே விடிந்திருப்பது போல அவனுக்குத் தோன்றும்.

இந்தக் குழந்தையை விட்டு, அதன் தந்தை எங்கே போனான்?

ஒருவகையில், இது நல்லதுதான் என்றாலும்...



வெள்ளிக்கிழமையன்று காலையிலேயே, ஆனந்தனின் அலுவலகத்தில் ஒரு வேகமும் பரபரப்பும் தெரிந்தது. பாதிக்கு மேல் பங்களூருவிலிருந்து அழைத்து வந்தவர்கள் என்பதால், அவர்கள் அனைவரும் இப்போது வாரக் கடைசிக்காகச் சொந்த ஊர் செல்லும் முனைப்பில் இருந்தார்கள்.

அவர்களை அனுப்பிவிட்டு, தன் வேலைகளை முடித்துவிட்டு, வெளியே உணவை முடித்துக் கொண்டு, ஃப்ளாட்டுக்கு வந்து முடங்கினான் ஆனந்தன்.

மறுநாள் சனிக்கிழமை. அந்தப் பெண் சுபாங்கிக்கு விடுமுறையாக இருக்கும். அவள் வீட்டில் இருக்கும்போது, குழந்தை அவனது கைக்கு எப்படி வரும்? பார்க்கவேனும் முடியுமா?

யோசனை செய்தவாறே படுத்திருக்கும்போது, தடதடவென்று எதிர் வீட்டுக் கதவை உடைத்துவிடுவது போல யாரோ பலக்கத் தட்டும் ஒலி கேட்டு, ஆனந்தன் சட்டென எழுந்து அமர்ந்தான்.

யார்? தேடி வந்த ஹீரோ... இல்லை வில்லன்தான் வந்திருக்கிறானா?

வேகமாக படுக்கையை விட்டிறங்கி, விளக்கைப் போடாமலே, வழக்கமான இடத்துக்குச் சென்று கவனிக்கத் தொடங்கினான் ஆனந்தன்.



## பேசும் பொற்சித்திரமே 4

ஆனந்தன் வழக்கம் போல எதிர் ஃப்ளாட்டை உளவு பார்க்கத் தொடங்கியபோது, அந்த வீட்டுத் தலைவர் கணபதியின் குரல் உரத்துக் கேட்டது.

"போகச் சொல்லு, அவனை! கண்ட குடிகாரப் பயல்களெல்லாம் வந்து விழுந்து கிடப்பதற்கு, இது இடமல்ல. எங்கேனும் போய்த் தொலையட்டும்!" என்று கிட்டத்தட்ட அலறினார் எனலாம். அவ்வளவு சத்தமான கத்தல்!

கணபதி சாரின் குரல் அவ்வப்போது சற்ற உரத்துக் கேட்கும்தான்

ஆனால் மனைவி அல்லது மகளின் தணிந்த குரலில், அது உடனே அடங்கிவிடும். இப்போதும் மொணமொணவென்று பெண்குரல்கள் தாழ்வாகக் கேட்கத்தான் செய்தன.

ஆனால், கணபதிதான் அந்தக் குரல்களைக் கொஞ்சமும் மதிப்பதாக இல்லை. திரும்பத் திரும்ப "அந்த ராட்சசனை, உடனே இங்கிருந்து போகச் சொல்லு. அவனைக் கண்ணால் பார்ப்பதே பாவம்! வீட்டுக்குள்ளே வேறு விடுவதா? இது என் வீடு. எந்த நாயும் உள்ளே வர முடியாது..." என்று கத்தி விரட்டிக்கொண்டே இருந்தார்.

அவருக்குப் போட்டியாக வந்தவனும், சற்றுக் குழறலாக என்றாலும் சுதியை உயர்த்தித்தான் பேசினான்.

"எ...து? உங்க வீடா? ஊரிலே தாத்தா சொத்து வருமானத்தையும் சேர்த்து போட்டு வாங்கிய ஃப்ளாட்! எனக்கும் உரிமை உண்டு...! கதவைத் திறக்காவிட்டால், போலீசோடு வந்து திறக்க வைப்பேன்"

எழிலரசிக்குப் பொருத்தமான ஜோடிதான்! பேச்சிலேயே தெரிகிறதே!

பேச்சு மட்டும்தானா? குடி! இன்னும்...இரவு நேரத்தில் வந்து, கத்துவதும், கதவை உடைப்பது போலத் தட்டுவதுமாக, அநாகரீகமாக நடந்து அவனை ஆனந்தன் உற்றுக் கவனித்தான்.

அவனை விடக் கொஞ்சம் உயரம் குறைவாக இருக்கக்கூடும். ஆனால் உடல் கட்டில் கவனம் வையாமல், சற்று தொளதொளத்த, சிறுதொப்பையுடன் கூடிய உடலமைப்பு. ஓர் இடத்தில் நேராக நில்லாத தள்ளாட்டம். அவன் ஏதோ போதையில் இருப்பதைக் காட்டியது.

என்ன போதை என்பதைத்தான் பெரியவர் கணபதியே சொன்னாரே!

குடி! பார்த்தால், அதுவும் ஒன்றுக்கொன்று பொருத்தமாகத்தான் இருக்கிறது!

ஆக, இவன்தான் இந்த வீட்டு மகன்! அந்தப் பட்டுக் குட்டி, பவிச் செல்லத்துடைய தகப்பன், பெயர் சுகேசன்!

சுகேசன், சுபாங்கி! அண்ணன் தங்கைக்குப் பெயரெல்லாம் எதுகை



மோனைப் பொருத்தம் பார்த்து நன்றாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால், வளர்ப்பில்தான் கோட்டை விட்டுவிட்டார்கள்!

அதற்குள் செந்திரு ஆன்ட்டியின் குரல் கேட்டது.

"எதிர் வீட்டிற்கு ஆள் வந்தாயிற்று. இப்படிப் பிள்ளையை வெளியே நிற்க வைத்துக் கத்தாதீர்கள். இவன் கதவைத் தட்டுவதில் பாப்பா வேறு விழித்து அழுவது கேட்கவில்லையா? பேசாமல், அவனை உள்ளே கூப்பிட்டு, நல்ல புத்தி சொல்லுங்கள்" என்று கூறியவாறே கதவைத் திறந்து வைத்தாள்.

கொஞ்சமேனும் நிதானத்தில் இருந்திருந்தால், திறந்த கதவின் வழியே சுகேசன் சட்டென்று உள்ளே சென்றிருக்கலாம். ஆனால் தட்டுத் தடுமாறிக் கொண்டே வந்த சுகேசன் கதவை அடையுமுன் "சொல்லிக்கொண்டே இருக்கிறேன். காதில் வாங்காமல் அந்த நாய்க்காகக் கதவை திறக்கிறாயா?" என்று மனைவியை அதட்டியவாறே முன்னே வந்து, கதவை அடைத்துக்கொண்டு நின்றார், அவனைப் பெற்றவர்.

ஒருவாறு கதவின் அருகே வந்தவன், வழி மறித்து நின்ற தந்தையை உற்றுப் பார்த்து, "வழியை வி...விடுயா... உள்ளே போகணும், ம், ஜல்தி" என்று அதட்டினான்.

"விடுயா"வா? நல்ல மரியாதை! அதெல்லாம், உள்ளே வரக்கூடாது. போ வெளியே! போடா..."என்று கணபதி கத்தி, மகனை விரட்ட முயன்றார்.

அதற்குள் வீறிட்டு அழுத குழந்தையை தூக்கிக்கொண்டு சுபாங்கி முன்னறைக்கு வர, பேத்தியைச் சமாதானப்படுத்தும் நோக்கத்தில் செந்திரு குழந்தையிடம் விரைந்தாள்.

அதற்குள் "போக மாட்டேன். இது என் வீடு"என்று கத்தியவாறு, முரட்டுத்தனமாகத் தகப்பனாரை பிடித்து, இடித்துத் தள்ளிக்கொண்டு சுகேசன் வீட்டின் உள்ளே செல்ல முயன்றான்.

வழி விடாமல், மகனை வெளியே தள்ள முயன்றவரின் கால் தடுமாறி, கதவு நிலையில் வேகமாக மோதிய கணபதி கீழே விழுந்தார். விழுந்தவர் எழ முடியாமல் வலியால் முனகினார்.

அதே சமயத்தில் குடி மயக்கத்தில் இருந்த மகனும், தந்தை பிடித்துத் தள்ளிய வேகத்தில், உணர்வு மயங்கிக் கீழே சரிந்தான்.

"ஐயோ" என்று ஓடிவந்த செந்திரு கணவன், பிள்ளை இருவரில் யாரை பார்ப்பது என்று திகைத்து, இருவர் புறமும் திரும்புவதும் தொடுவதுமாகத் தவித்தாள்.

இதற்கு மேல் சும்மா இருக்கக்கூடாது என்று, ஆனந்தன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வரும்போது, "கண் குளிரப் பார்த்தாயிற்று அல்லவா? உள்ளே போடி!" என்று ஓர் ஆண் குரல் அதட்டுவது, உயரே கேட்டது.

மேலே எந்தத் தளத்துக்காரரோ? கணபதியோடு ஒட்டிய வயதுள்ள ஒருவர், பாதிப்படி இறங்கிக் கண்ணீருடன் நின்ற ஓர் இளம்பெண்ணைத்தான், அவர் கடிந்திருக்க வேண்டும். படிகளின் தொடக்கத்தில் இன்னும் இரு பெண்கள் நிற்பது போலத் தோன்றினாலும், அனிச்சையாக மேலே நோக்கிய ஆனந்தனின் கவனம் அதற்குள் எதிர்வீட்டினரிடம் மீண்டு வந்துவிட்டது.

மகன் கணவர், யாரைப் பார்ப்பது என்று எதிர்வீட்டுப் பெண்மணியின் தவிப்பு புரிய, "ஆன்ட்டி, நீங்கள் சாரை கவனியுங்கள். நான் உங்கள் மகனைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றான், ஆனந்தன்.

நன்றியுடன் செந்திரு கணவரிடம் திரும்பினாள்.

ஆனால், கீழே உணர்வற்றுக் கிடந்த சுகேசனிடம் ஆனந்தன் குனியும்போதே "வேண்டாம், வேண்டாம். அண்ணனையும் நாங்களே பார்த்துக் கொள்வோம்!" என்று சுபாங்கி ஓடி வந்து, குறுக்கே புகுந்து தடுத்தாள்.

பயந்து அழுத ஆறேழு மாதக் குழந்தையின் அழுகையை நிறுத்துவதே கடினமாக இருந்தபோதும், தட்டியும் தடவியும் கொடுத்துப் பிள்ளையை ஓரளவு சமாளித்தபடியே, கீழே கிடந்த அண்ணனுக்கும் ஆனந்தனுக்கும் இடையே வந்து நின்று "வேண்டாம் சார். எங்களால் உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்? அப்பா, அண்ணன் இருவரையுமே, நாங்களே பார்த்துக் கொள்ளுவோம். நீங்கள் போங்கள்!" என்று நாகரீகமாகப் பேசி அவனை வீட்டுக்கு அனுப்ப முயன்றாள்.

அநாகரீகமாகச் சொல்வது என்றால், ஆனந்தனை அங்கிருந்து விரட்டப் பெரு முயற்சி செய்தாள் எனலாம்.

கன்றிச் சிவந்திருந்த கன்னங்களைப் பார்க்கையில், அவனுக்கு விசித்திரமாக இருந்தது. அவன் முன்னிலையில், அவளுடைய குடும்பம் நிலையிறங்கித் தெரியக்கூடாதாம்! அவ்வளவு ரோஷமா?

மனம் இளகும்போதே, அவளை நம்புவது பற்றி, முதல்நாள் அவள் சொன்னது, ஆனந்தனுக்கு நினைவு வந்தது. அவனைப் பார்த்தால், திருடன் மாதிரியா இருக்கிறது? அடிப்படையே இல்லாமல் எப்படி பேசினாள்!

"உன் நிலைமையில் நான் இருந்தால், பவித்ராவை நன்கு அமைதிப்படுத்தி, உறங்க வைப்பதை, என் முதல் வேலையாகச் செய்வேன்." என்றவன், அவளைச் சுற்றிக்கொண்டு குடியில் மயங்கிக் கிடப்பவனிடம் குனிந்தான்.

தோளடியில் கை கொடுத்து, சுகேசனைத் தூக்கி நிறுத்தப் போனவன், ஒரு கணம் தயங்கி, அவனது வாட்ச், மோதிரத்தை வேகமாகக் கழற்றி, பர்ஸ், செல்போனையும் எடுத்து, எல்லாவற்றையும் சுபாங்கியின் கையில் திணித்தான். திணித்துவிட்டு "திருடுவதற்கு வேறு ஒன்றுமில்லை. இனியேனும், என்னை ஒரு மனிதனாக, நடக்க விடு. நீயும், உன் அம்மாவுக்கு உதவியாக உன் தந்தைக்குச் செய்ய வேண்டியதைப் பார்" என்று கடுப்புடன் கூறி, சுகேசனை எழுப்பி நிறுத்தி தன் மீது சாய்த்தாற்போல நடத்தித் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

இடையே யாரோ, மேல் வீட்டுக்காரராகத்தான் இருக்க வேண்டும். உரக்க "டாக்டருக்கு ஃபோன் செய்து விட்டேன்" என்பது காதில் விழுந்தது.

நல்லதுதான். கணபதி சாருக்குத் தலையில், காலில் அடி பட்டிருந்தது. டாக்டரிடம் கூட்டிப் போவதைக் காட்டிலும், டாக்டர் வந்து பார்ப்பதுதான் நல்லது, நல்லவேளையாக, அந்த அளவு

யோசித்துச் செயல்படும் அக்கம் பக்கத்தார் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போதே, "இனியாவது உள்ளே வா. அந்த வீட்டில் யாருக்கும் எதுவும் நேர்ந்துவிடாது" என்று, அவர் சற்றுத் தணிந்த குரலில், சீறியதும் கேட்கவே, ஆனந்தன் திடுக்கிட்டு விழி உயர்த்திப் பார்த்தான்.

பாதிப் படியில் நின்ற பெண்ணிடம்தான் சீறல்.

கூடவே, மேலே படி தொடங்கும் இடத்தில் ஏளனப் பார்வையோடு இன்னோர் இளம்பெண்ணும், இந்தப் பெண்களுக்குத் தாய் போன்ற வயதில் ஒரு பெண்மணியும் நிற்பதும் தெரிந்தது.

வெறும் அக்கம் பக்கத்துப் பழக்கத்தை மிஞ்சியும், ஏதோ இருக்கும் போலும் என்றதற்கு மேல், அவர்களைப் பற்றிய நினைவு, ஆனந்தனுக்கு அறவே மறந்தது.

சுகேசனது அசைவுகள், அடுத்து வரப் போவதை உணர்த்த, அவசரமாக அவனைக் குளியலறைக்கு இழுத்துப் போய் நிறுத்தினான்.

ஒருவழியாக அவனது பிரச்சினை தீர்ந்ததும், அவனைத் துடைத்துத் துணி மாற்றிவிட்டு, அறையையும் கழுவி சுத்தம் செய்தான்.

உள்ளூர கொதிப்புடன்தான்.

"அடிப்பாவி, நீ வீட்டில் இருந்தவரை, உனக்காகச் செய்ததெல்லாம் போதாதா? ஒருவாறு உன்னோடு எல்லாக் கேவலங்களும் தீர்ந்தது என்று பார்த்தால், உன் பிள்ளைக்குத் தகப்பன் என்பதால், யாரோ ஒருவனுக்கு இந்த வேலையெல்லாம் செய்யும்படி பண்ணிவிட்டாயே!" என்று உள்ளூரத் தங்கைக்கு அர்ச்சனை செய்தபடி, தானும் சற்று நேரம் ஷவரில் நின்றுவிட்டு வந்தான்.

படுக்கையில் சுகேசன் புரண்டு படுத்ததைப் பார்த்துவிட்டு, தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து, நிறையத் தண்ணீர் குடிக்க வைத்தான்.

எழிலரசிக்குச் செய்ததுதான், இந்தப் பணிவிடைகள் எல்லாம்,



அவனுக்கு அத்துபடி ஆயிற்றே!

ஒருவாறு சுகேசன் அயர்ந்து தூங்கியதும், அத்தனை துணிகளையும் சலவை மிஷினில் போட்டு 'ஆன்' பண்ணிவிட்டு வந்து, சோஃபாவில் படுத்தான்.

அதிகாலையிலேயே அழைப்பு மணியின் ஒலியில் விழித்து, எழுந்து கதவைத் திறந்தால், அவன் நினைத்தது போல, சுபாங்கிதான்!

அவள் பேச வாயைத் திறக்குமுன் "உன் அண்ணனைக் காக்காய் தூக்கிப் போய்விடவில்லை. தூங்குகிறான், அப்புறமாக வா" என்று பதில் பேச இடமே கொடாமல் கதவைச் சாத்திக் கொண்டான்.

கொதித்துப் போயிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அதுவே அவனுக்கு உள்ளூர திருப்திதானே! ஒரு காரணமும் இல்லாமல், அவனைத் தப்பாகப் பேசினாளே! கொஞ்சமேனும் படட்டும்!

ஆனந்தன் எதிர்பார்த்தது போலவே, அடுத்த ஒரு மணி நேரத்தில், சுபாங்கி மறுபடியும் வந்து நின்றாள். "அண்ணன் எப்படி இருக்கிறான்? முதலில் அவனை நான் பார்த்தாக வேண்டும்" என்றபடி,

அவள் 'பார்க்க வேண்டும்' என்றதே, தூங்கிக் கொண்டிருந்தாலும், சுகேசனை எழுப்பியேனும் வீட்டுக்குக் கூட்டிப் போய்விட வேண்டும் என்ற நோக்கத்தில்தான்.

இப்படிக் குடித்துவிட்டு வந்தால், மறுநாள் அவன் என்னவெல்லாம் கூத்தடிப்பான் என்று அவளுக்குத் தெரியும். அது இந்த அன்னியனுக்குத் தெரிய வேண்டாமே! கூனிக் குறுகுவதற்கு, நேற்றைய அவமானம் ஒன்றே போதும்!

அவளது குரலில் அழுத்தத்தை உணர்ந்து, லேசான தோள்க் குலுக்கலுடன், சுகேசன் படுத்திருந்த அறைக்கு ஆனந்தன் அவளை அழைத்துச் சென்றான்.

செல்லும்போதே, "அப்பா எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தான், உண்மையான கவலையுடன்தான்.

அருகே நடந்து வந்தவளின் உடல் விறைப்பு, அவனுக்கு விசித்திரமாக இருந்தது. "அப்பாவுக்கென்ன? நன்றாகத்தான் இருக்கிறார். கதவு நிலையில் சாய்ந்திருந்ததால், கொஞ்சம் நிலை தடுமாறிவிட்டது. லேசான.... ரொம்ப லேசான சிராய்ப்புதான். இன்று வேலைக்குகூடப் போகப் போகிறாரே!" என்று சுபாங்கி பதிலிறுத்ததும் அப்படித்தான்.

முன்தினம் ஒன்றுமே நடவாதது போல, என்னமாகப் பேசுகிறாள்! இவள் அண்ணனை, அவன் வேடிக்கைக்காகத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து, அந்தக் கண்ணராவிப் பணிவிடைகள் எல்லாம் செய்தானாக்கும்!

சுகேசன் படுத்திருந்த அறை வாயிலுக்கு வந்துவிட்ட சுபாங்கி சட்டென நின்றாள் "இது அண்ணன் உடை அல்லவே?" என்றாள் திகைப்புடன்.

"என்ன செய்வது?"என்று கேட்டவனின் குரலில் கிண்டல் இருந்தது "நேற்று உன் அண்ணன் செய்து வைத்தவேலைக்கு அந்த உடையை மாற்றாமல் தீராதே!"

வினாடிக்குள் அவளது முகம், காது மடல் வரை, கன்றிச் சிவந்து போயிற்று.

"நான்... நான் வேண்டுமானால், எ...எல்லாம் சுத்தம் செய்து விடட்டுமா?" என்று சின்னக் குரலில் வினவினாள்.

அவனுக்கு இரக்கம் வரவில்லை. "நீ வந்து சுத்தம் செய்வதற்காக என் வீட்டை அழுக்காகப் போட்டு வைத்திருப்பேன் என்று எண்ணினாயா? எனக்கும் கை கால்கள் கடவுள் அருளால் நல்லபடியாகவே இருக்கின்றன" என்று, அவளை இன்னமும் கன்ற வைத்தான்.

தலை தரையை நோக்க "அண்ணாவைக் கூட்டிப் போகலாம் என்று வந்தே..."

அவனது முறைப்பில், அவளது பேச்சு நின்றுவிட, "கொஞ்சம் நடக்கக்கூடியதை பேசுவாய் என்று நினைத்தேன்" என்று வேண்டும் என்றே சொன்னான் ஆனந்தன்.



சட்டென நிமிர்ந்து "எங்களால் உங்களுக்கு எதற்கு வீண் தொல்லை?" என்றாள் அவள்.

"ஓ! தொல்லையை நிவர்த்திக்க வந்தவளா? போகாத ஊருக்கு வழி சொல்லுகிற மாதிரி, இங்கே வந்து, நீ இப்படிப் பேசுவதுதான், இப்போது தொல்லையாக இருக்கிறது. அதைத்தான் நிவர்த்தி செய்ய வேண்டும் செய்கிறாயா?" என்று வழி விலகி நின்றான் அவன்.

விருட்டென்று திரும்பிச் சென்றாள், சுபாங்கி.

செல்லும்போதே, அவன் நினைத்ததைச் சாதிக்க தானும் துணை போய்விட்டோமே என்று, அவளுக்குத் தன் மீதே ஆத்திரம் வந்தது.

ஆனால், இப்போது அவள் வேறு என்னதான் செய்ய முடியும்?

இவன் சங்காத்தமே வேண்டாம் என்று நினைத்தால், அண்ணன் இங்கேயே வந்து படுத்துக் கொண்டிருக்கிறான், சுகமான தூக்கம் வேறு!

பத்து லட்சம் ரூபாயை விட்டுக் கொடுத்து, இங்கே வந்து உட்கார்ந்திருப்பவன், ஏன் வந்தான், என்ன என்று ஒன்றுமே தெரியாமல்...

வாயில் கதவைக் கடக்கையில், "ஒரு நிமிஷம்!"என்று அவளைத் தடுத்து நிறுத்தினான் ஆனந்தன்.

அவள் நின்று திரும்பிப் பார்க்கவும், "தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உன் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். இப்படி அடிக்கடி வந்து நிற்க வேண்டாம். நானும் புதிது என்பதால், பார்க்கிறவர்கள் உன்னைத் தப்பாக நினைக்கக்கூடும்" என்றான் அவளுக்கு புத்தி சொல்வது போல.

கண்களில் தீ தான் எரியவில்லை! கனல் எழ விழிக்கும்போதே சுபாங்கி சுதாரித்தாள்.

இந்த ஆனந்தன், அவளை விரட்டுகிறான், ஏன்?

வீட்டில் அத்தனை பேரிடமும் உருகி வழிகிறான். அவளிடம் மட்டும் ஏன் இந்த ஒதுக்கம்?

முதல் கோணல் முற்றும் கோணலாகிறதா? அல்லது, ஏதோ விஷயம் இருந்து, அவளுக்குத் தெரிந்துவிடுமோ என்று

அஞ்சுகிறானா? நர்மதா பற்றி அறிந்தவள், அவள் மட்டும்தானே?

இரு இரு, உன்னைக் கண்டுபிடிக்காமல் விடுவதில்லை என்று உள்ளூரக் கருவியவள் முகத்தில் யோசனையைக் காட்டி, அவனைப் பார்த்தாள்.

ஒப்புதலாகத் தலையாட்டி "ஆமாம் சார். நீங்கள் சொல்வது சரிதான். என்னை இங்கே எல்லோருக்கும் தெரியும். ஆனால், உங்களைப் பற்றித் தெரியாததால், கொஞ்சம் பயம், கவலை இருக்கத்தான் செய்யும்! அனாவசியமாக, அவர்களைக் கவலைப்பட வைப்பானேன்? எச்சரித்ததற்கு நன்றி சார்" என்றுவிட்டுப் போனாள்.

நன்றியா? மண்டையில் நன்றாகத்தான் குட்டு வைக்கிறாள்!

தன்னை மீறிய முறுவலுடன் உள்ளே சென்று, சுகேசனைப் பார்த்தான்.

இன்னமும், அயர்ந்த உறக்கம்தான்! தூங்கட்டும். எழில் மதியம் தாண்டிக் கூடத் தூங்கியது உண்டு. இப்போதே எழுந்து, வலி தாங்காமல் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை விட, இந்தப் பாதிப்பு முழுவதையும் தூங்கியே கழிக்கட்டும்!

அவனது வேலையில் சிறு பாதிப்பு ஏற்படும். ஆனால், சமாளிக்க முடியாதது அல்ல. செல்ஃபோனில் பேசி அலுவலகத்துக்குச் சில உத்திரவுகளைக் கொடுத்துவிட்டு, லாப்டாப்பை எடுத்து வைத்துக்கொண்டு, வேலையில் ஆழ்ந்தான் அவன்.

இவ்வளவு சொன்ன மட்டும் , சுபாங்கி மறுபடியும் வந்து தொந்திரவு செய்ய மாட்டாள் என்றுதான் ஆனந்தன் எண்ணியிருந்தான்.

சொல்லப் போனால், அதில் சிறு வருத்தமும்கூட, அவனுக்கு.

அலட்சியமாக உயரத் தூக்கிக் கிளிப் மாட்டியிருந்த கூந்தலில் இருந்து, வண்ணக் கலவையாய் சாயம் தீட்டியிருந்த கால் நகங்கள் வரையிலும், துடிப்பும் ஆரோக்கியமுமாக, அவளைப் பார்க்கவே நன்றாகத்தான் இருந்தது.

பேச்சுத்தான் அதிகப்படி கெடுப்பது, மற்றபடி... ஊகூம். வேண்டாம், இந்த மாதிரி அவளை ரசனையோடு பார்த்ததாகத்



தெரிந்தாலே, பேயாட்டம் ஆடி விடக்கூடும்!

சுபாங்கியிடம் இருந்து மனதை மீட்டு, மறுபடியும் வேலையில் கவனத்தைச் செலுத்தினான் அவன்.

ஒரு மணி நேரம் இடையூறற்று வேலை நடந்தது.

ஒரு புதிய ப்ராஜெக்ட்டுக்கான செலவுக் கணக்கைக் கிட்டத்தட்ட திட்டமிட்டு முடித்தபோது, அழைப்பு மணி மீண்டும் குரல் எழுப்பியது.

இங்கே அவனை அழைப்பவர்...

என்ன பெண் இவள் என்று எரிச்சலுடன் எழுந்து சென்று கதவைத் திறந்தால், குற்றம் சொல்ல முடியாதபடி, தாயாரோடு வந்து நின்றாள் சுபாங்கி.

"அண்ணனைப் பார்த்துக் கூட்டிப் போகலாம் என்று அம்மா சொன்னார்கள்..." என்று சின்னக் குரலில் பதவிசாகப் பேசினாள்.

இழுத்து வந்தவள் நீதான் என்று எனக்குத் தெரியாதா என்று எண்ணியதைக் காட்டாமல், உள்ளே அழைத்து உட்கார வைத்து "அங்கிள் எப்படி இருக்கிறார், ஆன்ட்டி?" என்று செந்திருவிடம் வேறு விசாரித்தான் ஆனந்தன்.

"ம். பரவாயில்லைப்பா. நெற்றியில் சிராய்ப்பு மட்டும்தான். காலைத்தான் எப்படியோ வைத்ததில் சுளுக்கி இருக்கிறது. எலாஸ்டிக் பேன்டேஜ் போட்டிருக்கிறார்கள். அந்த மட்டும் எலும்பு முறிவு எதுவும் இல்லாமல் கடவுள் காப்பாற்றினார். இந்த வயதில், எலும்பு முறிந்தால், மறுபடி கூடுவது கஷ்டமாமே!" என்று கணவரைப் பற்றி விளக்கம் சொன்னாள் அந்த அம்மாள்.

பொறுமையிழந்து, தாயை நெருடி "அம்மா, அண்ணன்..." என்று முணுமுணுப்பாய் எடுத்துக் கொடுத்தாள் மகள்.

ஆனால்,அவள் எண்ணியதற்கு மாறாக "ஆ...ஆமாம் சொல்ல மறந்து விட்டேனே, அந்த இக்கட்டான நேரத்தில், சுகேஷ் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டதற்கு, ரொம்ப நன்றிப்பா. சின்னது வேறே அழ, இவனை மட்டும் உள்ளே கூட்டிப் போயிருந்தால், உன் அங்கிள் கத்துக் கத்து என்று கத்தியிருப்பார்! நிலைமை புரிந்து,

அவனை இங்கே கூட்டி வந்தாயே, அதற்கு எவ்வளவு நன்றி சொன்னாலும், போதாதுப்பா!" என்று மனதாரச் சொன்னாள் அந்தத் தாய்.

"போதும், ஆன்ட்டி!" என்று அந்த ஆனந்தன் பேச்சைத் தடுத்தான் "அக்கம் பக்கம் என்றால், என்ன அர்த்தம், ஆன்ட்டி? ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மை இருக்க வேண்டும்தானே? நாளைக்கு எனக்கு திருமணமாகி, என் மனைவிக்கு ஒன்று என்றால், நீங்கள் உதவிக்கு வர மாட்டீர்களா? இதற்கெல்லாம் பெரிதாக நன்றி சொல்லாதீர்கள்,, ஆன்ட்டி!" என்று இதமாகப் பேசியவன், அவளது பிரச்சினையை ஊகித்து, "அங்கிள் எத்தனை நாட்கள் காலை அசைக்கக்கூடாது?"என்று விசாரித்தான்.

"மூன்று நாட்கள் என்று டாக்டர் சொன்னார். இன்றும் நாளையும் போனால், திங்களன்று டிரைவரை வரச் சொல்லிக் காரில் அலுவலகம் போவதாக இருக்கிறார். ஆனால்..." என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

பேச்சு போகும் திசை பிடிக்காமல், குறுக்கிடும் விதமும் புரியாமல், முள்ளின் மேல் அமர்ந்திருப்பவள் போல சுபாங்கியின் தோற்றத்தை உள்ளூர ரசித்தபடி "ஒன்று சொல்லட்டுமா, ஆன்ட்டி? இந்த இரண்டு நாட்களும், சுகேசன் இங்கேயே இருக்கட்டும். கணபதி சார் 'டென்ஷன்' இல்லாமல் இருப்பது, இப்போது அவசியம், அல்லவா? அதற்காகத்தான் சொல்லுகிறேன்" என்றான் ஆனந்தன்.

ஸ்விட்சைத் தட்டினாற்போல, செந்திருவின் முக மலர்ச்சி, அவளது மனநிலையைப் படம் பிடித்துக் காட்டிற்று. ஆனால் அவன் என்னதான் இதமாகப் பேசினாலும், கிடைத்தான் ஒருவன், என்று அவன் தலையில் பொறுப்பைக் கட்டுவது நியாயமல்ல என்றும், அவளுக்குத் தோன்றியது.

ஏற்கனவே, மகள் வேறு, அப்படிச் சொல்லித்தான், அவளைக் கூட்டி வந்திருந்தாள். கூடவே சுபா சொன்ன மற்றதும் நினைவு வர, "ஐயோ! ஏற்கனவே, பையனால் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாய் போலிருக்கிறது தம்பி, இன்னும் எப்படி..." என்று ஆனந்தனின்



உதவியை ஏற்க, மிகவும் தயங்கினாள்.

சுபாங்கியை ஒரு பார்வை பார்த்துவிட்டு "ஆன்ட்டி, எதற்கும். கால, தேச, வருத்தமானம் என்று இருக்கிறது. எது அதிக முக்கியம் என்று கணித்து, அதற்கு முதலிடம் கொடுப்போம். இப்போதைக்கு அங்கிளின் மன அமைதிதான் மிகவும் முக்கியமானது இல்லையா? சுகேசன் வயதில் எனக்குத் தோழர்கள் இருக்கிறார்கள். அதனால், அவரைக் கவனிப்பது எனக்குக் கடினம் அல்ல..." என்றவன் இடையிட்டுப் பேச முயன்ற சுபாங்கியை கை உயர்த்தித் தடுத்துவிட்டுத் தொடர்ந்தான்.

"போங்கள் ஆன்ட்டி. நீங்கள் போய், அங்கிளைப் பாருங்கள். அவருக்கு எதுவும் தேவைப்பட்டால்... அல்லது, பவிக்குட்டி விழித்து அழுதால், பாவம், அவர் என்ன செய்வார்..."என்று அவன் வரிசையாகச் சொல்லத் தொடங்கும்போதே, செந்திரு அவசரமாக எழுந்துவிட்டாள்.

"ஐயோ, ஆமாம்ப்பா. ஆனால், சுபி சொல்வது போல எங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லைதான் என்றாலும், சுகன் சுமையை உன் தலையில் கட்டுவது தவிர, எங்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், அவன் நேற்று மாதிரி ஏதாவது பண்ணி வைத்தால், சத்தம் செய்ய என்னைக் கூப்பிடுப்பா. அதெல்லாம், நீ செய்து, என்னைப் பெரிய கடன்காரியாக்காதே. வரட்டுமா? ஏய் நீயும் வாடி" என்று வேகமாக உரைத்தபடியே, தன் வீட்டை நோக்கி விரைந்தாள் அவள்.

செந்திருவை வழியனுப்பும் சாக்கில் அவளுடனேயே சென்ற ஆனந்தன், முகத்தை சுளுக்கியபடியே பின் தொடர்ந்த சுபாங்கியின் வழியை மறைத்து நின்று, "சில பேருக்கு யாரிடம், எதை எப்போது சொல்வது என்று தெரிவதே இல்லை. சும்மாவே கலங்கித் தவித்துக் கொண்டிருப்பவர்களை, இன்னமும் கஷ்டப்படுத்த வேண்டாம். பாவம். விட்டுவிடு" என்றான் சற்று கடுமையான குரலில்.

அவனது குரலை விட வார்த்தைகள் சுட "அவர்கள் எனக்குத்தான் அம்மா. நினைவிருக்கட்டும்" என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

"அது, உனக்கு நினைவில் இருந்தால், சரி"என்று வழி விலகி நின்றான் அவன்.

ஒருகணம் திகைத்தாலும், உடனேயே "அப்படி மறந்தாலும் நினைவுபடுத்தத்தான் நீங்கள் பக்கத்திலேயே இருக்கிறீர்களே! அதற்கொரு தாங்க்ஸ் சார். இன்னும், நீங்கள் செய்தற்கு எல்லாம் ரொம்பத் தாங்க்ஸ் சார்! வருகிறேன் சார்!" என்று அவள் வாயை 'ஈ' என்று இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டு, நொடிக்கொரு சார் போட்டு நன்றி சொன்ன விதத்தில், கோபத்துக்குப் பதிலாக ஆனந்தனுக்குச் சிரிப்புதான் வந்தது.

'சரியான பொறி மத்தாப்பு' என்று எண்ணியவன், புன்னகையோடு கதவைச் சாத்தினான்.

எல்லாம் சிரிப்பாக இருக்கிறதா? சீக்கிரமே உன்னைப் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடித்து, உன் முகமூடியைக் கிழிக்கிறேனா, இல்லையா, பார் என்று உள்ளூரக் கறுவியவண்ணம், தன் வீட்டுக்குள் சென்றாள் சுபாங்கி.



# பேசும் பொற்சித்திரமே 5

ஒரு சந்தேகம் என்று வந்துவிட்டால், சுபாங்கி சும்மா இருக்கிறவள் அல்ல.

தோழி நர்மதா மூலம் அறிந்த விஷயத்தில், எதிர் வீட்டுக்காரனை ஓர் ஐயத்துடனேயே பார்த்தாள் அவள். அதனாலேயே, பாலுக்குப் பதிலாக பழங்களும் இனிப்பும் கொண்டு வந்தவனின் பார்வை, சற்று அதிகப்படியான கூர்மையுடன் அலைந்ததை, அவளால் கண்டு கொள்ள முடிந்தது.

அவனது பழம் இனிப்பிலும் பேச்சிலும் பெற்றோர் வசியமாகிவிட்டது புரியவும், ஆனந்தனுக்கு எதிரான உறுதியான சான்றைத் தேடி நர்மதாவிடம் விசாரித்தாள்.

இங்கே கொடுக்க இருந்த அதே விலைக்குக் கூடுதலான 'ப்ளிந்த் ஏரியா' கொண்ட அந்த ஃப்ளாட் கிடைத்தது என்றதற்கு மேல்,



யாரால், எப்படி என்ற விவரம் எதுவும் அவளுக்குமே தெரியவில்லை.

அவளுடைய தந்தையோ, மனைவி மக்களிடம் எளிதாகக் கலந்து பேசுகிறவர் அல்ல. பெண்களுக்குப் பண விவகாரம் தெரியாது என்கிற எண்ணம் கொண்டவர். எனவே, தந்தையிடம் இது பற்றி கேட்க, நர்மதாவே அஞ்சினாள். "அவராகச் சொன்னால் சரி. நாமாகக் கேட்டால்,வேறு வேலை இல்லையா என்று திட்டி விடுவார்ப்பா" என்றாள்.

ஆனால், அத்தோடு விடுகிறவள் என்றால், அவள் சுபாங்கி அல்லவே!

எனவே, நர்மதா வீட்டு வக்கீலையே நேரில் போய்ப் பார்த்தாள், அவள்.

நர்மதாவுடைய தோழி என்றதும், ஏதோ சட்ட நுணுக்கங்கள் பற்றிச் சும்மா விசாரிக்க வந்திருக்கிறாள் என்று எண்ணி, அவளை வரச்சொல்லிப் பேசினார்.

ஆனால், அவள் கேட்ட விவரங்களைத் தர, அவர் ஒரேடியாக மறுத்துவிட்டார்.

"கவனி நர்மதாப் பெண்ணுடைய சினேகிதிப் பெண்ணே. வக்கீலும், டாக்டரும்,அவர்கள் எடுத்துக் கொள்ளும் கேஸ்கள் பற்றி, சம்பந்தப்பட்டவர்கள் சம்மதம் இல்லாமல் மற்றவர்களிடம் சொல்லக் கூடாதும்மா? சட்டப்படி அது குற்றம்,தெரியுமா? தொழில் ரகசியம்மா. அதை நாங்கள் காத்தாக வேண்டியது கட்டாயம்! ஏதவாது சட்டப் பிரச்சினை என்றால், சொல்லு. நர்மதாவுக்காக, இலவசமாகவே செய்து தருகிறேன். மற்றபடி வேறு எதையும் கேட்டுக் குட்டையை குழப்பாதே" என்று அவளுக்கு உதவ அடியோடு மறுத்துவிட்டார்.

இந்த அளவிலும், சுபாங்கி விட்டுவிடுவதாக இல்லை.

எப்படியும் உண்மை வெளிப்படத்தான் போகிறது. பலநாள் திருடன், ஒருநாள் அகப்பட்டுத்தான் தீர வேண்டும் அல்லவா?

எப்போதும், எதிர் வீட்டில் ஒரு கவனத்தை வைத்துக்கொண்டே செயல்பட்டாள்!

இப்படிப் புதுக்குடித்தனக்காரன் ஆனந்தன் மேல் கவனத்தை

வைத்திருந்தது. அவள் மட்டுமல்ல. அந்தக் குடியிருப்பில் வசித்த இன்னொரு பெண்ணுக்கும் அவன் மீது ஒரு கண் இருந்தது. காரணம்தான் வேறு.

புதிதாகக் குடி வந்த ஆனந்தனின் பெரிய கார்தான் அவளை முதலில் கவர்ந்தது எனலாம். அடுத்து, அந்த ஃப்ளாட்டை விலைக்கு வாங்கிக்கொண்டு, சொந்தக்காரனாக வந்திருக்கிறான் என்ற விவரம், கொசுறாக அவனது தோற்றம்! மேலே அவனைப் பற்றி விசாரித்ததும், அவளுக்கு மிகவும் திருப்திகரமாகவே இருந்தது.

வயதுக் கனவுகள் தொடங்கியதில் இருந்து, அவள் இதற்காகத்தானே காத்திருக்கிறாள்! ஆனந்தனைப் போலச் சொத்து, பணம், அந்தஸ்து!

இவை அனைத்தும் அவளுக்குச் சொந்தமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கனவு கண்டபடி, அவனோடு பேசிப் பழகும் வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் அவள். ஒரே குடியிருப்பில் வசிக்கும்போது, அது ஒன்றும் கடினமல்லவே!

யோசிக்க, யோசிக்க, ஆனந்தன் இங்கே ஃப்ளாட் வாங்கிக் கொண்டு வந்ததே, தான் பணக்காரி ஆவதற்காகத்தான் என்று நம்பவே தொடங்கிவிட்டாள்.

ஆண்கள் மனஉறுதி அற்றவர்கள், அவர்களை எளிதில் வளைத்துவிடலாம் என்று நம்புவதற்கு அவளுக்குச் சான்று இருந்தது. ஆனால், வளைத்த பிறகு காலம் தாழ்த்தாமல், உடனே கல்யாணத்தை பண்ணிக் கொள்ள வேண்டும். இந்த அசட்டு மோனிகாவைப் போல, பொறியில் மாட்டிய எலி தப்பிச் சென்று இன்னொரு வலையில் மாட்ட இடம் கொடுத்துவிடக் கூடாது. அப்புறம், உட்கார்ந்து அழவும் கூடாது!

பக்கத்திலேயே இருக்கும் மோனிகா, அந்தக் கீழ் வீட்டு சுபாங்கி போல இயற்கையிலேயே அதிக அழகு இல்லாவிட்டாலும் ராணிக்கு தன்னை நன்கு அழகுபடுத்திக் கொள்ளத் தெரியும்.

அதை வைத்து, இங்கே தனியே குடி வந்திருக்கும் ஆனந்தனை, ஒரே பிடியாகப் பிடித்துவிட வேண்டியதுதான் என்று அவள்



பெரிதாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தபோதுதான், அந்தக் குடிகாரன் சுகேசன் தகப்பனோடு சண்டை போட்டுக் கீழே விழுந்து, ஆனந்தனின் வீட்டுக்குள்ளேயே போய் ஐக்கியமாகி விட்டான். இனி, இப்போதைக்கு அந்த வீட்டுப் பக்கம் போவது சரிப்படாது.

இவன் வெளியேறி, அந்த ஆனந்தனின் நடவடிக்கைகள் பழக்கமாகி, சற்று மெல்லத்தான் வேலையைத் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தாள் அவள்.

ஆனந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு அவசரமாக வீட்டுக்குள் சென்ற செந்திருவுக்கு, அங்கே காணப்பட்ட அமைதி, நிம்மதியைத் தந்தது, மாத்திரையின் வேகத்தில் தூங்கிக் கொண்டிருந்த கணபதியும் விழித்திருக்கவில்லை. குளிப்பாட்டி உணவு கொடுத்துத் தொட்டிலில் கிடத்திய குழந்தையின் துயிலும், முழுதாகக் கலைந்திருக்கவில்லை.

எண்ணைக் குளியல், அடித்துப் போட்ட மாதிரி, ஒரு மணி நேரத்துக்கும் மேலாகக் குழந்தை தூங்குவாள்தான். ஆனால், சின்னக் குழந்தை,ஏதோ அரவம் கேட்டு... கனவு கண்டு விழித்தால்கூட, அதனால் தனக்காக என்ன செய்ய முடியும்? அழுவது தவிர!

பிள்ளை சிரிக்கும்போதே, முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிற மனிதர். அழ வேறு செய்துவிட்டால், வேறே வினையே தேவையில்லை!

நல்லவேளையாக அப்படி எதுவும் நேர்ந்துவிடாமல், கடவுள் காப்பாற்றினார்.... இல்லை, கடவுள் மாதிரி அந்த எதிர் விட்டுப் பிள்ளை காப்பாற்றினான்.! நன்றாக இருக்கட்டும்!

லேசாக அசைந்த குழந்தையை மெல்லத் தட்டிக்கொடுத்து தூங்க வைத்துவிட்டு, முன்னறைக்கு வந்தால், சுபாங்கியும் தந்தையை எட்டிப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தாள்.

ஆறுதலான மூச்சுடன் “நல்லவேளையாகச் சரியான நேரத்தில் திரும்ப வந்திருக்கிறோம். பவித்ரா நெளியத் தொடங்கியிருந்தது. எதிர் வீட்டுத் தம்பி மட்டும் நினைவு சொல்லவில்லை என்றால்,

அப்பாவிடம் சரியாக மாட்டியிருப்போம். அந்தப் பிள்ளையால் தப்பித்தோம்" என்றாள் தாயார் நிம்மதியோடு.

சுபாங்கிக்கு ஒன்றும் ரசிக்கவில்லை. இப்போதுள்ள சூழ்நிலையே அவளுக்குப் பிடிக்கவில்லை.

எப்படியாவது அண்ணனை இங்கே அழைத்து வந்துவிட வேண்டும் என்று அன்னைக்கு நன்றாக உருவேற்றிக் கூட்டிக் கொண்டு போனால், அவள் நினைத்தது போல எதுவும் நடக்கவில்லை.

எதிர்வீட்டுக்காரனைப் பற்றிய ஓர் எச்சரிக்கை உணர்வையேனும் உண்டாக்கி விடலாம் என்று முயன்றால், அந்த ஆனந்தன் பேசிய விதத்தில், அவன் சொல்லே வேதம் என்கிற அளவுக்கு அன்னை போய்விட்டாள்!

அப்படியொரு நடிப்பு! அவளுக்கே புத்தி சொல்கிறான்! அவளுக்கு 'நினைவிருந்தால் சரி'யாமே!

மகளின் மனம் புகைந்து கொண்டு இருப்பது தெரியாமல், ஆறுதலான ஒரு பெருமூச்சு விட்டு "லட்சுமி போன பிறகு, கையொடிந்த மாதிரி இருந்தது. நல்லவேளையாக வந்திருப்பவன், ரொம்பவும் நல்ல பிள்ளை!" என்றாள் செந்திரு, மகிழ்ச்சியோடு.

எத்தனை 'நல்லவேளை'!

என்றைக்குக் காலை வாரப்போகிறானோ என்று எண்ணியபடி, "நல்லவரோ, இல்லையோ, மனிதர் ரொம்ப கெட்டிக்கார ஆள், அம்மா. சந்தடி சாக்கில் வரப் போகிற பொண்டாட்டி, இன்னும் பிள்ளை வரை, நன்றியோடு வேலை பார்க்க ஆளுக்கு, இப்போதே பதிவு செய்து வைக்கிறாரே!" என்று 'நிந்தா ஸ்துதி' என்பார்களே, அதுபோலப் பாராட்டுகிற மாதிரி மட்டம் தட்டிச் சிரித்தாள் பெண்.

புரிந்து கொண்டு "சேச்சே! என்னடி பேச்சு, இது? நம்நிலைமை உணர்ந்து நல்ல மனதோடு உதவிக்கு வந்திருக்கிறான். நாம் அவமானமாக உணரக்கூடாது என்று ஒரு சொந்தமாகப் பழகினால்..."

"அதுதானம்மா, ஏன் என்கிறேன்! பார்த்து ஐந்தே நாட்களில்



சொந்தமாகத் தோன்றி விடுமா? இப்படி யோசியுங்கள்! பெற்ற தகப்பனாரையே அடித்துப் போட்ட குடிகாரன்! அவன் தன்னையும் அடித்துப் போட மாட்டான் என்று அந்த ஆளுக்கு என்ன நிச்சயம்? எந்தத் தைரியத்தில் உள்ளே கூப்பிட்டுப் படுக்க வைத்தார்? எனக்கென்னமோ அந்தஆள் ஏதோ உள் நோக்கத்தோடயே பழகுவதாகவே தெரிகிறது! அது என்ன என்று தெரியும்வரை, எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்"

"எப்படியோ இருக்கட்டும், சுபா. இப்போது அண்ணனை அழைத்து வந்தால், வீட்டுக்குள் தீபாவளிப் பட்டாசைக் கொளுத்திப் போட்டது போல ஆகிவிடும். அதனாலே அந்தத் தம்பி வீட்டிலேயே சுகேஷ் இரண்டு நாட்கள் இருக்கட்டும். மற்றதை அப்புறம் பார்க்கலாம்!" என்று தாயார் முடித்துவிட, மறுத்து ஏதோ சொல்ல வாயெடுத்த சுபாங்கி, அதைச் சொல்லாமலே வாயை மூடி, அமைதி காத்தாள்.

அங்கேதான் ஒருத்தன், அம்மாவைக் கஷ்டப்படுத்தாதே என்று மண்டையில் அடித்தாற்போலச் சொல்லி அனுப்பியிருக்கிறானே!

ஆனால், அவள் சொன்னது தாயைச் சற்றேனும் குழப்புவதற்காகத்தான். ஆனால் அவளுக்கே, இப்போது அந்த சந்தேகம் வந்தது. அவளுடைய குடிகார அண்ணன், அவனையுமே தாக்க மாட்டான் என்று, அந்த ஆனந்தனுக்கு என்ன நிச்சயம்? குறைந்த பட்சமாக தூங்கும்போது அடித்துப் போட்டால்?

இந்த எண்ணம், அந்த ஆனந்தனுக்கும் வராமலா இருக்கும்? அதையும் மீறி, இதில் என்ன ஆதாயத்தை, அவன் எதிர்பார்க்கிறான்?

நேரிலேயே கேட்டுவிடலாமா? ஆனால், வருகிற பதில் உண்மையாக இருக்கும் என்பதற்கு என்ன உத்திரவாதம்? பதிலை நம்ப முடியாதபோது, கேள்வி கேட்பதால் என்ன பயன்?

சந்தேகம் இருப்பது தெரிந்தால், ஆனந்தனும் எச்சரிக்கை அடைந்து விடுவான்.

அதனால், ஒன்றுமில்லை என்ற எண்ணத்துடன் அவன் ஏதாவது தவறு செய்யட்டும் என்று காத்திருப்பதுதான், இப்போதைக்கு

உசிதமான உத்தி!

சுபாங்கியின் மனதில் இத்தனை யோசனைகள் ஓடுவதை அறியாமல், அவ்வப்போது சுகேசனிடம் ஒரு பார்வையுடன், ஆனந்தன் தன் வேலைகளைத் தொடர்ந்து செய்யலானான்.

இடையில் ஒருதரம், சுபாங்கி வந்து, அவர்கள் இருவருக்குமான மதிய உணவைக் கொடுத்துவிட்டுப் போனாள்.

ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல், அவள் சென்றதும், அவனுக்கு உறுத்தலாகத்தான் இருந்தது. ரொம்பவும் வருத்தப்படுத்தி விட்டானா?

மதியம் இரண்டு மணிக்கு மேல், ஒருவாறு சுகேசனின் தூக்கம் கலைந்தது.

திகைத்துவிழித்து "யார் நீங்கள்? இங்கே எப்படி வந்தேன்?" போன்ற கேள்விகள் எல்லாம் கேட்டு, பதில்களை அறிந்து ஒருவாறு நிலைமையை அறிந்தபின், ஒரு பெருமூச்சுடன், தலையணையிலேயே சாய்ந்து அமர்ந்தான் அவன்.

படுக்கையைத் தடவி, "இது உங்கள் படுக்கை, எனக்குத் தந்துவிட்டு... நீங்கள் கொஞ்சமாவது தூங்கினீர்களா சார்?" என்று சிறு வருத்தத்துடன் வினவினான்.

ஒரே தலைவலி, ஆ ஊ என்று அலறுவதை விட்டு, அவனைப் பற்றியல்லவா விசாரிக்கிறான்!

சற்று ஆறுதலாக உணர்ந்து "என் சோஃபா நீளமானது. தூக்கத்தில் உருளல், புரளல் பழக்கம் இல்லாததால், எனக்குத் தூக்கத்தில் பிரச்சினை இல்லை. வாருங்கள், உங்கள் தாயார் உணவு அனுப்பியிருக்கிறார்கள். உங்களோடு சேர்ந்து எனக்கும். பல நாட்களுக்குப் பிறகு, வீட்டுச் சாப்பாடு. சேர்ந்து சாப்பிடலாம் என்று காத்திருந்தேன், வாருங்கள்" என்று தயக்கமாகப் பார்த்தவனை வற்புறுத்தி, அழைத்துப் போய், ரசம் சாதம் சாப்பிட வைத்தான்.

அவனுடைய தாயாரின் சமையலைப் போல, இந்தத்தாயின் கைப் பக்குவமும் சுவையாகவே இருந்தது.

சாப்பிட்டபின், பாத்திரங்களை எடுத்து வைப்பதில் சுகேசன்



உதவி செய்ய முன் வந்ததும், ஆனந்தனுக்கு ஆச்சரியமே.

ஆனால் மற்றவனின் சோர்வு புரிந்து, அவனைச் சும்மா இருக்கச் சொல்லிவிட்டு, தானே எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்தான்.

மற்றவனின் களைத்த முகத்தில் வருத்தமும் தெரியவே "கவலைப்படாதீர்கள். அலுவலகப் பணியாள் ஒருவனுடைய தாயார் அருகில்தான் வசிக்கிறாள். மாலையில் வந்து எல்லாம் சுத்தம் செய்துவிட்டு, மீதம் இருப்பதை எடுத்துப் போவாள். பிரச்சினையற்று ஓய்வெடுங்கள்" என்று படுக்கை அறையைக் காட்டினான்.

சற்று திகைத்து நோக்கியவனின் முகம் கன்றிக் கவிழ்ந்தது.

"அப்பாவுக்கு ரொம்ப அடியா? எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தான்.

வியப்பை மறைத்துக்கொண்டு "காலில் லேசான சுளுக்கு. மற்றபடி பெரிதாக ஒன்றுமில்லை. சுளுக்குக்கு 'பெட் ரெஸ்ட்!' என்று சற்று இலகுவாகக் காட்டி விவரம் சொன்னான்.

"ஓ!"என்றவன் கண நேர அமைதிக்குப் பிறகு, சின்னக் குரலில் ஆனந்தனுக்கு நன்றி சொன்னான் "என்னால் கற்பனை செய்ய முடிகிறது. ரொம்ப முக்கியமான சமயத்தில், மிகவும் தேவைப்பட்ட உதவி செய்திருக்கிறீர்கள். ரொம்ப ரொம்ப நன்றி சார். அம்மாவும் சொல்லியிருப்பார்கள். ஆனால்... பாவம் அம்மாவுக்குத்தான் என்னால் மிகவும் மனக் கஷ்டம். ஆனால்..." என்று மீண்டும் ஒரு பெருமூச்சில் முடித்தான் சுகேசன்.

இரண்டு நாட்களும் இங்கேயே தங்குவது பற்றிச் சொன்னதும், தான் சோஃபாவில் படுத்துக் கொள்ள சுகேசன் முன் வந்தான். ஆனால் அவன் படுக்கையில் உருண்டு புரண்டு படுப்பதைச் சொல்லி, ஆனந்தன் அதற்கு மறுத்து விட்டான்.

அவனிடம் பேசாமல் படுத்து ஓய்வெடுக்கும்படிச் சொல்லிவிட்டு, மிச்சம் இருந்த வேலையை முடித்துவிட்டுப் பார்த்தால், படுக்கையில் சாய்ந்து அமர்ந்து, வெற்றுப் பார்வையாய் வெளியை வெறித்துக் கொண்டிருந்தான் சுகேசன்.

அறையினுள் சென்று, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தவன், சிறு அமைதியின் பின், "என்ன சுகேசன், எதை மறக்க இந்த முயற்சி?" என்ற குடிபோலச் சைகை செய்து காட்டிக் கேட்டான்.

உதவி செய்தோம் என்று, சொந்த விஷயத்தில் மூக்கை நுழைக்காதே என்று அவனுடைய தங்கைபோல, முகத்தில் அடித்தாற்போல சொல்லவும் செய்யலாம். ஆனால், ஆனந்தனுக்கு விவரம் அறிய வேண்டியிருந்தது. குடி தவிர, வேறு எதிலும் ஒற்றுமை இல்லாத இவனும் அவன் தங்கையும் எப்படி இணைந்தார்கள்?

விசித்திரமாக வகையில், சுகேசனைப் பார்க்க, அவனுக்குப் பரிதாபமாகவும் இருந்தது. நன்றியுணர்வு, பாசம், கூச்ச நாச்சங்கள் எல்லாம் இருப்பவனான இவன், எழிலரசியிடம் எப்படி மாட்டினான்?

ஒரு மட்டம் தட்டலுக்குத் தயாராக ஆனந்தன் காத்திருந்தால், வியப்பும், வேதனையுமாகப் பார்த்து நன்றி சொன்னான் மற்றவன்.

மறுபடியும், அங்கே தங்க விட்டதற்காகவோ என்று ஆனந்தன் யோசிக்கும்போதே, சுகேசன் வேறு சொன்னான்.

"எனக்குள் ஒரு வலி இருக்கும், அதை மறக்கவே குடிக்கிறேன் என்று புரிந்து கேட்பவர் நீங்கள் மட்டும்தான் சார். வீட்டில் எல்லோரும் என்னவோ நான் ஆசைக்குக் குடிக்கிற மாதிரி நினைத்துத் திட்டுகிறார்கள். ஆனால், என் துன்பம் யாருக்குத் தெரியும்?" என்றான் வருத்தத்துடன்.

"சொன்னால்... சொல்ல விரும்பினால் சொல்லுங்கள். குறைந்த பட்சமாக, நான் தெரிந்து கொள்ளுகிறேன்."

வேதனையோடு ஒருதரம் கண்களை இறுக மூடித் திறந்தான் சுகேசன். பிறகு, "சொல்லுகிறேன் சார். என்னைப் புரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கேட்பதால்... கூடவே, எனக்கும் தனியனாக இந்தச் சுமை தாங்கித் தாங்கி, மனம் வெறுத்து விட்டதால் சொல்கிறேன்" என்று தொடங்கினான்.

தொடங்கினானே தவிர, மேலே தொடர்வது அப்படி ஒன்றும்



அவனுக்கு எளிதாக இருக்கவில்லை.

"நா...ன் வந்து... வந்து..." என்று இருமுறை தடுமாறி விட்டு, தலையசைத்து, வேறு விதமாகத் தொடக்கத்தை கூறலானான். "நேற்று நீங்கள் பார்த்தீர்களா, ஆனந்தன்? அந்த சமயத்தில் மாடிக் கதவு திறந்து, ஒரு பெண்... பேரழகி, பாதிப் படியிறங்கிக் கண்ணீருடன் நின்றாளே, பார்த்தீர்களா? அந்த அழகு காந்தம் போல இழுக்குமே! பார்க்காமல் எப்படி இருக்க முடியும்?" என்று அவளது அழகிலேயே நின்றான் அவன்.

"ம் பார்த்தேன் மேலே சொல்லுங்கள்" என்று அடுத்த கட்டத்துக்குச் செல்லுமாறு ஊக்கினான் ஆனந்தன்.

அவனுனும் தொடர்ந்தான். "அவள் குடும்பமும் எங்கள் குடும்பமும் நெருங்கிய நட்பு. இரண்டு தலைமுறை நட்பு! அப்பாக்கள் நண்பர்கள், அம்மாக்கள் சினேகிதிகள். மேலே கேட்க வேண்டுமா? விடுமுறை நாட்களில் சேர்ந்து கும்மாளம் அடிப்போம். வேற்று மதம் என்ற எண்ணமே வந்ததில்லை. அவரவர் ஊரில் மரியாதைக்குரிய பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என்றாலும், நாங்கள் காதலிக்கும்வரை, அந்த மதம், ஜாதி, வேறுபாடு யாருக்கும் நினைவு வந்ததே இல்லை. விஷயம் வெளியானதும் வழக்கம் போலப் பெற்றோர் தடை. நாங்களும் விடவில்லை. இரண்டு ஆண்டுகளாகப் போராட்டம். கடைசியில் என் வீட்டில் கொஞ்சம் இளகினார்கள். அவள் அப்பாதான் இழுத்தடித்தார். இடையே எனக்கு மும்பையில் நல்ல வேலை கிடைத்தது. என்னைச் சனியன் பிடித்தது அங்கேதான்..."

பெயர் குறிப்பிடாவிட்டாலும், தங்கையைச் சொல்கிறான் என்று, ஆனந்தனுக்குப் புரிந்தது. என்னதான் வீட்டில், அவளை இதே வார்த்தை சொல்லியே குறிப்பிட்டபோதும், இல்லாத இடத்தில் திட்டினாலும், இன்னொருவர் அந்த வார்த்தை சொல்லும்போது, ஆனந்தனுக்கு ஒரு மாதிரிதான் இருந்தது. சமாளித்துக் கொண்டு, அடுத்தவன் பேச்சைக் கவனித்தான்.

".... 'நல்ல எதிர்காலத்துக்கு வழி, இங்கே நான் பார்த்துக்

கொள்கிறேன், நீங்கள் தைரியமாகப் போய் வாருங்கள்' என்று என்னை அனுப்பி வைத்ததே மோனிதான்"

மோனி? எதன் சுருக்கம்? மோகினியா, அல்லது... என்று ஆனந்தன் யோசிக்கும்போதே, விளக்கமும் வந்தது.

"அங்கே ஒரு மாலில் கையில் ஒரு குளிர்பானத்தோடு அமர்ந்து மோனிகாவோடு பேசிக் கொண்டிருந்தேன். கேட்கிறவர்களுக்குப் புரிகிற மாதிரி, அவளோடு நான் பேசியிருக்கக் கூடாது. அவளைப் பார்க்கக்கூட முடியாத தனிமை வாட்ட, கொஞ்சம் அதிகமாகவே பேசி விட்டேன்"

"இருந்திருந்து, என் பேச்சு, அந்தப் பேய் காதில் அப்படியே விழுந்திருக்கிறது...

"மோனியைப் பார்க்க இயலாத நிலை., இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒத்துக் கொள்ளாத தேவதாசன் அங்கிள், காலம் முழுதும் இப்படியே இருந்துவிட்டால்? இதையெல்லாம் மீறி ஜெயிக்கிற அளவு நமக்குத்தான் தகுதியில்லையோ என்று என்னைப் பற்றியே நம்பிக்கையிழந்து ஏதேதோ நினைத்து வருந்திக் கொண்டிருந்தபோது, அவளாக வந்து அருகே உட்கார்ந்தாள். கொஞ்சம் ஒட்டியே

"ஆண் பெண் பேதமின்றி அருகில் அமர்வது, இப்போதெல்லாம் ஒன்றுமில்லை என்றாலும், அவ்வளவு நெருக்கம் அதிகமே.

"கேள்வியாகப் பார்த்தபோது, யாரோ ஓரங் கட்டுவதாகவும், என்னைப் பார்த்தால் கௌரவமானவனாக, அதேசமயம் பிரச்சினை வந்தால் காப்பாற்றக் கூடிய ஆண்மை உள்ளவனாகவும் தோன்றியதால், உரிமை போலக் காட்டக் கூடிய மாதிரி அவ்வளவு பக்கத்தில் அமர்ந்ததாகவும் கூறினாள். ஓர் இளம் பெண், அதிலும் அவ்வளவு அழகான பெண். மற்றவர் பார்க்க, அவளோடு பேசுவதே பெருமைதான். அதிலும், உச்சி குளிர வைத்த அவளது வார்த்தைகள்! அதிலேயே எனக்குக் கொஞ்சம் தலை சுற்றிவிட்டது என்று நினைக்கிறேன்... கொஞ்சமில்லை, நிறையவே!"

நடந்த தவறுக்கு, ஏதேதோ காரணம் கண்டுபிடித்துத்



தன்னைத்தானே சுகேசன் சமாதானம் செய்து கொள்கிறான் என்று ஆனந்தன் எண்ணினான்.

ஆனால், தங்கையைப் பற்றித் தெரியும் என்பதால், சுகேசனை ஒரேடியாகக் குறைத்து மதிப்பிடவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆணோ, பெண்ணோ, நினைத்துவிட்டால், யாரை வேண்டுமானாலும் வசியம் செய்ய, எழிலரசியால் முடியும் என்பது, அவன் அறிந்ததே! அவர்களுடைய வக்கீல், பெண்கள் காவல் நிலைய இன்ஸ்பெக்டர், மன்றத் தலைவி... எத்தனை பேர்! பிறகு, அவளது சுயரூபம் வெளிப்பட்டதும், விழுந்தடித்து ஓடியவர்கள், அவர்களில் எத்தனை பேர்? எல்லோருமேதானோ?

அப்படித்தான் அவனுக்கு ஞாபகம்.

சுகேசன் அப்படி ஓடி வந்தானா? அல்லது கடைசி வரை கூட இருந்தானா?

இல்லை. இறுதிக்கு முன்பே, இருவரும் பிரிந்திருக்க வேண்டும். மற்றபடி, அவனைப்பற்றி ஆனந்தனிடம் சொல்லியிருப்பார்கள்.

"இரண்டு பேருமாகச் சேர்ந்து சற்று நேரம் சுற்றினோம். பெற்றோர் இல்லாத அனாதையான அவளை வளர்த்த கார்டியனே தப்பாக நினைப்பதாகக் கண்ணீர் விட்டாள். ஊகூம் கட்டுப்பாட்டோடு கண்ணீரை அடக்கினாள். அதுதானே, அவனுக்கு உயர்வாகத் தோன்றியது..."

அனாதையா? மகளைக் காணோமே என்று, இரவெல்லாம் கண் விழித்துக்காத்திருந்த தாயை நினைக்கையில், ஆனந்தனுக்கு ரத்தம் கொதித்தது. ஆனால், நினைத்ததைச் சாதிப்பதற்காக, என்ன வேண்டுமானாலும் செய்யக் கூடிய தங்கையின் குணத்துக்கு, இந்த வார்த்தைகள் ஒன்றும் பெரிதல்ல!

கை முஷ்டியை இறுக மூடி தன்னைச் சமாளித்து, மேலே சுகேசனின் பேச்சைக் கேட்டான்.

"கிளம்புமுன், நன்றி கூறிக் கன்னத்தில் முத்தமிட்டாள். அடிக்கடி சந்தித்தோம். சினிமாவுக்குப் போனோம். அங்கே அவள்... அவள் என்னிடம் மயங்கிவிட்டதாக நினைத்தேன். நானும்... சரியென்று

சொல்லவில்லை. பித்துப் பிடித்தது போல அன்றிருந்த நிலையில், எனக்கும்... எனக்கும் ஒ...ஒரு பழக்கம் வேண்டியிருந்தது. ஆனால், அவளை ரொம்பவும் நம்பியதற்குக் காரணம் வேறு. ஒரு மாதிரிப் பெண்கள் என்று எச்சரிக்கையோடு இருப்போமே, அதுபோல என்னைச் செலவு செய்ய வைக்கவில்லை. என்னை உறிஞ்சித் தின்னாததோடு, ஒரு பைசா நான் செலவு பண்ண விடவுமில்லை.

"தினமும் எங்கெங்கோ சுற்றினோம். எந்த இடத்திலும், என்னை முந்திக்கொண்டு ஆயிரங்களை அள்ளி வீசுவாள்!"

ஏன் வீச மாட்டாள் என்று திகைப்புடன் எண்ணினான் ஆனந்தன். அதுதான் அவள் கையில், சின்னத் தாத்தாவின் பணம் கோடிகளில் இருந்ததே! அறிவு முதிர்ச்சி அடையாத நிலையில் கணக்கு வழக்கற்ற பணத்தைக் கையில் கொடுப்பது எவ்வளவு ஆபத்தாகி விடுகிறது! பாசம் கண்ணை மூட, சின்னத் தாத்தா எவ்வளவு பெரிய பிழை செய்துவிட்டார்!

மேலே நடந்ததை எப்படிச் சொல்வது என்று தயக்கமோ, குழப்பமோ? சுகேசன் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக அறைக்குள் இருமுறை நடந்தான்.

ஒரு முடிவுக்கு வந்தவன் போல, மறுபடியும் ஆனந்தனின் எதிரே வந்து அமர்ந்தான். "இதற்கு என்னைச் செருப்பாலேயே அடிக்க வேண்டும் சார்" என்று கசப்பும், வெறுப்பும், கூடவே வேதனையும் நிறைந்த குரலில் மறுபடியும் தொடங்கினான்.



## பேசும் பொற்சித்திரமே 6

என்ன வரப்போகிறது என்று, ஆனந்தனால் ஓரளவு ஊகிக்க முடிந்தது.

கேட்பதற்கு கொஞ்சமும் பிடிக்கவும் இல்லை.

ஆனால், அவனுக்கு விவரம் தெரிந்தாக வேண்டியிருந்தது. அதற்கேற்ப, சில பல விஷயங்களை அவன் திட்டமிட வேண்டியிருந்தது. தாயாரின் ஆசை, எந்த அளவுக்கு அது சரி வரும்



என்பதெல்லாமே, முழு விவரங்களும் தெரிந்து, அதன்பின் முடிவு செய்யப்பட வேண்டியவைகளே.

ஆனந்தனின் மௌனத்தில் என்ன ஊகித்தானோ, "என்ன சார், கேட்க ரொம்பவும் அருவருப்பாக இருக்கிறதா? இப்படிப்பட்ட மனிதனை வீட்டுக்குள் வரவிட்டோமே என்று தோன்றுகிறதா?" என்று சுகேசன் வருத்தத்துடன் கேட்டான்.

இவனது வீழ்ச்சியின் காரணம், தன் தங்கை என்று அறியும்போது, என்ன சொல்லப் போகிறானோ என்று எண்ணியதை மறைத்து "ஒரே தப்பு மழை பொழிகிறீர்களே, சுகேசன்! முதலில் நான் 'சாரி'ல்லை ஆனந்தன். அடுத்தது, கொலை செய்தவன் கூடத் திருந்தி வருந்தினால் மன்னிக்க வேண்டும் என்கிறார்கள். நீங்கள் அதற்குக் கிட்டே கூடப் போகவில்லையே! பிறகு எதற்கு, இந்த மாதிரிக் கேள்விகள்?" என்று மற்றவனை அமைதிப்படுத்தினான் ஆனந்தன்.

ஆனால் செய்த பிழை உறுத்த "இதுவும் கொலைதான், ஆனந்தன். மோனி என்மேல் வைத்த காதலைக் கொலை செய்திருக்கிறேன். அப்பா, அம்மா, சுபா எல்லோரும் என்மேல் வைத்த நம்பிக்கையை, அடியோடு நாசம் செய்திருக்கிறேன். எப்படிப்பட்ட தப்பு! எனக்கும் கடமை, கட்டுப்பாடு... அதை நடத்தும் மூளை எல்லாம் உண்டுதானே? எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, அந்த மடத்தனத்தை எப்படிச் செய்தேன்? கடவுளே!" என்று நெற்றியில் அறைந்து கொண்டான் சுகேசன்.

அவனது கையைப் பற்றி நிறுத்தி, "நடந்து போன விஷயம், சுகேசன். ஏன் செய்தேன் என்று வருந்துவதை விட, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிப்பது மேல் அல்லவா?"என்றான் ஆனந்தன்.

"எதுவும் செய்ய முடியாது. முழுதும் கேட்ட பிறகு, உங்களுக்கும் புரியும்!" என்று தன் கடந்த காலக் கதையை மறுபடியும் சுகேசன் சொல்லலானான்.

"ஒரு நாளைக்கு, என்னிடம் விடை பெற்றுக் கொள்ளவே பிடிக்கவில்லை என்று கூடவே தங்கிவிட்டாள். அந்தப் பேய்! கூடத் தங்குவது என்றால்,... புரியும் என்று நினைக்கிறேன். அன்றுதான்...

அவளோடு இருக்கும் சமயத்தில், எங்கள் திருமணத்துக்கு தன்னுடைய தந்தையும் சம்மதித்துவிட்டதாக என் மோனி... என் தேவதை ஃபோன் செய்தாள். அவளுக்கு நான் பதிலே சொல்லவில்லை. பிறகும் தொடர்பு கொள்ளவில்லை. மோனி சில முறை முயன்றபோது 'கட்'செய்தேன். தோழிக்காகப் பேச முயன்ற சுபாவுக்கும், அதே மரியாதைதான். நேரே விஷயத்தை எடுத்துச் சொல்லும் தைரியம் கூட எனக்கு இருக்கவில்லை.

"திடுமென ஒருநாள், திருமணம் என்கிற எண்ணமே இல்லை. ஆனால் நமக்கு பிள்ளை வேண்டும் என்றாள். என்னவோ, அப்போது என் மூளை கொஞ்சம் வேலை செய்தது. திருமணம் இல்லாமல் பிள்ளை கூடாது என்றுவிட்டேன்.

"அவளுக்குத்தான் தன் விருப்பம் நிறைவேறுவது தவிர, வேறு எதிலும் மதிப்புக் கிடையாதே. உடனே திருமணத்துக்கு ஏற்பாடு செய்தாள். ஏதோ கோயில், பிள்ளை பெறுகிறவரை டாக்டரிடம் செக்கப், பயிற்சி எல்லாம் செய்தாள்...

"ஆனால் பிறந்த பிள்ளையை தொட்டும் பார்க்கவில்லை. அது அழுவது எரிச்சலாய் இருக்கிறது என்று ஒரே கூப்பாடு! ஒரு தாயாய் இருந்துகொண்டு இப்படி பேசுவதா என்றதற்குத்தான் தலையில் இடியைப் போட்டாள்.

"அன்றைக்கு, அவளை முதல் தடவையாகச் சந்தித்த அன்று, முன்னதாக நான் மோனிகாவிடம் கொஞ்சி கொஞ்சிப் பேசுவதை கேட்டாளாம். அவள் என் பக்கத்தில், எதிரில் வந்தபோதும், நான் கண்டுகொள்ளவே இல்லையாம். குறுக்கும் நெடுக்கும் போய்ப் பார்த்திருக்கிறாள். ஊகூம். ஒரு பலனும் இல்லை! ரொம்ப அவமானமாக இருந்ததாம். ஒரு சவாலாக எடுத்து, அந்த காதலியிடம் இருந்து என்னைப் பிரிக்க நினைத்தாளாம். அப்புறம், பிள்ளை பெறுவதைப் பற்றி, ஆஹா, ஓஹோ என்கிறார்களே, என்னவென்று அதை அனுபவித்துப் பார்க்கவும் ஆசைப்பட்டாளாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் போல, இரண்டையுமே என்னிடமே வைத்துக் கொள்ள முடிவு செய்தாளாம். ஆனால், இரண்டுமே அப்படி



ஒன்றும் நன்றாக இல்லையாம். சலித்துவிட்டதால் விட்டுவிட்டுப் போகிறேன் என்றவள், போயே விட்டாள்.

அந்தப் பெண் என் தங்கை என்று சொல்ல, ஆனந்தனுக்கு ரொம்பவும் அவமானமாகவும், அருவருப்பாகவும் இருந்தது. கூடவே, அவளுக்கு போதைப் பழக்கம் உண்டே பிள்ளை நல்லபடியாகப் பிறந்ததா என்று அந்தக் கவலை வேறு. அதையும் எப்படிக் கேட்பது?

சும்மா இருக்கவும் முடியாமல், "நீங்கள் சொல்வதைப் பார்த்தால், வே...வேறு மாதிரி கெட்ட பழக்கங்களும் இருந்திருக்குமோ என்று தோ... தோன்றுகிறதே! அ...அதாவது இதை முயன்று பார்த்த மாதிரி, அவைகளையும் சுவை பார்த்திருப்பாளோ" என்றான்.

"விடுவாளா?" என்றான் மற்றவன், "எனக்கே தண்ணியடிக்கக் கற்றுக் கொடுத்தவள் ஆயிற்றே! அவள் குடிக்காமல் இருப்பாளா? திடீரென்று அது பிடிக்காமல் போய்விடும். சிகரெட்டை ஊதித் தள்ளுவாள். அப்புறம் உட்கார்ந்து ஊசி போட்டுப் போதையேற்றிக் கொள்வாள். கண்டதே காட்சி. கொண்டதே கோலம் என்பார்களே, நூறு சதவீதம் சரியான உதாரணம். ஏதாவது இரவு விடுதியில் ஆடிக்கொண்டு தண்ணியடித்தால், வீட்டுக்கே வரமாட்டாள்... என்ன?"

ஹீரோ அறியாததா? ஆனால், முகத்தின் கட்டுப்பாடு உடலுக்குத் தெரியவில்லை. அதிர்ந்துவிட்டது.

"ஓ...ஒன்றுமில்லை. இப்படியும் ஒரு பெண்ணா என்று..."

"ஆமாம் சார்... சார் இல்லை, ஆனந்தன். நடந்ததே என்றாலும் நம்புவது கடினம்தான். ஆனால், நீங்களாவது காது கொடுத்து கேட்கிறீர்கள். என் வீட்டில் யாரும் என்னிடம் பேசுவதே இல்லை. குழந்தை உண்டானதும் இதையெல்லாம் தடுத்தேன் என்றுதான் அரசிக்கு முதல் கோபம்! அதுவரை அவள் விருப்பம் போல நானும் ஆடிக் கொண்டுதான் இருந்தேன்! ஆனால் குழந்தை என்று வந்தபின், அதற்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் நான் கண்டிப்பாக இருந்தேன். பிறகுமட்டும் பிடிவாதமாக, ரொம்பக்

கவனமாக கண்காணித்தேன். வேலைக்கு லீவு போட்டுவிட்டு கூடவே இருந்ததில், வேலையையும் தொலைத்தேன். ஆனால், அவள் ஆசைக்கு அப்பப்போது பழகிய பழக்கங்கள்தான் என்பதால், அப்போது அவளை அதிகம் பாதித்திருக்கவில்லை. பிள்ளை பிறந்த பிறகுதான் வெறி பிடித்த மாதிரி, எந்நேரமும் அந்தக் கும்பலில் கிடந்து... உருண்டு...

"தொல்லை பண்ணாமல் விட்டுத்தொலை என்று, எல்லாவற்றிலும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டாள். குழந்தையை வேண்டாம் என்றது, அந்த நீதிபதிக்கே அதிர்ச்சி! தனி ஆளாய்ப் பிள்ளையோடு நான் என்ன செய்ய முடியும்? ஒழுங்காக இங்கே பிறந்திருந்தால், பேரக் குழந்தை என்று கொஞ்சியிருப்பார்கள். இப்போதும் என் குழந்தைதானே? ஆனால் பின்னறையில் வைத்து வளர்க்கிறார்கள்! நொந்து போய் வந்தால், எல்லோரும் என்னைக் கொலைகாரனைப் போல நடத்துகிறார்கள். வீட்டில் யாரும் என்னிடம் பேசுவதே இல்லை. என்ன நடந்தது என்று ஒருதரம் சொல்லக் கூட விடவில்லை. என் தங்கையும்தான்! மோனி அவளுடைய தோழி வேறா?

"ஜாதி மதப்பிரச்சினை வந்து அப்பா, அம்மா என்னை ஒதுக்கின போது கூட, அவள் எப்போதுமே அவள் என் பக்கம் இருந்தாள். ஆனால், இப்போது அவளும் விரோதியைப் போலப் பார்க்கிறாள்...."

"தோழியின் வேதனையைப் பக்கத்தில் இருந்து பார்த்திருப்பாளே!"

"ஆ...ஆமாமில்லை? அதுதான் காரணமாக இருக்கும். நான் செய்த தப்பும் பெரிதுதான். ஆனால், ரத்தபாசம் கூடவா இல்லாது போய்விடும்? என்னால் தாங்க முடியவில்லை, ஆனந்தன்! இப்போது மட்டும் கொஞ்சம் விஸ்கி குடித்தால்..." என்று அரற்றினான் சுகேசன்.

தங்கை பழக்கி வைத்த பழக்கம். மீட்பது, அண்ணனின் கடமையோ?

சுகேசனை நேரே பார்த்து "குடித்து? கெட்டு குட்டிச் சுவராகத்தான் இருக்கப் போவதாக, எல்லோருக்கும் இன்னும்



திட்டவட்டமாக அறிவிக்கப் போகிறீர்களா? நேற்று அடித்த கூத்துப் போதாதா? வேறே நல்ல விதமாக...." என்று கடுமையான குரலில் ஆனந்தன் பேசும்போதே, அழைப்பு மணி ஒலித்தது.

தலை குனிந்து அமர்ந்திருந்தவன், அழைப்பு மணி ஓசையில் திடுக்கிட்டு நிமிர்ந்தான். "உ...உங்கள் வீட்டுக்கு யாராவதுமா?" என்று தவிப்புடன் கேட்டான்.

மறுப்பாகத் தலையசைத்து, "உங்கள் தங்கை என்பது, என் ஊகம். நீங்கள் விழித்து விட்டால் கூட்டிப்போக..." என்றவன், முடிக்கு முன்பே "வேண்டாம், நான் தி...திரும்பவும் தூங்கிவிட்டதாகச் சொல்லுங்கள். எனக்கு உங்களிடம் பேச வேண்டும்" என்று படுத்துக் கொண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டான் சுகேசன்.

கதவைச் சாத்திவிட்டு, ஆனந்தன் யோசனையோடு போய்க் கதவைத் திறந்தான்.

அவன் எண்ணியதுபோல, சுபாங்கிதான். அழைப்பு மணியை விடுத்து, இப்போது கதவை மெல்லத் தட்டிக் கொண்டிருந்தாள். அவள் அழைப்பது ஊரெல்லாம் தெரிய வேண்டாம் என்று எண்ணினவள் போல.

அப்படித்தான் என்பதுபோல "அண்ணனைக் கூப்பிடுங்கள். கூட்டிப் போகிறேன்" என்றாள் தாழ்ந்த குரலில்.

'தூக்கம்' என்பதுபோல சைகை செய்தான் ஆனந்தன்.

"இன்னுமா? எவ்வளவு நேரம்? நேற்றிலிருந்து இன்னும் தூங்கினால், வயிறு காய்ந்து போகாது?" என்று படபடத்தாள் அவள்.

"ஈஸிம்மா. அவர் பட்டினி கிடந்ததாக, நான் சொன்னேனா? நல்ல ரசம் சாதம் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் தூங்கப் போவதாகச் சொல்லிப் படுத்துவிட்டார்" என்றான் அவன். சிரிப்பை உள்ளேயே அடக்கிக்கொண்டு, ஏனெனில், 'அப்படித்தான் சுகேசன் சொல்லச் சொன்னார்' என்ற வார்த்தைகள் அவனுள் ஓடிக் கொண்டிருந்தன. அதை மட்டும் உரக்கச் சொன்னால்... 'பொறி மத்தாப்பு' பத்தாயிரம் வெடிச்சரமாக அல்லவா மாறிவிடும்.!

ஆனால், அவள் சந்தேகமாக நோக்கி, "ஆனால்,

முணுமுணுவென்று பேசுவது, எனக்குக் கேட்டதே?" என்று வினவவும், ஆனந்தன் சற்றுத் திணறித்தான் போனான்.

நல்லவேளையாக படுக்கையறை ஏசி என்பதால், கதவு சாத்தியே இருக்கவே, பேச்சுத் தெளிவாகக் கேட்கவில்லை போலும்! கேட்டிருந்தால், அவனைத் தள்ளிவிட்டு அண்ணனைக் கைப்பிடியாக இழுத்துப் போயிருப்பாள்.

ஆனால் அவள் அண்ணன் இங்கே இருக்கக்கூடாது என்று, அப்படி என்ன பிடிவாதம்?

சலிப்பை முகத்தில் காட்டி "அடடடா! சனிக்கிழமை! வாரக் கடைசி! மனிதனுக்கு, அவனது சொந்த வீட்டில் ஒரு டீவி வைத்துப் பார்க்கக்கூடவா, உரிமை கிடையாது? இத்தனைக்கும், ஃப்ளாட் தர்மமாக நினைத்து, சத்தம் கூடக் ரொம்பக் குறைவாக வைத்திருந்தேன்!"

சுபாங்கியின் முகம் கன்றிய விதம், அவனுக்கு சற்று பரிதாபமாகத்தான் இருந்தது. ஆனால் அவளும் சும்மா 'ஙைஙை" பண்ணக் கூடாதுதானே? அவன் என்ன, அவளுடைய அண்ணனை முழுங்கிவிடவா போகிறான்?

அதிலும் சுகேசனோடான பேச்சு, முக்கியமான கட்டத்தில் இருக்கும் இந்த நேரத்தில்!

"சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்துப் போகிறேன். வழி விடுங்கள்"

"வேண்டாம். வேலைக்கு ஆள் வரச் சொல்லியிருக்கிறேன். அவள் சுத்தம் செய்தபின் அனுப்புகிறேன், அவ்வளவுதானே?"

இப்படி யாரையும் விரட்டுவது பண்பு கிடையாதுதான். ஆனால், இவளை உள்ளே விட்டால், சுகேசனைப் போய் எழுப்பி அழைத்துப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்புறம், இன்றைய வாய்ப்பு மீண்டும் கிடைப்பது அரிது.

வாடிய முகத்துடன் சுபாங்கி செல்வதைப் பார்க்கவும் பாவமாகத்தான் இருந்தது.

ஆனால், சுகேசன் அவனைப் பார்த்ததும், அவசரமாக எழுந்து



"ஆனந்தன் வேறே நல்லவிதமாக... என்று ஏதோ சொன்னீர்களே, அது போல என்ன இருக்கிறது?" என்று ஆவலும், கூடவே நிராசையுமாக கேட்டான், "உறவு, காதல் எல்லாமே போய்விட்டதே!"

"என்ன பேசுகிறீர்கள், சுகேசன்? உறவு இல்லாமலா, உங்கள் குழந்தையை வீட்டினர் பராமரிக்கிறார்கள்? காதல் இல்லாமலா, அந்தப் பெண் மாடிப்படியில் நின்று அழுதாள்? அதுவும் தந்தை கூப்பிடக் கூப்பிட? பெரிய பிழை ஒன்று செய்திருந்தாலும், இன்னமும் நீங்கள் நல்ல மனிதர்தான் என்று அவர்களுக்கு நிரூபியுங்கள். தங்கை தானாக வருவாள். மற்றவர்களும் திரும்பக் கூடும். அதைவிட்டு, இன்னமும் மோசமாக நடந்து காட்டினால், நீங்களே அவர்களை ஒரேடியாக விரட்டுவது போல ஆகாதா?"

திகைத்து விழித்தான் சுகேசன். "ஆனந்தன், நான் இதை, இப்படி நினைத்துப் பார்க்கவில்லையே! நடந்த தவறுக்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அத்தோடு, அந்தப் பெண்ணை விவாகரத்து செய்து, அடியோடு தலை முழுகிவிட்டு சுதந்திர மனிதனாக வந்திருக்கிறேன் என்பதை எடுத்துச் சொன்னதும், அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று, எண்ணிவிட்டேன். ஆனால் நான் சொல்வதைக் கேட்கக்கூட யாரும் தயாரில்லை என்று தெரிந்ததும், அந்த வேதனை, அந்த ஏமாற்றத்தை மறக்கத்தான்... அதுதான், அந்தப் பேய் கற்றுக் கொடுத்த வழியில்..."

"சரி சரி வேண்டாத பழைய நினைவுகள் இப்போது எதற்கு? நீங்கள் நல்லவராக இருந்து காட்டினால், மெல்ல மெல்ல ஒருவாறு..."

இப்போது குறுக்கிட்டவன் சுகேசன் "மெல்ல மெல்லவா? ஊகூம் எனக்கு இந்த 'மெல்ல மெல்ல'வில் நம்பிக்கை இல்லை, ஆனந்தன். மெல்லப் பெற்றோர் மனம் மாறும் என்று காத்திராமல், நாங்கள் அதிரடியாகத் திருமணம் செய்திருந்தால், இப்போது இரு தரப்பும் சமாதானமாகியிருப்பார்கள். இன்றைய துன்பத்துக்கு இடமே இருந்திராது!" என்றான் அவன். "அதிரடியாக... விரைந்து என்னை

நிரூபிக்க ஒரு வழி தேடலாம், ஆனந்தன்"

இன்றைய துன்பத்துக்குக் காரணம், நீயும் அந்தப் பெண்ணும் காதலில் பொறுமையோடு போராடியது அல்ல, மச்சான். அடுத்தவள் வலையில் விழுந்த உன் உறுதியற்ற தன்மையும், அவள் இழுத்த இழுப்புக்குப் போய் ஒரு பிள்ளை பெற்றதும்தான். செய்த தப்பு எவ்வளவு கொடியது என்று உணராமல், அதிரடித் தீர்வு கேட்கிறாயா? சரிதான் படு., என்று எண்ணியவாறு "ரொம்ப நல்ல உத்தி ஒன்று இருக்கிறது. ஆனால் அதைச் செய்யும் துணிவு, உங்களுக்கு இருக்குமா?" என்று சந்தேகம் காட்டிக் கேட்டான் ஆனந்தன்.

"சொல்லுங்கள் ஆனந்தன். என்ன செய்ய வேண்டும்? எதுவானாலும் பரவாயில்லை. எவ்வளவு கஷ்டம் என்றாலும், அதை நான் கட்டாயம் செய்வேன்" என்று பரபரத்தான் அடுத்தவன்.

"உங்கள் பழைய காதலிக்கு, உடனே நீங்களே வேறிடத்தில் திருமணம் பேசுங்கள்!" என்று பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான் ஆனந்தன்.

சில கணங்கள், சுகேசன் திறந்த கண், பிளந்த வாய் எதையும் மூடவில்லை. அப்படிப்பட்ட பேரதிர்ச்சி!

அதிரடித் தீர்வு கேட்டால், இவன் உச்சந்தலையிலேயே கல்லைப் போடுகிறானே! மோனியை அடியோடு இழக்க அல்லவா வழி சொல்லுகிறான். அவளை இழந்தால், அப்புறம் அவனுக்கு வாழ்வில் என்ன இருக்கிறது?

"நானா? நானே என் மோனியை எப்படி... என்னால் எப்படி முடியும்?" என்று திக்கித் திணறி, அவன் முடிக்குமுன், "முடிந்தால் தானே நீங்கள் நல்ல மனிதர் என்று காட்ட முடியும்?" என்றான் ஆனந்தன்.

வாயில் வார்த்தை வராவிட்டாலும், மற்றவன் முகம் மறுப்பைக் காட்ட, அவனைப் பேச விடாமல், ஆனந்தனும் தொடர்ந்தான்.

"பாருங்கள் சுகேசன், இரண்டு ஆண்டுகளாகக் காதல் பாட்டு பாடிவிட்டு, நீங்கள் பாட்டில் வேறு பெண்ணை மணந்து



வாழ்ந்திருக்கிறீர்கள். மிகப் பெரிய நம்பிக்கைத் துரோகம்! மணவிலக்குப் பெற்றுவிட்டதாலேயே, பழைய மாதிரி சுதந்திர மனிதனாக, காதலியை மணக்கும் தகுதியோடு இருப்பதாகக் கருதுகிறீர்கள் என்று தோன்றுகிறது.

"ஆனால், அது அப்படியல்ல, சுகேசன். பெரிய தப்பு செய்ததற்கு மாபெரும் சான்றாக ஒரு பிள்ளையோடும் வந்திருக்கிறீர்கள். உங்கள் வீட்டில் குழந்தையை ஏற்றதே பெரிய விஷயம். ரத்த உறவை விட்டுவிட, அவர்களுக்கு மனம் வந்திராது. ஆனால், அந்தக் காதலியுடைய குடும்பமும், அப்படியே ஏற்குமா? ஏதோ தடுமாற்றத்தில், தனிமையின் தாக்கத்தில் செய்தது, ஈடு செய்ய விருப்பம் என்று தெளிவாகக் காட்டாமல், உங்களிடம் முகம் கொடுத்து யார் பேசுவார்கள்? அந்தக் காரணத்தையே மனதார ஒப்புவது கடினம். மன்னிப்பு என்ற ஒரு வார்த்தையில் நடந்த அனைத்தையும் மறக்க முடியுமா? சும்மா பழைய கதைகளைப் படித்துவிட்டு, அந்தமாதிரித் தியாகத்தை, உங்கள் காதலியிடம் எதிர்பார்க்காதீர்கள். இன்றைக்கு, அதை ஒருவரும் ஒப்ப மாட்டார்கள்! இதுவே பால் மாறி நடந்திருந்தால், நீங்களே உங்கள் பெற்றோரோ ஏற்பீர்களா என்று, அது போல மாற்றி யோசியுங்கள். உங்கள்தப்பு, ரொம்பப் பெரியது. சுகேசன், காலிலேயே விழுந்து மன்னிப்புக் கேட்டால் கூட, இனி உங்களை நம்பத் தோன்றாது. உலகில் எல்லாவற்றையும் விட, உங்களை விடவும், அந்த மோனிகாவின் நல் வாழ்வுதான் உங்களுக்கு முக்கியம் என்று மற்றவர்களுக்கு நிரூபிக்க வேண்டிய நிலையில், நீங்கள் இருக்கிறீர்கள்.

"போராடி காதலில் ஜெயிக்கிற நேரத்தில், கூடச் சேர்ந்து போராடியவளை நட்டாற்றில் கைவிட்டு, பெரிய பிழை செய்தவர் நீங்கள்., ஆனாலும் அடிப்படையில் நல்ல மனம்தான் என்பதை, இப்போது நீங்கள் செயலில் காட்டியாக வேண்டும். மற்றபடி நம்பு நம்பு என்று நீங்கள் கரடியாகக் கத்தினாலும், ஏய்க்க முயலுவதாகவே எண்ணுவார்கள். இந்த முயற்சி அந்த எண்ணத்தை அழுத்தமாக

மறுக்கும் தன்மை உடையது. செய்து பாருங்கள். அத்தோடு... நியாயப்படி, உங்களுக்குமே அவளது நல்வாழ்வுதானே முக்கியமாக இருக்க வேண்டும்? எந்த வகையிலும் நல்லது நடக்க, உங்களது இந்தத் தியாகம்தான் ஒரேவழி" என்று நீளமாகச் சொல்லி முடித்தான்.

மீண்டும் ஒரு நீண்ட மௌனம் நிலவியது.

சொல்ல வேண்டியதைச் சொல்லியாயிற்று. இனி, யோசித்து முடிவெடுப்பது உன் பொறுப்பு என்பது போல, ஆனந்தன் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

சற்றுப் பொறுத்து, வாடிய முகத்துடன் "நீங்கள் சொல்வது சரிதான், ஆனந்தன். பெரிய பிழை செய்த குற்றவாளி நான். களங்கமற்ற பூ மாதிரியான மோனி. என்னை மன்னித்து என்னோடு தன் வாழ்வை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்த்தது தவறுதான். முட்டாள்தனம். ஆனால் இ...இதற்கு உங்கள் யோசனைக்கு, அவள்... மோனி சம்மதிப்பாளா?" என்ற ஐயமும் வருத்தமுமாக, சுகேசன் கேட்டான்.

இல்லாமல்தானே, இப்படியே இருக்கிறாள் என்று எண்ணியதைக் கூறாமல், "போய்க் கேட்டுப் பாருங்கள், சுகேசன். அந்த ஒரு முயற்சி செய்தால்தான், மனதால் நீங்கள் நல்லவர் என்பதை மற்றவர்களால் ஒத்துக் கொள்ள முடியும். உங்கள் பெற்றோர் உட்பட, இரண்டு தலைமுறை நட்பு என்கிறீர்கள். அந்தப் பெண்ணின் வேதனை, உங்கள் குடும்பத்திலும் எல்லோருக்கும் வருத்தமாக இராதா? செய்த தப்பை உணர்ந்து, அதற்கு ஒரு தீர்வு நீங்கள் தேடுகிறீர்கள் என்றால், அதுவும் உங்களையே வருத்தக் கூடிய பிரா[illegible]த்தம் செய்கிறீர்கள் என்று எல்லோருக்கும் மனம் இளகுமல்லவா? ஒருவேளை, இன்னும் நல்ல முடிவுகூட கிடைக்கக்கூடும்!" என்று பூடகமாக ஆசை காட்டி கூறி முடித்தான் ஆனந்தன்.

மாலையில், காஃபி டீ வேண்டுமா என்று கேட்டுக் கொண்டு, சுபாங்கி மறுபடியும் வந்தாள்.

வாயிலில் நின்று, "அண்ணனுக்கு அம்மாவின் காஃபிதான்



பிடிக்கும். அங்கேயே வந்து, சூடாகக் குடிக்கும்படி கூப்பிட வந்தேன். அண்ணா..." என்று வேகமாகப் பேசியவாறே எட்டிப் பார்த்தவள், தமையனைக் காணாமல், "எங்கே அண்ணன்? மறுபடி குடிக்க அனுப்பி விட்டீர்களா?" என்று படபடத்தாள்.

என்ன அநியாயமாக குற்றம் சாட்டுகிறாள்! இத்தனைக்கும், பேச்சின் விளைவு என்ன ஆனாலும், மறுபடியும் குடிக்க வேண்டாம் என்று சொல்லியே அனுப்பி வைத்தான்.

"ஆமாம். எனக்கு ஒரு மதுபானக் கடை இருக்கிறது. அங்கே போய், என் வருமானத்தைப் பெருக்கிவிட்டு வா என்று, குடி என்றால் என்னவென்றே தெரியாத பச்சைப் பிள்ளையான உன் அண்ணனை, அனுப்பி வைத்திருக்கிறேன்" என்றான் ஆனந்தன் எகத்தாளமாக.

ஒருகணம் பேசாதிருந்துவிட்டு, "சாரி" என்றாள் அவள் சின்னக் குரலில். "அண்ணன் மறுபடி குடிக்கப் போய்விடக் கூடாதே என்றுதான் திரும்பத் திரும்ப ஓடி வந்தேன். ஆனால் அதற்குள்... அண்ணன் இப்போது எங்கே போயிருக்கிறார் என்று ஏதாவது தெரியுமா?" என்று இறங்கிய குரலில் கேட்டாள் அவள்.

சற்று மனம் இளக "மாடியிலிருந்து யாரோ ஒரு பெண் வந்தாள். ஓடிப் போய் அவளோடு பேசியபடி, வெளியே போனார்" என்று விவரம் தெரிவித்தான் அவன்.

வியப்பினால் விழிகள் விரிய, "யார்? மோனிகாவோடா? என்னால் நம்பவே முடியவில்லையே" என்று அதிசயித்தாள் சுபாங்கி.

"ஒருவேளை, சொன்னவன் நான் என்பதால் இருக்கும்" என்றான் ஆனந்தன் இயல்பான சாதாரணக் குரலில்.

"எ...என்னது?"

"அதுதான், நம்ப முடியாமல் போன காரணத்தைச் சொன்னேன். என் வாய் வார்த்தை என்பதால் நம்ப முடியாமல் போயிருக்குமோ என்னவோ?" என்றான் அவன் அப்போதும் குரல் மாறாமல்.

சீண்டுகிறனாக்கும். அப்படி இல்லை என்று அவளே சொல்வாள் என்ற எண்ணமா?

யோசிக்கும் பாவனையோடு, "ஓ! அது ஒரு காரணம்

இருக்கிறதில்லையா? ஆனால் அப்படியெல்லாம் நான் தனிப்பட்ட யாரையும் நினைத்து பார்க்கவில்லை. வீட்டு நிலைமை எண்ணிப் பார்க்கும்போது, அவர்கள் இருவரும் தனியே சென்றது ஆச்சரியமாக இருந்தது" என்று இப்போது இயல்பான குரலில் பேசியது அவள்.

குரல் சாதாரணமாக இருந்தாலும், அடுத்த கேள்வியை எதிர்பார்த்து மூக்குடைக்க அவள் கண்களில் ஒரு பளிச்சுடன் அவள் தயாராக இருந்தாள்தான்.

ஆனால், அவள் எதிர்பார்த்தது போல 'அது என்ன வீட்டு நிலை" என்ற கேள்வியை அவன் கேட்கவே இல்லை.

மாறாக, "அது என்ன நிலைஎன்றாலும், இருந்துவிட்டுப் போகட்டும். அனேகமாக, அவர் உங்கள் வீட்டுக்கே செல்லக்கூடும். ஒருவேளை இங்கே திரும்பி வந்தாலும், தேடி வந்தது யார் என்று சொல்லட்டும்?" என்று அறியாதவன் போல வினவினான்.

சட்டென இழுத்த வேகமூச்சில் ஒருகணம், அவளுக்குப் பேச்சு நின்று போயிற்று. ஒருவாறு சமாளித்து "அவரோடுகூடப் பிறந்த தங்கை என்று சொல்லுங்கள். குறைந்தபட்சம், என் அண்ணன் புரிந்து கொள்வார். அவர் புத்திசா...லி" என்று வாயைப் காதுவரை இளித்துக் காட்டிவிட்டு, திரும்பிப் போனாள் அவள்.

பின்னோடு சென்று "இதை ஒத்துக் கொள்கிறேன்"என்றான் அவன். "அதனால்தானே அவர் என் வீட்டுக்கு வந்திருக்கிறார்"

'திமிர்' என்ற எண்ணம் இருவருக்குமே தோன்றியது. ஆனால் சற்று நேரத்தில் ஏனோ சிரிப்பும் வந்தது.



## பேசும் பொற்சித்திரமே 7

சுகேசன் திரும்பி வருவதற்கு இரவு வெகுநேரம் ஆயிற்று.

உள்ளூர ஆனந்தனுக்கு உதைப்புதான்.

அவ்வளவாக மன உறுதி இல்லாதவன், என்னதான் எழிலரசி பழக்கி விட்டதாக இருக்கலாம். மனக் கஷ்டத்திலிருந்து தப்பிப்பதற்கான குறுக்கு வழியாகக் குடித்துக் கொண்டு



இருந்தவன்தானே? இல்லை, குடியை விட்டுவிடுகிறேன் என்று அவன் சொன்னால் நம்பலாமா?

'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்பதே, அப்படி நம்பக் கூடாது என்பதால்தானே!

இப்போது, ஒரே ஒரு உரையாடலிலேயே அந்த மோனிகா இவனை ஏற்றுக் கெள்வாள் என்று சொல்ல முடியாது.

அதிலும், சுகேசன் தன்னை இங்கே சித்தரித்திருக்கும் விதமும் சற்றும் சரியில்லை.

எனவே, நல்ல பலன் எதுவும் விளைவதற்கான வாய்ப்பு... இப்போதைக்கு அடியோடு இல்லை என்றே கூறலாம்.

இந்தப் புதிய சோகத்தை மறப்பதற்கு, சுகேசன் மறுபடியும் 'பாரு'க்கு போய்விட்டால், அப்புறம் அந்தப் பெண் சுபாங்கியின் முகத்தில் எப்படி விழிப்பது?

அவள் அவனை நார் நாராகக் கிழித்துவிட மாட்டாளா?

ஆனந்தனின் கவலையை அதிகரிப்பது போல, மணி எட்டை தாண்டு முன்பே, மோனிகா விடு திரும்பிவிட்டாள். சுகேசன் மட்டும் தனியாக, இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருக்கிறான்? எளிதான விடை ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும்.

எந்த 'பாரு'க்குப் போய் அவனை அள்ளி வர வேண்டியிருக்கும்?

வந்தாக வேண்டிய நேரம் என்று, சுகேசனுக்கு நேரக்கட்டுப்பாடு இல்லை எதுவும் என்றாலும், தாமதம் ஆக ஆக, ஆனந்தனுக்கு கவலை ஏறியது. எதிர் வீட்டு ஜன்னலின் திரை விலகி, விலகி மூடியதும், அங்கேயும் ஒருத்தி கவனித்துக் கொண்டிருப்பதை உணர்த்தியது.

சரிதான், இன்று இவளிடம் வாங்கிக் கட்டிக்கொள்ளத்தான் போகிறோம் என்று ஆனந்தன் முடிவு செய்தபோது, சோர்ந்த நடையுடன் சுகேசன் வந்து சேர்ந்தான்.

நடை, சோர்ந்திருந்ததே தவிர, தள்ளாடவில்லை!

சுகேசன் தன் வீட்டுப்புறமாக வருவதைக் கண்டு, ஆனந்தன்

போய்க் கதவைத் திறந்தான்.

"சாரி. உங்களை தூங்க விடாமல் இவ்வளவு நேரம் காத்திருக்க வைத்துவிட்டேன்" என்று அவன் வருத்தப்பட்டது ஒரு நல்ல அறிகுறியாகத் தோன்ற, "பரவாயில்லை. உள்ளே வாருங்கள், ஏதாவது சாப்பிட்டீர்களா? ரொட்டியும் சீஸும் இருக்கிறது" என்று அவன் சொல்லி முடிக்கு முன்பே வாயில் கதவு லேசாகத் தட்டப்பட்டது.

இவள் வேறு, சும்மாச் சும்மா மூக்கை நுழைத்துக் கொண்டு... என்று எரிச்சல் பட்ட படியே கதவை திறந்தால், அவன் நினைத்தது போல சுபாங்கிதான்.

கையில் இரண்டு பாத்திரங்கள்.

பாத்திரங்களாலேயே இடித்துத் தள்ளிவிடுவாள் போல அவள் முன்னேறவும் தானே விலகி வழிவிட்டான் ஆனந்தன்.

எப்படியும் ஹாலில் நின்ற சுகேசனை அவள் பார்த்துவிட்ட பின், அண்ணனோடு பேசக் கூடாது என்று அவள் எப்படித் தடுப்பது?

அவளுடைய அண்ணனிடம் ஆனந்தனின் கடமை, உரிமை பற்றி அவளுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால், அவளுடைய தாயாரே சுகேசன் இங்கே இருக்கட்டும் என்ற பிறகு, சுபாங்கி செய்வது அதிகப்படி!

ஆனந்தனை ஏறெடுத்தும் பாராமல், சுபாங்கி உள்ளே வந்து டீபாயின் மேல், பாத்திரங்களை வைத்தாள். "செல்லோவில் இட்டிலியும், டப்பர்வேரில் சட்டினியும் இருக்கிறது. இரண்டு பேருக்கும் சாப்பிடுங்கள்" என்று பொதுவாகச் சொன்னவள், தரையில் பார்வையைப் பதித்து நின்ற அண்ணனை முறைத்துப் பார்த்தாள்.

"மோனியிடம் நீ..." என்று அவள் கோபக்குரலில் ஏதோ சொல்லத் தொடங்குமுன், "ஊகூம். வேண்டாம்" என்று ஆனந்தன் குறுக்கே வந்து தடுத்தான். "எதுவானாலும், நாளைக்கு சொல்லிக் கொள்ளலாம். சும்மாவே சுகேசன் களைத்திருப்பதோடு, அதிக



நேரமும் ஆகிவிட்டது..." என்றவன், அவளது கண்கள் ஆத்திரத்தில் அகலவும், கரம் குவித்து "தெரியும், தெரியும்! இவர் உனக்குத்தான் அண்ணன். உரிமையும் பாசமும் உனக்கேதான் அதிகம். ஆனால் பாவம், சுகேசனைச் சாப்பிட விடாமல் கெடுக்க வேண்டாம். அப்புறம், கஷ்டப்பட்டு செய்து கொண்டு வந்ததன் அடிப்படையே வீணாகிப் போய்விடும்... ஓஹோ! ஒருவேளை உள்ளே வருவதற்கான சாக்குதான் உணவோ?" என்று கிண்டலாகக் கேட்டான்.

கணத்தில் சீறிச் சிவந்த அவளது முகம், விரைவிலே ஓரளவு அமைதிக்குத் திரும்பியது. ஓர் ஏளன முறுவலுடன், "ஒருவரிடம் நல்லதைக் காண, நம்மிடமும் ஓரளவேனும் நல்லது இருக்க வேண்டும். மற்றபடி, எவ்வளவு பாடுபட்டு யார் என்ன செய்தாலும், ஒரு பயனும் இராது" என்றாள் தெளிவான உச்சரிப்புடன்.

கண்களால் நகைத்து "ஒத்துக் கொள்ளப்பட வேண்டிய உண்மை!" என்றுவிட்டு, இப்போது வெளிப்படையாகவே சிரித்தான் அவன்.

சுபாங்கியின் முகம் சட்டெனக் கன்றவும், அம்பேல் என்று, சமாதானமாகக் கையைக் உயர்த்தி, முறுவல் செய்தான். தொடர்ந்து "சரியான பசி, வேறு வழியின்றி வரட்டு ரொட்டி, சீஸைச் சாப்பிட இருந்தபோது, சுவையான உணவைக் கொண்டு வந்துவிட்டு, உண்ணவிடாமல், பேசிக் கொண்டிருந்தால், எப்படிம்மா? ப்ளீஸ்..." என்று ஆனந்தன் தணிந்து போகவும், சுபாங்கிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

அவளுடைய தாய் சொல்லுவதுதான். எதுவானாலும், பசியாறிய பிறகு பேச வேண்டும். அப்போதுதான் இணக்கமான பதில் வரும் என்பாள். குறைந்தபட்சம், பேச்சேனும் அமைதியாக இருக்குமாம்.

ஆனால், இந்த அண்ணனைக் கிடைக்கும் போது அல்லவா பிடித்தாக வேண்டியிருக்கிறது!

யோசனையோடு சுகேசனைப் பார்த்தால், அவனது சோர்ந்த தோற்றம், அவளது மனதை இளக்கியது. "சரி சாப்பிடுங்கள். சற்றுப்

பொறுத்து, பாத்திரம் எடுத்துப் போக வருகிறேன்" என்று குறிப்பாக ஆனந்தனைப் பார்த்தாள்.

அமைதியாக அவள் பின்னோடு வந்து வாயில் கதவைத் திறந்தவன், அவளை நேராகப் பார்த்து "குட்நைட்" என்றான் மெல்லிய குரலில்.

அவள் திடுக்கிட்டு நிமிர்வும் "விட்டால், நின்ற நிலையிலேயே சுகேசன் தூங்கிவிடுவார் போலத் தெரிகிறார். இரவே எதற்கு வறுத்தெடுக்க வேண்டும்? மறுபடியும் ஒத்துக் கொள்ளுகிறேன், அவர் உன் அண்ணனேதான். ஆனால் என் தூக்கமும் கெடும் என்பதால், எதுவானாலும் காலையில் வைத்துக் கொள்ளுங்கள். குட்நைட்" என்று முடித்தான் அவன்.

மறுக்க வழியில்லாததோடு, அவன் பேச்சு சரியானதாகவும் இருக்கவே, வேறு வழியின்றி, "குட்நைட்" என்ற சிறு முணுமுணுப்போடு, சுபாங்கி இடத்தைக் காலி செய்தாள்.

கதவை மூடிக்கொண்டு, ஆனந்தன் திரும்பியதும், தங்கை செல்வதற்காகவே காத்திருந்தவன் போல, சுகேசன் புலம்பத் தொடங்கி விட்டான்.

"என் மோனி என்னை அடியோடு வெறுத்துவிட்டாள், ஆனந்தன். இனி நான் உயிரோடு இருப்பதிலேயே அர்த்தமே கிடையாது..." என்பது தொடக்கம். அப்புறம் நிறைய.

கஷ்டப்பட்டு அந்த புலம்பலை நிறுத்தி, "வயிறு காலியாக இருக்கும்போது, மூளை வேலை செய்யாது. சப்பிட்டுவிட்டு, என்ன செய்யலாம் என்று யோசிப்போம்... உங்களுக்காகக் காத்திருந்ததில், நானும் சாப்பிடவில்லை. பசி உயிர் போகிறது..." அது, இதென்று சொல்லி, அவனை உண்ண வைத்து, தானும் உணவருந்தினான் ஆனந்தன்.

மெய்யாகவே, அவனுக்குப் பசிதான். சாப்பிட்டு வரலாம் என்று வெளியே போனால், அந்த நேரத்தில் சுகேசன் வந்து, அவன் வீட்டுக்குச் செல்ல நேர்ந்துவிடுமோ என்ற கவலை அவனுக்கு.



இன்னமும் சூழ்நிலை முழுதும் தெளிவாகவில்லை. அதனால், திட்டம் என்று எதையும் உருவாக்க முடியாத இந்த நேரத்தில், சுகேசன் தன் பார்வையில் இருப்பது மேல் என்று நினைத்தான், அவன் அவன்தான் எல்லாவற்றையும் ஒப்பிக்கிறானே!

உணவு முடிந்த பிறகு, வேறு மணம் பற்றிக் கேட்டானா, என்ன நடந்தது என்று விவரம் கேட்டான்.

இதற்காகவே காத்திருந்தவன் போல, சுகேசன் பேசலானான்.

முதலில் இருந்தே, சுகேசனின் குறையும் அதுதானே? அவனது வேதனையைப் பரிவுடன் கேட்கும் ஒரு காது! அது கிடைத்ததும், தங்கு தடையின்றி, அத்தனையையும் கொட்டித் தீர்த்தான்!

"அதைப் பற்றி நான் வாயே திறக்கவில்லை, ஆனந்தன். முடியவில்லை. அதற்குள் மோனியே என்னென்னவோ சொல்லிவிட்டாள். என்னை ரொம்ப மோசமாகப் பேசிவிட்டாள், ஆனந்தன். என் மேல் இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கை, நல்லெண்ணம் எல்லாம், நேற்றிரவு போதையில், நான் என் அப்பாவைப் பிடித்துத் தள்ளியதோடு, அவளுக்கு அடியோடு போய்விட்டதாம். மரியாதைக்குரிய உறவு. அத்தோடு, ஒரு தலைமுறைப் பெரியவர் வேறு. அவரைப் பிடித்துத் தள்ளி விழ வைப்பது என்றால், எந்த அளவுக்குத் தன் நினைவு இல்லாத நிலையா? இவ்வளவு மோசமான ஒருவரையா காதலித்தோம் என்று, அவளுக்கு ரொம்...ப அவமானமாக இருக்கிறதாம்.

"ஏற்கனவே 'உன்னிடம் காதல் என்று பசப்பிவிட்டு, வேறு ஒருத்தியோடு பிள்ளை பெற்றுக்கொண்டு வந்த மோசக்காரன்' என்று அவள் அப்பா திட்டிக்கொண்டே இருப்பாராம். 'இது ஒன்றுதான் என்று எப்படி நம்புவது? இன்னும் எத்தனை வருமோ' என்றெல்லாம் கூடச்சொல்லுவார். ஆனால் அப்போதுகூட, எப்படியும் தன்னிடம் 'வந்துவிடத்தானே செய்தான்' என்று உள்ளூரப் பெருமைகூட, அவளுக்கு இருந்ததாம்.

"பாருங்கள் ஆனந்தன், ஆனால் இது முன்பே தெரிந்திருந்தால்,

இந்தப் பாழும் விஸ்கியை நான், கையாலேனும் தொட்டிருப்பேனா? என் மோனி ஏஞ்சல், ஆனந்தன்!

"ஆனால், இப்போது எல்லாம் கெட்டுவிட்டது ஆனந்தன்! 'உங்கள் திசைக்கே ஒரு கும்பிடு' என்று என்னிடமே சொல்லுகிறாளே! இவ்வளவு மோசமான என்னை நினைத்து அவள் இனிமேல் ஒருநாளைக் கூட வீணாக்கப் போவது இல்லையாம்! அவளுடைய அப்பாவின் விருப்பம் போல, வேறே எவனையாவது மணந்து, நிம்மதியாக இருக்கப் போவதாக, என்னிடமே சொல்லி விட்டாளே!" என்று கண்ணீர் விட்டான் சுகேசன்.

சற்று யோசித்துவிட்டு "அப்படியானால், அவர்கள் வீட்டில் உங்கள் மோனிகாவுக்கு இனிமேல்தான் மாப்பிள்ளை பார்க்க வேண்டும், இல்லையா?" என்று ஆனந்தன் யோசனையோடு வினவினான்.

"ஆமாம். அவர்... அதாவது நான் எப்படி எண்ணியிருந்தாலும், அவள் மனதில் நான் மட்டும்தான். அதனால் வேறு முயற்சி செய்தால் செத்துவிடுவதாகச் சொல்லியிருந்தாளாம். அதனால், அந்த முயற்சி செய்யவே அஞ்சி சும்மா இருந்தார்களாம்" என்றபோது சுகேசனின் குரல் தழுதழுத்தது.

கண்ணைத் துடைத்துக்கொண்டு "என்னமாதிரியான அன்பு! நேசம்! கடவுளே, என்ன மடத்தனம் செய்துவிட்டேன்!" என்று நெற்றியில் அறைந்து கொண்டான்.

மடத்தனம் என்று மனத்திற்குள் ஒப்பினாலும், வெளிப்படையாக அதைக் கூறாமல், "அப்படிப்பட்ட அன்பு நெஞ்சம் வளமாக வாழ வேண்டும், சுகேசன். அதற்கான முழு முயற்சியை, நீங்கள் இப்போது எடுக்க வேண்டும்" என்றான் ஆனந்தன்.

"நானா, ஆனந்தன். மாட்டேன் என்கிறேன்? ஆனால் யாரும் நான் பழைய மாதிரித் திருந்திவிட்டதை நம்ப மறுக்கிறார்களே!" என்று வருத்தப்பட்ட சுகேசனை வியப்புடன் பார்த்தான் மற்றவன்.

மச்சானுக்கு இன்னும் நிறைய அதிர்ச்சிகள் தேவை போல



இருக்கிறதே என்று எண்ணியவன் "உங்கள் விஷயத்தில் அவர்கள் சூடு பட்ட பூனைகள், சுகேசன். ஐந்தறிவு மிருகத்தைவிட, அவர்களை மட்டமாக நினைக்கக்கூடாது. அதற்காக அவள் இப்படியே இருப்பதும் தப்பு. அதனால் அவளுக்கு ஏற்ற, வேறு ஒரு மணமகனை, நீங்கள் தேடிக் கொடுங்கள்" என்று யோசனை சொன்னான்.

"நானா?" என்று நெஞ்சை நீவி விட்டுக் கொண்டான் சுகேசன், "நானே அவளை எப்படி இன்னொருத்தன் கையில் பிடித்துக் கொடுப்பது? என் நெஞ்சு வெடித்துவிடும்" என்றபோது, அவனது குரல் குமுறியது.

மறுபடியும் அதே புலம்பலா என்று நினைத்தவன், "இந்த புத்தி, அவளைப் பிரிந்து இன்னொருத்தியை தொடுமுன் வந்திருக்க வேண்டும்" என்றான் சூடாக.

சவுக்கடி பட்டவன் போல விறைத்து நிமிர்ந்தான் சுகேசன்.

"சாரி சுகேசன். என்ன வலித்தாலும், உண்மையை ஏற்பீர்கள் என்று நம்புகிறேன். அந்தப் பிழையை செய்ததாலேயே, உங்கள் நேசம் ரொம்பவே மாற்றுக் குறைவுதான் என்று, வெளிப்படையாக, படு பயங்கரமாகக் காட்டிவிட்டீர்கள். இப்போது, அந்தப் பெண் மோனிக்குச் சரியாக, நீங்களும் உயர வேண்டாமா? அதற்கு, இதைத்தவிர வேறு வழி ஏது? இதை, இப்படி எண்ணிப் பாருங்கள். உங்கள் மீது கொஞ்சமேனும் அன்பு இருந்தால், இன்னொருவனை உங்கள் மோனிகா மணப்பாளா? அப்படி மணக்கத் துணிந்து விட்டால், உங்கள் மீது அன்பு அடியோடு இல்லை என்பது நிச்சயம். எதுவானாலும, புதிதாக நீங்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை. ஆனால் இந்தமுயற்சியில் உன் மேல் நல்லெண்ணம் வர வாய்ப்பிருக்கிறது. அத்தோடு ஒரு நல்ல நட்பேனும் தொடரக் கூடும். இன்றைய நிலையில், அதுவே பெரிது அல்லவா?"

ஒத்துக் கொள்ளும் விதமாகத் தலையாட்டினான் சுகேசன். "இந்த மாதிரி நீங்கள் விளக்கிச் சொன்ன பிறகுதான். மனதுக்குள் ஒரு

தெளிவு வந்திருக்கிறது, ஆனந்தன். ஏற்கனவே கை நழுவ விட்டுவிட்ட எனக்கு புதிதாக இழக்க என்ன இருக்கிறது? மெய்தான். விட்ட இடத்திலிருந்து, அப்படியே தொடங்கலாம் என்று நினைத்த என் திமிருக்கு நல்ல அடி கொடுத்தீர்கள்! இப்போது முழுதாகப் புரிந்துவிட்டது. நாளையும் என் மோ... இல்லை, மோனிகாவைச் சந்தித்துப் பேசுகிறேன். 'உயரத்தில், அவளை நானும் எட்ட வேண்டும். எப்படியும் மோனி நன்றாக வாழ வேண்டும். அதற்கு ஏற்ப, அவளிடம் பேசுகிறேன்" என்ற சுகேசனின் முகத்தில், வருத்தத்துடன், ஓர் அமைதியும் தெரிந்தது.

மறுநாள் காலையிலேயே, சுகேசன் கிளம்பினான்.

பத்திரிகையில் இருந்து தலையைத் தூக்கிப் பார்த்த ஆனந்தனிடம், விஷயத்தை விளக்கினான் "காலையில் 'வாக்' போய்விட்டு, மோனியும் நானும் சந்தித்துப் பேசும் இடம் ஒன்று இருக்கிறது. அங்கே போய், நீங்கள் சொன்னது போல, அவளிடம் பேசப் போகிறேன். அவளது வாழ்வேனும் நல்லபடியாக அமைய வேண்டும், ஆனந்தன். நீங்களும் வேண்டிக் கொள்ளுங்கள்" என்றான் உணர்ச்சியோடு.

தலையாட்டிய ஆனந்தன், இரண்டு சாவிகள் கோத்திருந்த ஒரு சாவி வளையத்தை அவனிடம் நீட்டினான் "இந்த வீட்டுச்சாவி, ஒரு செட்... ஒருவேளை நான் வெளியே போக நேர்ந்தால், உங்களுக்குத் தேவைப்படும்"

சுகேசனின் கண்கள் சட்டெனப் பனித்தன. "என்னை நம்பி, வீட்டுச் சாவியையே தருகிறீர்களே! எப்படி ஆனந்தன்?" என்றான் குரல் கரகரக்க, "உடன் பிறந்தவன் போல அல்லவா, நடத்துகிறீர்கள்!"

உடன் பிறந்தவளுடைய கணவன் என்றாலும் அப்படித்தான் என்று எண்ணியதை மறைத்து, "நான் தனியே தொழில் நடத்துகிறவன், சுகேசன். யாரை நம்புவது என்று கண்டு பிடிக்க முடியாவிட்டால், எப்படி?" என்று ஆனந்தன் முறுவலோடு



கூறியதை ஏற்று அமைதியடைந்தவனாக, மற்றவன் கிளம்பினான்.

"அப்படியே வெளியே சில வேலைகளை முடித்துவிட்டு வருவேன், ஆனந்தன். உணவை அங்கேயே முடித்துவிடுவேன். எனக்காகக் காத்திராமல் சாப்பிடுங்கள்"என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

மோனியின் திருமணம் பற்றி, அவளிடம் அன்று பேச முடியாமல் போயிற்று என்றான் சுகேசன். வீட்டில் கூடவே வசிக்கும், உறவுக்காரப் பெண்ணும், பூங்காவுக்கு, அவளோடு கூடவே வந்திருந்தாளாம். அதனால், தன்னைக் கண்டது போலவே, மோனிகா காட்டிக் கொள்ளவில்லை என்றான்.

ஆனால், அடுத்து வரும்போது, இதுபற்றி நிச்சயமாகப் பேசிவிடுவதாக உறுதி கூறி, வேலைக்குக் கிளம்பினான் சுகேசன்.

அவனது பணியிடம் வெகு தூரத்தில் இருந்தது. கூடவே இங்கே வீட்டில் தந்தையோடு நிரந்தர உரசல். வேலை முடிந்து தாமதமாக வருவதும், வந்ததுமே, ஏதாவது சிறு காரணத்துக்காக இருவரும் சண்டை போடுவதும் தினசரி நடந்தது.

இதற்கு ஒரு சிறு தீர்வு கிடைக்கவே 'கப்'பென்று அதைப் பற்றிக் கொண்டான் அவன்.

"அவனோடு கூடப் பணி புரியும் நண்பன், பணியிடத்துக்குப் பக்கத்திலேயே ஒரு சிறு ஃப்ளாட்டில் குடியிருந்தான். நண்பனுடைய மனைவிக்கு, பங்களூரில் வேலை. இருவருமே மாற்றலுக்குக் கேட்டிருந்தனர்.

இடைப்பட்ட காலத்தில், வெள்ளிக்கிழமை மாலை கிளம்பி, அவள் இங்கே வந்து விடுவதும், ஞாயிறு மாலை திரும்பிச் செல்வதுமாக, அவர்களது வாழ்க்கை நடந்தது. இதைப் பயன்படுத்தி, வார நாட்களில் அங்கிருந்து வேலைக்குப் போய்விட்டு, வாரக் கடைசியைக் குடும்பத்தோடு கழித்தான் சுகேசன்.

சச்சரவும் சங்கடமுமாகத்தான். ஆனால், ஏழு நாட்களும் கஷ்டப்படுவதற்கு, இது மேல் அல்லவா?

விவரம் அறிந்ததும், ஆனந்தன் ஒரு சாவியை சுகேசனிடமே நிரந்தரமாகக் கொடுத்துவிட்டான் "இதுபோலக் கதவைச் சாத்தினாலே பூட்டிக்கொள்ளும் மாடல் கதவு உள்ள வீட்டில் சாவி இரண்டு பேரிடம் இருப்பதே நல்லது. பிள்ளை தன்னந்தனியாகக் கிடக்கிறானே என்று இல்லாமல், என் அம்மாவும் நிம்மதியாக இருப்பார்கள். உங்கள் சாக்கில் எனக்கும் அவ்வப்போது வீட்டுச் சாப்பாடு வேறு கிடைக்கிறது!" என்று ஏதேதோ சொல்லி, சுகேசனைத் தன்னுடனேயே தங்கவைத்துக் கொண்டான் ஆனந்தன்.

அவன் வெளியே சொல்லாதது, எதிர் வீட்டு விவரங்கள், இன்னும் நன்றாகத் தெரியுமே என்பது!

அவனது எதிர்பார்ப்பு விரைவிலேயே பலித்தது.

முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வந்த சுகேசன் "நீங்கள் கூறியது போல முழுதாக அப்படியே சொல்ல, எனக்கு வாய் வரவில்லை, ஆனந்தன். ஆனால் அவள் நல்லபடி வாழ வேண்டும் என்று மட்டும் சொன்னேன். அதற்கு மேல் பேச முடியாமல், தெரிந்தவர்கள் வேறு வருவது தெரிந்ததா? பிரிந்து சென்று விட்டோம்" என்று தெரிவித்தான்.

அந்தப் பேச்சின் பிரதிபலிப்பு என்ன என்று கேட்கத் தேவையே இல்லாமல், அடுத்தவாரமே, ஆனந்தன் வெளியே செல்லக் கிளம்பி, சற்று மதிலைத் தாண்டுகையில், காரை மறித்துக்கொண்டு கோபம் குமுறும் முகத்துடன், சுபாங்கி புயலென வந்து நின்றாள்.

சுபாங்கியின் கோப முகம் அவனுக்குப் பார்த்துப்பார்த்து பழக்கமானதுதான். ஆனால் மொத்தக் குடியிருப்பும் பார்க்கக்கூடிய, இடத்தில், அவனது வழியை அவள் மறிப்பது அவனுக்கு வியப்பளித்தது.

காரை நிறுத்திக் கண்ணாடியை இறக்கும்போதே, கையில் இருந்த மொபைலை அவள் மூடுவதைக் காணவும் வியப்பு மறைந்துவிட, "காரில் ஏறிக் கொண்டால், சற்று தூரம் இடையூறின்றிப்



பேசிக்கொண்டே போகலாம். இப்படிக் காட்சிப் பொருளாகவோ, போக வர இடைஞ்சலாகவோ, பொது வழியில் நிற்க வேண்டாம்" என்று கார்க் கதவைத் திறந்து விட்டான்.

இது ஒன்று, இவனிடம், எப்போதும், எதையேனும் சரியாகவே சொல்வது என்று உள்ளூரக் கடுத்தபடி, காரில் ஏறி அமர்ந்தாள் சுபாங்கி.

ஆனால், சீட்டில் உட்கார்ந்ததுமே, கடுகாய்ப் பொரியத் தொடங்கிவிட்டாள்.

"என்ன சார், நீங்கள்? செய்த தப்புக்கு, அண்ணன் முதலில் நன்றாகக் கஷ்டப்படட்டும். அப்புறம் அவனது கெட்ட பழக்கங்களை நிறுத்த வைத்து, மெல்ல இரண்டு பேரையும் சேர்த்து வைத்து விடலாம் என்று மனதில் கணக்குப் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது பார்த்து மோனிக்கு திருமணம் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுக் கலாட்டா பண்ணுகிறீர்களே! அவளுக்கு நல்ல திருமண வாழ்வு அமைய வேண்டும் என்று அண்ணன் தெளிவாகச் சொன்னானாமே! இவன் இந்தக் கூத்து அடித்த பிறகு இருவருக்குமாய் அந்த நல்ல வாழ்வு எப்படி அமையும்? இப்படி எதையாவது சொல்லிக் குழப்பியடிக்காமல், வாயை மூடிக்கொண்டு, உங்களால் சும்மா இருக்க முடியாதா?" என்று கடுகடுத்தாள்.

மேலே மேலே அவள் பேசப் பேசக் குறுக்கிடாமல், கேட்டபடி, கடற்கரைச் சாலையில் நிதான வேகத்துடன் காரை ஓட்டினான் ஆனந்தன்.

கடைசியாக அலுத்துப் போய் "இவ்வளவு சொல்லுகிறேன். பதிலே பேசாமல், இடித்த புளி மாதிரி உட்கார்ந்திருக்கிறீர்களே! பேச வாயில்லையா? அல்லது வார்த்தைகள்தான் தெரியவில்லையா? அல்லது ஏதோ வாயில் வந்ததை அண்ணனிடம் உளறிவிட்டு, இப்போது வாயைத் திறக்க முடியாமல் உட்கார்ந்திருக்கிறீர்களா? ஏதாவது சொல்லுங்கள், சார். ஏன் இப்படி ஒரு மடத்தனமான

ஐடியாவை அண்ணன் மண்டையில் ஏற்றினீர்கள்?" என்று சட்டையைப் பிடித்து உலுக்காத குறையாக சுபாங்கி கேட்ட பிறகுதான், ஆனந்தன் வாயைத் திறந்தான்.

அவளிடம் ஒரு பக்கவாட்டுப் பார்வையைச் செலுத்திவிட்டு, "பதில்தானே வேண்டும்? தாராளமாகத் தருகிறேன். ஆனால், சொல்வதற்கு என்ன இருக்கிறது? உனக்கு கொஞ்சமேனும் யோசிக்கும் திறன் இருந்திருந்தால், இதை நீயே, எப்போதோ, இதைச் செய்திருப்பாய்..." என்று சற்று நிறுத்தி, அவளை யோசிக்க வைத்தான் ஆனந்தன்.

"எ... எப்போதேவா... ஓஹோ! இந்த முயற்சி, அவர்களுக்கு இடையே உள்ள அன்பின் ஆழத்தை, இருவருக்குமே புரிய வைத்திருக்கும் என்கிறீர்களா?" என்று சட்டென ஊகித்துக் கேட்டாள் சுபாங்கி.

"பின்னே? பிள்ளையோடு வந்து நிற்கும் உன் அண்ணனின் பிழை, மிகப் பெரியது. அது, மோனிகா குடும்பத்துக்குச் சின்னதாகத் தெரிய வேண்டுமானால், இன்னும் மிகப் பெரிய அதிர்ச்சி ஒன்று தேவையில்லையா? அந்த மோனிகாவுக்கும் கூட, அது தேவைதானே?" என்று அழுத்தத்துடன் வினவினான் ஆனந்தன்.

சற்று நேரம் காரினுள் அமைதி நிலவியது.

அதைப் பயன்படுத்திக்கொண்டு "உன் தோழி மோனிகா ஒன்றும் எடுத்ததற்கும் தலையாட்டுகிற ஆள் கிடையாது. காதலுக்காக முன்பு இரண்டு ஆண்டுகள் போராடியது போல, இப்போதும் தன் பிடிவாதத்தில் நிலையாக நிற்கக் கூடியவளே. நிற்கிறவளும் கூட. அவளது நல்வாழ்வைத்தான் சுகேசன் விரும்புகிறான் என்றால், பெற்றோருடன் வாதாட, அவளுக்கு நல்ல காரணமும் கிடைக்கும் அல்லவா? சும்மா விட்டு விடுவாளா? கடைசியில் உன் ஆசைதானே, நடக்கக்கூடும்?"

"ஆழமாக யோசித்துப் பார்த்தால், எல்லாம் சரியாகத்தான் தெரிகிறது. இந்த ஐடியா. அதன் மூலம் நடக்கக் கூடிய மாற்றங்கள்...



எல்லாமே சரிதான். ஆனால், இது என் அண்ணன் வாழ்க்கை. அது எப்படி அமைந்தாலும், அதைப்பற்றி உங்களுக்கு என்ன வந்தது? அவனுக்காக இவ்வளவு மெனக்கெடுவதைப் பார்க்கும்போது, உள்ளே வேறே ஏதோ இருக்கிறதோ என்று ரொம்பவும் தோன்றுகிறது!" என்றாள் அவள், தீவிரமான சிந்தனையுடன்.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அரை வட்டமடித்துக் காரை வந்த வழிக்கே திருப்பினான் ஆனந்தன்.



## பேசும் பொற்சித்திரமே 8

சிலுசிலுப்பான கடற்கரைக் காற்று, பொன்மணல் பரப்பும், நீலக் கடலின் நுரைக் கோடுகளுடன் அலைகளும் பார்க்க ரம்மியமாக தோற்றமளித்தன.

பக்கத்தில் ஓர் அழகான பெண் வேறு!

ஆனால், ஆனந்தனது ரசிக உள்ளத்தால் அப்போது, எதையும் அனுபவிக்க முடியவில்லை.

நல்லது நடக்கட்டும் என்று ஆவலோடு வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்காமல், அதற்குள்ளும் என்ன இருக்கிறதோ என்று சுபாங்கி தூண்டித் துருவுவது, அவனுக்குத் தொல்லையாக இருந்தது.

காலமெல்லாம் இதை மறைத்து வைக்க முடியாதுதான்.

ஆனால், எல்லா உண்மைகளும் தெரிந்தால், இவள் எப்படி எடுத்துக் கொள்ளக்கூடும்? அது தெரியாமல், இவளிடம் எதையுமே சொல்ல முடியாது. அதிலும், இவள் காரணமே இல்லாமல், அவனைத் தவறாகவே நினைக்கிறவள்!

அதை விடவும், இவ்வளவு ஊகிக்கிறவள், மற்ற விஷயங்களையும் கண்டுபிடித்துவிடுவாளா என்ற கவலையும் அவனுக்கு ஏற்பட்டது.

எப்படியும், இப்போதைக்கு அவள் எதையுமே அறியாதிருப்பதுதானே நல்லது?

ஆனந்தனையே விளித்து சுபாங்கி பேசவும், அவனது சிந்தனை கலைந்தது.

அவள் திரும்பி அவனை நேராகப் பார்த்து, "சொல்லுங்கள் ஆனந்தன், என் அண்ணனுக்கு உதவிசெய்வதற்காகவே பிறவி எடுத்த மாதிரிப் பேசுகிறீர்களே! ஏன் அப்படி? எதற்காகச் செய்கிறீர்கள்?" என்று கூர்மையான பார்வையுடன் வினவினாள்.

இவளிடம் வாயை விட்டு விடக்கூடாது.

"என்னம்மா. இந்த உலகத்தில் நல்லது செய்யவுமா, இந்தப் பாடு! ஒரு பிரச்சினை என்றால், உதவிக்கு வராமல் எல்லோரும் ஏன் ஓடி ஒளிகிறார்கள் என்று இப்போதல்லவா புரிகிறது" என்று கிண்டல் குரலில் இயம்பினான் ஆனந்தன்.

"என் கேள்விக்கு, இது பதிலில்லையே!"

"ஏன்? கண்ணெதிரே ஒரு கஷ்டம் என்றால் உதவி செய்யக் கூடாதா? அதற்குக் கூடவா விளக்கம் சொல்லியாக வேண்டும்?"

தலை சரித்து இன்னும் கூர்மையாக அவனை நோக்கினாள் சுபாங்கி, "ஒரு கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், சுற்றி வளைத்து பதில் கேள்வி ஒன்றை ஒருவர் கேட்டால், சரியான பதிலைச் சொல்ல முடியாதபடி, அங்கே ஏதோ பிரச்சினை இருக்கிறது என்றுதான் அர்த்தம். என்ன விஷயம்? சொல்லுங்கள்!" என்று அதட்டிக் கேட்டாள் அவள்.

"ஐயய்யய்ய! இது என்னம்மா ஒரே ரோதனை? ஏதோ தெரியாத்தனமாக, சுகேசனுக்கு உதவி செய்துவிட்டேன், போகிறது என்று மன்னித்து விடேன்!"

"ஆனால், இன்னமும் என் கேள்விக்குப் பதில் வரவில்லையே! அதுதான் எங்கேயோ ரொம்பவும் இடிக்கிறது" என்றாள் அவள் விடாமல்.

"சரியான விடாக்கண்டியாக, நன்றாக மடக்குகிறாய்" என்று சிலாகித்தபடி, நகரின் போக்குவரத்துக்குள் கவனத்துடன் காரைச் செலுத்தினான் ஆனந்தன்.



"என்ன, அதற்குள் காரை, வீட்டுக்குத் திருப்புகிறீர்கள்? நீங்கள் இன்னும் எனக்குப் பதில் சொல்லவில்லையே!"

"இப்படி ஓர் அழகான பெண்ணோடு சொல் யுத்தம் செய்தபடி, டீசல் காலியாகும் வரை, போய்க்கொண்டே இருக்க எனக்கும் ஆசைதான். இப்படித் தனியே சுற்றினால், நம் இருவரையும் சேர்த்து நம் குடியிருப்பில் என்னென்னமோ நினைக்கத் தொடங்கிவிட மாட்டார்களா? சும்மாவே, என்னை வழி மறித்துக் காரில் ஏறியிருக்கிறாய்! அது வேறு, எத்தனை பேர் கண்ணில் பட்டதோ?" என்று பெரிதாகக் கவலைப்பட்டான் ஆனந்தன்.

பேச்சை மாற்றுகிறானா?

அவனை முறைத்துப் பார்த்துவிட்டு "நம் குடியிருப்பு, சற்றுப் பழைய கட்டிடம். எல்லோருக்கும், என்னை ஆண்டுக்கணக்கில் தெரியும். அதனால் என்னைத் தப்பாக நினைக்கவே மாட்டார்கள்" என்றாள் சுபாங்கி அழுத்தம் திருத்தமாக.

"ஆனால் என்னைத் தெரியாதே!" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.!

அவள் சற்று திகைப்புடன் திரும்பிப் பார்க்கவும் "என்னையும் தெரியாது, அந்த அரை லூசையும் தெரிந்திராது என்று நினைக்கிறேன்" என்று பெரிதாக கவலைப்பட்டான், ஆனந்தன்.

அப்படி இலகுவாகப் பேச்சை மாற்ற விட்டுவிடுவேனாக்கும் என்று எண்ணியபடி "அரைலூசா? நம் குடியிருப்பில், அப்படி யாரும் கிடையாதே!" என்றாள் அவள்.

"பின்னே? சும்மா சும்மா குறுக்கே வந்து 'லிஃப்ட்' கேட்பதும், எங்கே போக வேண்டும் என்று கேட்டால், 'நீங்கள் போகிற தூரம் எவ்வளவோ, அதுவரை கூட்டிப் போங்கள்' என்பதும், லூசுத்தனம் இல்லையா? நான் எங்கே போகிறேன் என்று ஒரு மண்ணும் தெரியாமல், இப்படி 'லிஃப்ட்' கேட்பதா? மூளை இருந்தால், இப்படிக் கேட்கத் தோன்றுமா? தப்பிச் செல்லுமுன் என்ன பாடாக இருக்கிறது தெரியுமா? யார் காதிலேனும் விழுந்தால், அவளைப்பற்றி

என்னென்ன எண்ணுவார்கள்? அவளைவிடு., என்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள்? அதுவும், காரணம் இல்லாமலே என்னைப் பற்றி தப்புத் தப்பாக நினைக்கத் துடிக்...க்கிறவர்கள் இருக்கிற இடத்தில்!" என்று வேண்டும் என்றே சேர்த்துச் சொன்னான் அவன்.

உடனே சிலிர்த்து "நான் ஒன்..." என்று மறுத்துப் பேசத் தொடங்கியவள், அவனது சீண்டல் புரிந்து, சட்டென சுதாரித்தாள்.

ஆதாரம் இல்லாமல், காரணத்தை அவளால் துணிந்து சொல்லவும் முடியாது. தப்பாக நினைக்கவே இல்லை என்று பொய் கூறவும் அவளுக்கு மனமில்லை.

எனவே "ஆ...ஆனாலும், இப்படியெல்லாமா, ஒருத்தி 'லிஃப்ட்' கேட்டாள்? நா...நான், ஒருநாளும் பா...பார்த்ததே இல்லையே!" என்று சிறு தடுமாற்றத்தை சமாளித்துப் பேசினாள் சுபாங்கி.

கண்களில் ஒரு 'பளிச்'சுடன் அவளைப் பார்த்துவிட்டு "காம்பவுண்டுச் சுவருக்கு உள்ளே இருந்துபார்த்தால் எப்படித் தெரியும்? கேட்டுக்கு வெளியே அல்லவா, இந்தக் கூத்து நடக்கிறது" என்று விளக்கினான் அவன்.

நாக்கை கடித்துக்கொண்டு, ஒருகணம் பேசாதிருந்தாள் அவள். மறுபடியும் சிக்கல்! என்னவோ, அவன் வெளியே செல்லும்போதெல்லாம் அவள் பார்த்துக் கொண்டே நிற்பது போல, மறைமுகச் சித்தரிப்பு.

பார்க்கவே இல்லை என்று சொன்னால் அது பொய்.

அவர்கள் வீட்டுப் பின்னறையில் இருந்து பார்த்தால், பக்கவாட்டில் கேட் தெரியும். ஆனந்தன் லாகவமாகக் காரை செலுத்தி, கேட்டை கடப்பதைக் கண்டு ரசித்தும் இருக்கிறாள்.

அதற்காகவே, அவன் கிளம்பும் அரவம் கேட்டதும், பாப்பா அறையில் போய் நிற்பதும் உண்டு.

ஆனால் அதையெல்லாம், இவனிடம் ஒத்துக் கொள்ள முடியுமா? அப்புறம், தலை நிமிரவே முடியாதே!

பார்த்ததே இல்லை என்று இனிமேல் சொன்னாலும், பொய்



சொல்வது போலத் தோன்றும். ஒரு வார்த்தையைக் கவனமின்றி விட்டால், எத்தனை தொல்லை!

'நா காக்க' என்று வள்ளுவர் சொன்னது கோபத்துக்கு மட்டும் என்று எண்ணியது, எவ்வளவு தப்பு!

அந்தப் பேச்சை அப்படியே முழுதாக ஒதுக்கி, "யார் அவள்? பெயரைக் கூடக் கேளாமலா, காரில் ஏற்றிக் கொள்கிறீர்கள்?" என்று குரலில் சந்தேகம் காட்டி விசாரித்தாள்.

"எல்லாம் இங்கே உள்ளவள்தான். உங்கள் குடும்பத்துக்கு நெருக்கம் என்பதால்தான், என்னால் மறுக்கவும் முடியவில்லை"

"என்ன உளறல் இது? எங்களுக்கு எந்த உறவும், இங்கே கிடையாது" என்று எரிச்சலைக் காட்டினாள் சுபாங்கி.

"நெருக்கம் என்றால், அது உறவு மட்டும்தானா? நட்பாகவும்..." என்று வளவளத்தவன், சுபாங்கியின் முகத்தில் கோபச் சிவப்பு ஏறுவதைக் கண்டு "அவள்தான் ராணி. ஆனால், எந்த நாட்டுக்கும் அல்ல"

"தெரியும்" என்றாள் சுபாங்கி சுருக்கமாக, "மோனியுடைய சித்தப்பா மகள். ஆனால், அவள் ஏன் இப்படி..." என்று உரக்க யோசித்தாள்.

"என் அழகான தோற்றம் காரணமாக இருக்கும்" என்றான் அவன் சன்னக் குரலில் இயல்பாக.

"எ...என்னது...?" என்று ஒருகணம் திகைத்தவள், குபீரென்று நகைத்தாள்.

கண்கள் சிரித்தாலும், "வாய்ப்பே கிடையாது என்கிறாயா? அவ்வளவு மோசமா, நான்?" என்று சோகம் போலக் கேட்டான் அவன்.

"ஷ்! நான் தீவிரமாக யோசிக்கிறபோது சிரிப்பு மூட்டாதீர்கள், ஆனந்தன். மோனிக்கு துணையாக இருக்கட்டும் என்று ராணியை வரவழைத்தார்கள். கொஞ்சம் அசடு, ஆழமற்ற தன்மை என்று, நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால்... இவரிவர் இப்படி என்று,

இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது? ஆனால், உங்களுக்கு உண்மையாகவே அவள் செய்வது பிடிக்கவில்லை என்றால், அதைத் தடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் சுபாங்கி.

"வாக்குறுதிக்கு ரொம்ப நன்றி. ஆனால் அதென்ன 'உண்மையாகவே பிடிக்கவில்லை என்றால்' என்று சில அதிகப்படி வார்த்தைகள்? பிடிக்கவில்லை என்பதில் என்ன சந்தேகம்?"

"அதில்லை... ராணி அழகான பெண்..."

"யார்? அவளா? என் இலக்கணப்படி, அழகு என்றால் அதில் புத்திசாலித்தனமும் கலந்திருக்க வேண்டும். ஏன்? இன்றைய அழகிப் போட்டியிலேயே அறிவுக்கூர்மை இல்லாதவர்கள் ஜெயிக்க முடியாது. அந்த வகையில், அந்தப் பெண் ராணிக்கு, மைனஸ் மதிப்பெண்கள் தான் கிடைக்கும்" என்று ஆனந்தன் அழுத்தம் திருத்தமாக உரைக்க, சுபாங்கிக்கு உள்ளூர உவகை ஊற்றெடுத்தது.

சற்று முன், இதே ஆனந்தன், அவளை அழகான பெண் என்று சொன்னானே!

அப்படியானால், அவளது தோற்றம் அழகானது என்பதோடு, அவள் புத்திசாலி என்றும் கூறுகிறான்!

உள்ளம் பூரித்து, உச்சி குளிரும்போதே, சுபாங்கி, தன்னைத் தானே தட்டி எழுப்பிக்கொண்டாள். இல்லை. இந்த ஆனந்தனை ஒரேடியாக நம்பிவிடக் கூடாது. அவனிடம் ஒரு மர்மம் இருக்கிறது. அது தெரியும்வரை, அவனிடம் எச்சரிக்கையோடு பழக வேண்டும்.

ஏன்? இந்த லூசுக் கதை கூட எவ்வளவு நிஜமோ? அவளது பொறாமையைத் தூண்டி, அவளைத் தன்னிடம் மயங்க வைக்கும், முயற்சியாகக் கூட இருக்கலாம்!

தினசரி வழக்கப்படி மறுநாளும் ஆனந்தன் அவர்கள் வீட்டுக்கு வந்து, தான் செல்லத் திட்டமிட்டு இருக்கும் இடம் சொல்லி, அங்கே ஏதேனும் வாங்கி வர வேண்டுமா என்று செந்திருவிடம் கேட்டான்.

இது, சுகேசன் பழக்கி வைத்தது. ரொம்ப முன்பு அவன்



தாயாருக்குச் செய்த உதவி. இப்போது அப்பாவோடு தகராறில் வீட்டுக்குள் செல்ல முடியவில்லை. அம்மாவே அலைய நேர்கிறது என்று ஒருநாள் அவன் வருத்தப்பட, ஆனந்தன் அந்தப் பணியை ஏற்றுக் கொண்டான்.

வந்து கேட்கும்போதே, பவியை ஒருதரம் தூக்கிக் கொஞ்சிவிட்டுப் போவான். குழந்தையும், அவனிடம் தாவும், செந்திரு காஃபி கொடுப்பாள். வீட்டில் இருந்தால் கணபதியும் நல்லபடியாகப் பேசுவார், சுகேசனோ, ஏற்கனவே 'சரண்டர்'

குடும்பத்தில் எல்லோரும் அவன் பக்கம் சாய்வது சுபாங்கிக்குப் பிடிக்காது. அதைத் தடுக்க, வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல், அவள் செய்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்காது போக, போரடித்துப் போய், அவளே அதை நிறுத்தியிருந்தாள்.

அன்று ஆனந்தன் செந்திருவை அழைத்துப் பேசும்போதே, சுபாங்கி உஷாராகிவிட்டாள்.

ஏதோ காரணம்போல, வெளியே சென்றவள், மாடிப்படியில் சற்றே மறைந்தாற்போல, ராணி நிற்பதை, ஓரக்கண்ணால் கண்டாள்.

வேறு வேலை போல வேகமாக வெளிப்புறம் சென்றாள், வெளிக் கேட்டை ஒட்டி இருபெரிய குல்மோஹர் மரங்கள் உண்டு. அவற்றில் ஒன்றின் மறைவில் தன்னை வெளிக்காட்டாமல் நின்று கவனித்தாள்.

வெகு விரைவிலேயே வேக நடையுடன் ராணியும் வந்து சேர்ந்தாள். அவளது அலங்காரத்தைக் காண, சுபாங்கிக்கு பிரமிப்பாக இருந்தது.

மோனிகாவின் வீட்டில், இந்த அளவு அலங்காரங்கள் செய்வது இல்லை! கீழே உள்ள 'ரெஸ்ட் ரூமி'ல் ஒளிந்திருந்து, இதையெல்லாம் செய்து வந்திருக்கிறாள்.

ராணி மட்டும் சற்றுத் திரும்பிப் பார்த்திருந்தால், அடி மரத்தின் மறுபுறம் சுபாங்கி நிற்பதைக் கண்டிருக்கக் கூடும். ஆனால் அவளது முழுக் கவனமும் வேறிடத்தில் இருந்ததால், இப்புறம், அப்புறம்

அவள் பார்க்கவே இல்லை!

ஆக, ஆனந்தன் சொன்னது முழுதும் மெய்தான். அவளுள் இருந்த சிறு ஐயமும் மறைந்துவிட, அவளும் ஆனந்தனின் வருகைக்காக காத்திருக்கலானாள்.

அவனும் விரைவிலேயே வந்துவிட, அவன் திரும்பும் திசையில் ராணியும் ஓடி, காரைத் தட்டி, சைகையால் 'லிஃப்ட்' கேட்டாள்.

கூசிப் போயிற்று சுபாங்கிக்கு. இப்படியா, ஒருத்தி ஓர் ஆண்மகன் பின்னே ஓடுவாள்? அதிலும் கிட்டத்தட்ட அன்னியன்!

ஆனந்தன் முன்னே மிகவும் தலைகுனிவாக உணர்ந்து, மறைவிடத்தை விட்டு வெளியே வந்தாள் "ஹலோ ராணி!" என்று அழைத்தபடி.

உள்ளத்தில் கள்ளம் இருந்ததாலோ என்னவோ, சில வினாடி நேரம், ராணிக்கு வியர்த்து விறுவிறுத்துப் போயிற்று.

செய்வது அறியாமல் அவள் விழிக்கும்போதே, ஆனந்தன் கிளம்பிவிட்டான்.

அவன் சும்மாப் போயிருந்தால் கூட, ராணிக்குப் பெரிதாக தோன்றியிராது. இவ்வளவு கஷ்டப்பட்டு செய்த அலங்காரத்தைப் அவன் பார்க்கவில்லையே என்ற வருத்தம் மட்டுமே இருந்திருக்கும்.

ஆனால், போகிற போக்கில், அவன் சுபாங்கியிடம் தலையசைத்துக் கை காட்டிவிட்டுப் போகவும், அவளுக்குக் கொதித்துப் போயிற்று.

சுபாங்கியும் தன் வழியிலேயே முயன்று, ஏற்கனவே ஆனந்தனைப்பிடித்து விட்டாளோ என்ற சந்தேகத்தில் வாய்ப் பூட்டு மறைய, "நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

மோனிகா, சுபாங்கியை விட, ராணி ஓரிரு ஆண்டுகள் சின்னவள்தான். படிப்பும் குறைவு. ஊரில் சற்று சிரம வாழ்வு. தம்பி கேட்ட உதவியாக, ராணி படித்த படிப்புக்கு ஏற்றவாறு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து, அதே சமயம் சுகேசனின் துரோகத்தால்



சோர்ந்திருந்த மகளுக்கும் துணையாகத் தம்பி மகளை வீட்டிலேயே தங்க வைத்தார், மோனியுடைய தந்தை.

மோனியுடைய தோழி என்பதால், சுபாங்கிக்கு 'அக்கா' மரியாதை உண்டு.

ஆனால், இன்றைய கேள்வி, குரல் இரண்டிலும் பேதம் இருந்தது.

சுபாங்கிக்கும் ஆத்திரம்தான். பெண் இனத்தையே அல்லவா, கேவலப்படுத்திக் காட்டிவிட்டாள்! அதுவும் அந்த ஆனந்தனிடம்!

ஆனால், கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், சற்று மதிலைச் ஒட்டி வளர்க்கப்பட்டிருந்த குரோட்டன்ஸைக் கை நீட்டிக் காட்டினாள் "இந்தச் செடிகளுக்குத் தண்ணீர் ஒழுங்காக ஊற்றியிருக்கிறதா என்று பார்க்க வந்தேன். நீ என்ன ராணி, இவ்வளவு அலங்காரம் செய்துகொண்டு, கிளம்பியிருக்கிறாய்? இந்த மாதிரி அலங்காரம், அங்கிள், ஆன்ட்டிக்குப் பிடிக்காதே!" என்று சிறு வியப்புக் காட்டி விசாரிக்கவும், மறுபடியும் மற்றவளுக்கு வியர்த்துக் கொட்டியது.

இந்த சுபாங்கி, இதைப் போய், அவளுடைய பெரியப்பாவிடம் சொல்லிவிட்டால்?

ராணிக்கு சொந்த வீட்டில் எவ்வளவோ கஷ்டம். இங்கு வந்துதான், அவள் ஒரு நல்ல வாழ்வை அனுபவிப்பதே. எனவே, பிடிக்கிறதோ, இல்லையோ அங்கே எல்லோரையும் அவள் அனுசரித்து நடப்பது அவசியம். முக்கியமாக எளிமை விரும்பியான அவளுடைய பெரியப்பாவை!

பெரியவர்களுக்குக் கட்டுப்பெட்டித்தனம் கிடையாது என்றாலும், இப்போது அவள் செய்து கொண்டிருக்கும் அலங்காரம், ரொம்பவே அதிகப்படி. கட்டாயம் திட்டு விழும்!

தீவிரமாக யோசித்து "என் சிநேகிதி ஒருத்தி, இந்த 'மேக்கப் செட்' கொடுத்தாள்க்கா. ரொம்ப அதிகப்படிதான். இல்லையாக்கா? பார், நன்றாகவே இல்லை என்று காட்டிவிட்டுத் திருப்பிக் கொடுக்கத்தான் கி...கிளம்பினேன். பெரியப்பா, பெரியம்மாவுக்குப்

பிடிக்காது. அதனால் எனக்கு வேண்டாம் என்று சொல்லப் போகிறேன். பாருங்கள்" என்று கையோடு வைத்திருந்த பையைத் திறந்து காட்டினாள்.

கெட்டிக்காரிதான். வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல், கீழே வந்து தீட்டிக் கொள்வதற்காக கையில் எடுத்து வந்ததை, எப்படி மாற்றிச் சொல்கிறாள்!

கொஞ்சம் அசடு என்று பட்டம் வாங்கியவளுக்கே இவ்வளவு என்றால், பள்ளி, கல்லூரியில் நல்ல 'ரேங்க்' வாங்கி வெற்றி பெற்ற தனக்கு எவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருக்க வேண்டும்?

"ஓஹோ! அந்தத் தோழி வீட்டுக்குச் சீக்கிரம் போக வேண்டும் என்றுதான், மிஸ்டர் ஆனந்தனிடம் லிஃப்ட் கேட்டாய்போல! ஆனால், அது தப்பு, ராணி. ஊரில் வளர்ந்ததால், உனக்கு உலகம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். இப்படி அன்னிய ஆண்களுடன் தனியே போவது தப்பு. இனி இப்படிச் செய்யாதே"என்று பெரியவளாக அறிவுரை கூறினாள்.

ராணி அவளைப் பார்த்த பார்வையில் முழு வெறுப்பு இருந்தது.

சுபாங்கி கேள்வியாய் நோக்கவும், சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக்கொண்டு, "அன்றைக்கு நீங்கள் மட்டும் காரை வழி மறித்து, அவரோடு காரில் சேர்ந்து போனீர்களே!" என்று கேட்டாள் ராணி.

ஒருகணம் திகைத்தபோதும், உடனேயே சமாளித்து "ஆனந்தன் எனக்கு அன்னியர் இல்லையே! என் அண்ணனுக்கு நெருங்கிய நண்பர். அம்மா, அப்பாவிடம் ரொம்ப மரியாதை! பவிக்குட்டி, அவரைக் கண்டாலே பாய்கிறாள். ஒரு வேலையாக நான் அவரோடு காரில் ஒன்றாகச் செல்வதையும், பழக்கமற்ற நீ அப்படிப் போவதையும், ஒத்துப் பேச முடியுமா? யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப்பார்" என்றாள் சுபாங்கி அமர்த்தலாக.

அவள் எதிர்பார்த்தது போலவே, ராணி அப்படியே பின்வாங்கி விட்டாள்.



மற்றபடி, அவள் யாரிடம் போய் இந்தக் கேள்வியைக் கேட்க முடியும்?

முதலில் அவள் 'லிஃப்ட்' கேட்டதை வெளியே எப்படிச் சொல்வாள்?

ஆனந்தனிடம் 'லிஃப்ட்' கேட்பதை நிறுத்தியபோதும், பணக்காரி ஆவதற்குக் குறுக்குவழி அவனே என்ற எண்ணத்தை ராணி அடியோடு விட்டுவிடவில்லை. அதற்கான வழி முறைகளைத் தேடிக் கொண்டேதான் இருந்தாள்.

குழந்தை பவித்ராவை, ஆனந்தன் அடிக்கடித் தூக்கி வைத்துக் கொள்வது, மற்றவர்களைப் போலவே, அவள் கண்ணிலும் பட்டது. குழந்தையை அவன் தூக்கும் விதமும், பவித்ரா அவனிடம் ஒட்டிக் கொள்வதையும் கவனித்த அவளுக்கு, அவனை நெருங்க அது வழியோ என்ற எண்ணம் உண்டாயிற்று.

பொதுவாக பிள்ளை தூக்குவது, அவளுக்குப் பிடிக்காத விஷயம். அது எந்த நேரத்தில் என்ன அழுக்குப் பண்ணுமோ என்ற வெறுப்பு. அதேபோல, அழுவது, அடிப்பது, கடிப்பது என்னத்தைச் செய்து தொலைக்குமோ என்ற பயம்.

அதனால், பவித்ராவை, ராணி தொட்டுக் கூடப் பார்த்தது இல்லை. பக்கத்தில் வந்து, விளையாட்டுக் காட்டி... ஊகூம். எதுவுமே செய்தது கிடையாது.

குழந்தை சுகேசனுடையது என்பது, அவளுக்கு நல்ல சாக்காகவும் ஆயிற்று. அவளுடைய அன்பு அக்கா, மோனிகாவை ஏமாற்றியவனுடைய மகள். கண்ணால் பார்த்தாலே பாவம் அல்லவா?

இப்படி இருந்த நிலை, இப்போது மாறிவிட்டது.

ஒரு விலை உயர்ந்த தள்ளுவண்டியை காரிலிருந்து எடுத்துவந்து, பவித்ராவின் வீட்டில் கொடுத்ததில், இருந்து குழந்தை அவளது கண்ணின் கருமணியே ஆகிவிட்டாள்.

இந்த மனமாற்றத்தை ஆனந்தன் அறியச் செய்வது எப்படி?

அவனும் அறிந்தால் அல்லவா, அவளுக்கு ஏதேனும் விதத்தில் பயனாகும்!

சுற்றிச் சுற்றித் தேடிக் கொண்டிருந்தவளுக்கு அதற்கான வழி ஒன்று கிட்டியது.

அதுதான் குழந்தை பவித்ரா! குட்டி பிசாசுக்கு பெயரே சரி கிடையாது. தப்பில் பிறந்தது, எப்படி பவித்ரா ஆகும்?

அது எப்படியோ போகட்டும். இப்போது அந்தக் குட்டிதான், அவளுக்குக் கிடைத்த ஒரே துருப்புச் சீட்டு!

பொதுவாக சுகேசனுடைய குழந்தையை அவன் குடும்பத்தினர், மற்றவர்களிடம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வது கிடையாது. அவசியம் என்றால்தான், அவளை வெளியே கூட்டிப் போவதே.

ஆண்டுக் கணக்கில் மோனிகாவோடு காதல் என்று பறை சாற்றிவிட்டு, வேறு ஒருத்தி மூலம் பிள்ளையையே பெற்றுக் கொண்டு வந்து நின்றால், பழகிய மற்றவர்களிடம் காட்டிப் பெருமைப்பட முடியாதுதான். வீட்டுக்குள்ளே முடங்கித்தான் ஆக வேண்டும்.

ஆனால், ஆனந்தன் அங்கே வந்ததில் இருந்து, அதில் ஒரு மாற்றம் தெரிந்தது.

அவனே, அந்தக் குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே காட்சி கொடுத்தான். செந்திரு அம்மா காய் வாங்கும்போது, அவன் பவித்ராவை தூக்கிக் கொண்டு நிற்பதும், பெரும்பாலும் தினசரி நிகழ்வு! அதற்குப் பிறகுதான், தன் அலுவலுக்காக அவன் கிளம்புவதே.

ஆனால், முதலாளி. எப்போது போனாலும், யார், என்ன கேட்பது? அவன் முதலாளி என்பதே, ராணியின் மயக்கத்தை அதிகரித்தது.

அன்றைக்குப் பாப்பாவுக்கு தடுப்பூசி போட, அவன் காரில்தான் போய் வந்தார்கள். பவித்ராவைத் தூக்கி வந்து, வீட்டில் விட்டுவிட்டுத்தான், ஆனந்தன் போனான்.

குடியிருப்பின் உள்ளே அமைந்திருந்த சிறு பூங்காவில் சில



சமயம், குழந்தையோடு, அவனைப் பார்க்க முடிந்தது.

அந்த நேரத்தில், அவனை இடை மறித்து, பாப்பாவைக் கொஞ்சுவது போல இரண்டு வார்த்தைகள் பேசலாம் என்று எண்ணி, வீட்டோடு இருக்கும் பெரியம்மாவின் கவனத்தை ஈர்க்காமல், ஒருவாறு அவள் உடை, முகம் திருத்திச் செல்லுமுன், ஆள் காணாமல் போய்விடுவான். அல்லது, அந்தக் குடும்பத்தில் யாராவது தாயோ, மகளோ, பிள்ளைக்காக என்று வந்துவிடுவார்கள்.

வாரக் கடைசி என்றால், அதன் அப்பன்காரன் சுகேசன்!

இதற்கும் மேலாக, அவள் ஒண்டியிருந்த குடும்பத்தினரின் நடமாட்டத்திலும், கவனம் வைக்க வேண்டியிருந்தது.

ராணியின் பொறுமை தீர்ந்து கொண்டிருந்தசமயம், இயற்கையாகப் பார்த்து, அவளுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. கிட்டத்தட்ட அப்படித்தான்.

ஆனால்....



# பேசும் பொற்சித்திரமே 9

நடந்து கொண்டே புத்தகம் படிக்கிற சாக்கில், ஜன்னல் வழியேயும், சிட்அவுட்டில் நடந்தும், மாடிப்படி அருகே மேல் தளத்தில் நின்றும், பல நாட்களாக ராணி தேடிய வாய்ப்பு அவளுக்குக் கிடைப்பதாகவே தெரியவில்லை.

ஏமாற்றமும், எரிச்சலுமாக ஏதாவது அதிரடி வேலைகளில் ஈடுபடலாமா என்று பல விதமாக யோசித்துப் பார்த்தாள்.

அவளது அதிரடி ஐடியாக்களுக்கு, ஆனந்தனின் எதிர் வீட்டுக்காரி சுபாங்கி இருந்தது, பெரும் பாதகமாக அமைந்தது.

வெறும் 'லிஃப்ட்' கேட்டதையே கெடுத்தவள் ஆயிற்றே! இப்போது ஏதாவது ஏமாற்றி, அவன் வீட்டுக்குள் சென்று, மோகினி வேஷமோ, காதல் நாடகமோ நடத்தலாம் என்றால், அவளை மீறியல்லவா, அதைச் செய்ய வேண்டும்!

எங்கிருந்தாவது பார்த்து, எல்லாவற்றையும் கெடுத்து விடுவாள். இங்கும் அங்குமாக நின்று தன்னாலேயே ஆனந்தனின் நடமாட்டத்தை இவ்வளவு துப்பறிய முடிகிறது என்றால், எதிர் வீட்டு ஜன்னலே போதுமே! திரையை லேசாக விலக்கினாலே, எல்லாம் துலாம்பரமாகத் தெரிந்துவிடும்.

ராணியின் பெரிய பிரச்சினை என்னவென்றால், அவளது ஒரே முயற்சியில், அவள் வெற்றி பெற்றே ஆக வேண்டும். அரை குறை நிலையெல்லாம் கூடவே கூடாது. அப்புறம், முக்கால் கிணறு தாண்டிய கதையாய், உள்ளதும் போய், அவள் பழைய நிலைக்குப் போய்விட, நேரும்! என்ன ஆனாலும், அது மட்டும் நேரவே கூடாது!

எனவே அதிரடியைவிட மெல்லவேனும், அவன் மனதில் இடம் பிடிப்பது நல்லது. ஆனால் அதுவும்தான் எப்படி?

ஆயிரம் யோசித்து, அவள் மண்டை காய்ந்து கிடந்தபோதுதான், அந்த சிறு வாய்ப்பு, அவள் பக்கம் வந்தது.

மோனிகாவுடைய தாய் வழி உறவில், ஒரு துக்கம் நேர்ந்தது. ராணியைப் பொறுத்தவரை, ஏதோ ஒரு கிழம் மண்டையைப் போட்டது.

உறவுக்காரர்கள் என்பதால், மோனிகா குடும்பம் காலையிலேயே அங்கே போய்விட்டது.

ராணி போவது கட்டாயம் இல்லை என்பதால், அவளது விருப்பம் போல, வீட்டிலேயே இருந்து விட்டாள்.

எல்லோரும் ஒன்றாக கிடந்து குலவியபோது, கணபதிக்கும் பழக்கத்தால் வேண்டப்பட்டவர்கள் என்பதால், கணவனும் மனைவியுமாக அங்கே போயிருந்தனர்.

சீக்கிரமாக வந்து விடுவதாக சொல்லித்தான் சென்றார்கள். ஆனால் அங்கே ஏதோ காரணத்தால், அவர்கள் கிளம்ப முடியாமல் தாமதம் ஆகிக்கொண்டே இருந்தது.

சுபாங்கிக்கு அலுவலக வண்டி வருகிற நேரம் ஆகிவிட்டது.

எப்படியோ சமாளித்து, பிள்ளையையும் கவனித்துக்கொண்டே,



கிளம்பித் தயாராகிவிட்டாள். ஆனால், தாயார் வராமல் பவித்ராவை எப்படி விட்டுப் போக முடியும்?

இந்தக் கவலையோடு வெளி வாயிலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது, ராணியின் கண்ணில் பட்டது.

திடுமென தேன்குரலில், "சுபாக்கா..." என்று ஓர் அழைப்புக் கேட்கவும், சுபாங்கி வியப்புடன், திரும்பிப் பார்த்தாள்.

குரலுக்கு உரியவள் ராணியேதான். ஆனால், ராணியின் குரலில், இவ்வளவு குழைவும் கனிவும் வந்ததுதான் அவளுக்கு அதிசயம்!

அதிலும் அன்றைய 'லிஃப்ட்' உரசலுக்கு பிறகு, ராணியைப் பார்ப்பதே அரிதாகியிருந்தது. நேர் எதிரே வந்துவிட்டால் கூட, வேறு பக்கம் ஏதோ சுவாரசியமாகப் பார்ப்பது போன்ற பாவனையில் விலகி ஓடிக் கொண்டிருந்தவள்! இன்று எதற்காக, இந்தத் திடீர் உல்டா?

யோசனையோடு பார்க்கும்போதே, "ரொம்ப ஸ்வீட் பாப்பா!" என்று பவிக்குட்டியை ராணி கொஞ்சவும், சுபாங்கிக்குச் சில வினாடி தலையே சுற்றிவிட்டது.

"அச்சோ அக்கா, உனக்கு அலுவலகத்திலிருந்து வண்டி வருகிற நேரம் ஆகிவிட்டது போல? ஆன்ட்டி. அங்கிள் காலையில் போனதைப் பார்த்தேனே! அவர்கள் இன்னமும் வரவில்லையா? இந்த லட்டுக்குட்டியை வேணுமானால் என்னிடம் கொடுத்துவிட்டுப் போகிறாயா? நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று மட்டும் சொல்லியிருந்தால் கூட, சுபாங்கிக்குச் சந்தேகமாகத்தான் இருந்திருக்கும்.

ஆனால், தன்னுடன் பேசியவளின் பார்வை, எதிர் வீட்டு ஜன்னல்களையும், கதவையும் ஆவலாக ஆராயவும், விஷயம் புரிந்து, அவளது முகம் கடுத்தது.

இந்த ஆனந்தன் வந்து வந்து பாப்பாவைத் தூக்குவது, இவள் கண்ணில் வரை பட்டிருக்கிறது!

'ஸ்வீ...ட் பாப்பா'வாம்! லட்டுக் குட்டியாம்!' அண்ணன் மகனை,

அவள் என்னென்ன பெயர் சொல்லிக் குறிப்பிடுவாள் என்று சுபாங்கிக்குத் தெரியாதா?

கூடவே அன்றளவு இல்லை என்றாலும், அவசரமான பவுடர், உதட்டுச்சாய தீற்றல்கள்! உடையிலும் பளிச்!

லேசாக முறுவலித்தாள் அவள் "ஏன் ராணி, உனக்கு இன்று அலுவலகம் போகத் தேவையில்லையா? ஞாயிற்றுக்கிழமை மட்டும்தானே, உனக்கு விடுமுறை? இன்றென்ன?" என்று வியப்புக் காட்டி விசாரித்தாள்.

"அது... இருக்கிறது... ஆனால், இந்தச் சர்க்கரைக் குட்டிக்காக ஒரு நாள் லீவு போட்டுவிட்டால் போகிறது! இவளை விட வேலை முக்கியமா, என்ன?" என்று உருக்கமாக மொழிந்தாள் மற்றவள்.

சொல்ல மாட்டாயா பின்னே என்று உள்ளூர காய்ந்தபோதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், "ஆண்கள் என்றால், இஷ்டம் போலக் கிளம்பிப் போய்விடுவார்கள். எனக்கானால், அலுவலகத்திலிருந்து வண்டிக்காகக் காத்திருந்து, ஓட வேண்டியிருக்கிறது. ஆனால் நீ... பரவாயில்லை. சம்பளம் போனால்கூடப் பரவாயில்லை என்று விடுமுறை எடுக்கத் தயாராக இருக்கிறாயே! சிலபேர் சொந்தத் தொழில் என்றாலும், வேலை வேலை என்று ஓடி விடுகிறார்கள்." என்றாள் சுபாங்கி, எதிர்வீட்டைக் குறிப்பாகப் பார்த்து.

அவளது தூண்டில் வீணாகவில்லை.

"ஓ! மிஸ்டர் ஆனந்தன் நேரத்துக்குக் கிளம்பி விடுவாரா?" என்று எதிர்க் கதவை ஏக்கமாகப் பார்த்துக் கேட்டாள் ராணி.

இன்னொரு பெண், அவளைப் பற்றி என்ன நினைப்பாள் என்பது கூட இல்லாமல், தனித்திருக்கும் ஓர் இளைஞனைப் பற்றி இப்படி நேரடியாக விசாரிக்கிறாளே!

கேட்டாயல்லவா? பதிலையும் வாங்கிக் கொள் என்று உள்ளூரக் கருவியபடி "நான் ரொம்பப் பார்த்தது இல்லைப்பா. ஆனால், அம்மாதான் சொன்னார்கள். அலுவலுக்கு அந்த ஆள் கிளம்பி விட்டால், கடுகடு என்று முகத்தை வைத்துக்கொண்டு கூப்பிட்டால்



கூட கேளாத மாதிரி வேகமாகப் போய்விடுவாராம். காரில் ஏறும்போது, இன்னமும் கூத்தாம்! வழியெல்லாம் அவரோடு காரில் ஏறிக்கொள்ள, பல பெண்கள் முயற்சிப்பார்களாம்! 'அரை சென்டிமீட்டருக்குப் பவுடரை அடித்துக்கொண்டு வரும் இதுகளைப் பார்த்து மயங்கிவிட, நான் என்ன முட்டாளா, சார்? ஒருவனிடம் கொஞ்சம் பணம் இருந்துவிட்டால், எந்தக் கேவலத்துக்கும் இன்றையப் பெண்கள் இறங்கி விடுகிறார்கள்' என்று அப்பாவிடம் எரிச்சலாகச் சொன்னாராம்" என்று சுபாங்கி முடித்தபோது, ராணியின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்திருந்தது.

"அப்பா அது பற்றி என்னிடம் கூறியபோது, அந்தப் பெண்களை நினைத்து, எனக்கே ரொம்ப அவமானமாக இருந்தது. அவர்கள் எல்லாம் நடுத்தெருவில் நிறுத்தி சாட்டையால் அடிக்க வேண்டும். என்ன ராணி நீ என்ன சொல்லுகிறாய்?" என்று மேலும், அவளிடமே கேட்கவும், ராணி திணறித் திண்டாடிப் போனாள்.

அவளைப் போலவே, பலபேர் முயற்சிக்கிறார்கள் போலிருக்கிறதே என்பது ஒன்று, இவனை வேறு எப்படி வளைப்பது என்ற கவலையோடு, அவன் தன்னையுமே குறித்துச் சொன்னானோ என்ற அவமானமும் சேர "அ... அது... அடுப்பில் கூட்டுக்கு வைத்தேன். ஏ... ஏதோ... கருகுகிற வாசம் வருகிறது. போ... போகிறேன்" என்று உளறிக் கொட்டிவிட்டு, மேல் தளத்துக்கு ஓடிப் போனாள்.

அவள் ஓடிப் போனதும் ஏற்பட்ட, சிறு குரூரத்துடன் கூடிய திருப்தி, சுபாங்கிக்கு உடனே மறைந்தது.

செல்ஃபோனில் செய்தி வந்துவிட்டது. முந்தைய நிறுத்தத்தில் இருந்து, அலுவலக டாக்சி கிளம்பிவிட்டது. இன்னும் அவளுக்கு இருப்பது, ஐந்தே நிமிஷங்கள்!

எதிர்க் கதவைப் பார்த்தாள்.

இவனிடம் உதவி கேட்பதா? அல்லது, விடுமுறைக்குச் சொல்லி விடுவதா?

சுபாங்கி யோசிக்கும்போதே, எதிர்ப்புறம் கதவு திறந்தது.

அவளைப் பார்த்து முறுவலித்து 'என்ன? வைத்து வாங்கிவிட்டாயே. பாவம்தான் என்றாலும், தாங்க்ஸ்! பவியை நான் வைத்துக் கொள்கிறேன்" என்று அவனிடம் தாவிய குழந்தையை "நம்பித் தருவாய்தானே?" என்று கண்ணில் சிரிப்புடன் கேட்டவாறு வாங்கினான்.

எல்லாம் கேட்டிருக்கிறான்!

அவள் சந்தேகப்பட்டது போல உளவு பார்க்கத்தான் செய்கிறான்.

அண்ணன் வந்தால், சொந்த வீட்டுக்குப் போகலாமா என்று அவன் சிந்திக்குமுன், கதவைத் திறந்து கூப்பிட்டுக் கொள்கிறானே! வேவு பார்த்துக் கொண்டே இராமல், எப்படி முடியும்?

அவளது பார்வையில் ஐயம் தெரியவும், "கவலைப்பட வேண்டாம் சுபாங்கி, பாப்பாவை நான் நன்றாகவே பார்த்துக் கொள்வேன்" என்றான் ஆனந்தன்.

சுபாங்கியும் கிளம்பிப் போய்விட்டால், இன்று பவிக்குட்டியின் குரலை, அம்மாவுக்கு ஃபோன் செய்து கேட்க வைக்கலாம் என்று எண்ணினான் அவன்.

பேத்தி எப்படி... என்னென்ன செய்கிறாள் என்று அடிக்கடி, ஆவலுடன் கேட்கும் தாய்க்கு ஆறுதலாக இருக்கக்கூடும்.

அவனது சிந்தனையை இடைவெட்டி, "பவிக்குட்டி பற்றி, எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால்...." என்று சுபாங்கி ஐயத்துடன் ஜன்னல் திரைகளைப் பார்த்தாள்.

என்ன சந்தேகம் என்பது தெளிவாகப் புரிந்துவிட, அவன் மறுத்துப் பேச முயற்சிக்கவில்லை: மாறாக, "என்ன செய்வது? அந்தப் பெண் எந்த நேரம் வந்து என்ன செய்வாள் என்று நிச்சயம் இல்லாதபோது, எப்போதுமே நான் எச்சரிக்கையுடன்தானே இருக்க வேண்டும்? நான் இங்கே புதிதாக வந்தவன் வேறு!" என்று அந்தச் சமயத்துக்குச் சரியாக ஒரு விளக்கம் கொடுத்தான் ஆனந்தன்.

மறுக்க முடியாத விளக்கம்தான். ஏனெனில், ராணியின் செய்கை



அதற்கு ஓர் உறுதியான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்திருந்தது.

அப்போதும் கூட, அவனது விளக்கத்தை முழுதாக ஏற்க அவளால் முடியவில்லை. ஆனால் மேலே யோசித்துப் பார்க்க அவகாசம் இன்றி, அலுவலக வண்டி வாயிலுக்கு வந்துவிடவே, ஆனந்தனிடம் ஒரு "நன்றி!"யோடு சுபாங்கி விரைந்தோடிப் போனாள்.

அந்த வாரம் வரும்போது, மனதில் அழுத்தத்தைக் காட்டும் விதமாக முகம் இறுகியிருந்தபோதும், சுகேசன் குடி வாடையே இல்லாமல் வந்து சேர்ந்தான்.

எதுவும் கேளாதபோதும் ஆனந்தனிடம் அவனே சொன்னான் "இந்த இரண்டு நாட்களில், ஒரு முக்கியமான வேலையை முடித்துவிட எண்ணியிருக்கிறேன், ஆனந்தன். அதற்கு, நான் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம்" என்று விளக்கம் கொடுத்தான்.

அந்த வேலை பற்றிய விவரம் ஆனந்தனுக்குத் தெரியும். குட்டை குழம்பட்டும், என்ன மீன் கிடைக்கிறது என்று அப்புறம் பார்க்கலாம் என்பது அவன் எண்ணம். எனவே, எதுவும் கேளாமல், சும்மா காத்திருந்தான் அவன்.

அந்த வாரம், மோனிகாவோடு, சுகேசனால் தனியே பேச முடிந்தது.

மன்னிப்புக் கேட்பதும், பொத்தாம் பொதுவாக, அவளுக்கு நல்ல வாழ்வு அமைய விரும்புவதும், தவிர, சுகேசன் வேறு என்ன பேச முயற்சிக்கிறான் என்று அறிய, அவளுக்குமே ஆர்வம் இருந்தது. அவன் விரும்பிய அவளது நல்வாழ்வு யாருடன் என்று எண்ணுகிறான் என்பதில், அடி வயிற்றில் அவளுக்கு ஒரு கலக்கமும் உண்டு.

மற்றெதையும் விட, அந்த நல்ல வாழ்வு, அவனுடனேயே அமைய ஏதாவது வழி சொல்வானா என்ற ஆசைதான் அவளுக்குப் பெரிதும்

இருந்தது.

அதனால், பொதுவாகக் கூடவே தொடரும் ராணியை வேறிடம் அனுப்பிவிட்டுத் தனியாகவே போய்ப் பேசினாள்.

ஆனால், சற்றும் எதிர்பாராத, அவனது கோரிக்கை, அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பெரிய அதிர்ச்சி! சீக்கிரமே இன்னொருவனை மணந்து, அவனோடு இன்பமாக வாழ வேண்டுமாமே! இன்னொருவன்! இந்த வார்த்தை சொல்ல, அவனால் எப்படி முடிந்தது? எப்படி வாய் வந்தது? அதற்கு, அவனே கூட உதவி செய்வானாமே!

அவன் வாயிலிருந்து இப்படி ஒரு பேச்சா?

தன் காதுகளையே நம்ப முடியாத அதிர்ச்சி!

அடுத்து, அவனைப்போல, அவளையும் நினைத்து விட்டானா என்று ஆத்திரம் வந்தது, அவளுக்கு. அதுவும் கோபாவேசம்!

சின்ன வயதில் இருந்து சேர்ந்து பழகிவிட்டு, காதல் என்று உணர்ந்து, அதற்காக இரண்டு ஆண்டுகள் போராடிவிட்டு, அவளிடமோ, பெற்றோரிடமோ கூடச் சொல்லாமல் கொள்ளாமல் எவளோயோ மணந்தானே! அந்த மாதிரி மட்டமான புத்திதான் அவளுக்கும் இருக்கும் என்று எண்ணினான் போல!

அதையே அவனிடமும் சொல்லிவிட்டு, அவன் கூப்பிடக் கூப்பிட நில்லாமல், மோனிகா ஒரு புயலைப் போல வேகமாக வீட்டுக்குத் திரும்பி போய்விட்டாள். ஆனால் வீட்டை அடைந்ததும், அவளுக்கு நெஞ்சை அடைத்துக்கொண்டு, 'ஹோ' என்று வந்தது.

இருந்திருந்து சுகேசனே அவளிடம் என்ன சொல்லிவிட்டான்!

சுகேசன் செய்த துரோகத்தின் பின், வேறு ஒரு நல்லவனை மணந்து கொள்ளும்படி, அவனிடம் யார் யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

பெற்றோர், சுபாங்கி, செந்திரு... ஏன், வெளியே தெரியாமல் கணபதி கூட, இதே அறிவுரையை, அவளுக்கு வழங்கியிருக்கிறார்.

தன் தரம் கெட்ட மகனுக்காக, ஒரு நல்ல பெண்ணின் வாழ்வு



அழியக் கூடாது என்பது, அவருக்கு. அதையே கரகரத்த குரலில் அவளிடமே கூறினார்.

அப்போதெல்லாம், அவர்கள் அத்தனை பேருக்கும், மோனிகாவால் பதில் சொல்ல முடிந்தது. அவளது உறுதியை அசைக்க முடியாமல், மற்றவர்கள்தான், அவளது திருமணப் பேச்சைக் கைவிட்டிருந்தனர்.

அமைதியும், உறுதியும் நிறைந்த குரலில் அவள் பேசிய விதமே, அவர்கள் வாய் மூட வைத்திருந்தது.

ஆனால், இன்று சுகேசனே வேறு ஒருவனை மணக்கும்படி கூறவும், அவளால் தாங்க முடியவில்லை.

எப்போதுமே, உணர்ச்சிகளை அதிகமாக வெளிக் காட்டுகிறவள் அல்ல மோனிகா.

எப்போதுமே ஒரு கட்டுப்பாட்டுடன் இருக்கிற மகள், வெளியே போய் வந்ததில் இருந்து, அடக்க மாட்டாமல் பொங்கிப் பொங்கி அழவும், மல்லிகா வெகுவாகக் கலங்கிப் போனாள்.

அவள் என்ன கேட்டும் பதில் வராது போகவும், சுபாங்கியை அழைத்தாள்.

இரட்டையர்கள் போல, வளர்ந்த பெண்கள். முன்போல வெளிப்படையாக ஒட்டிக்கொண்டு, அலையாவிட்டாலும், தோழிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை இருப்பது, இரு பக்கப் பெரியவர்களும் அறிந்ததே.

அந்தப் பையனுக்குத் திடீர்க் கிறுக்குப் பிடித்ததற்கு, மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்பதுதான் எல்லோருக்கும். ஆனால் முன்போல கலகலப்பாகப் பேசி உறவாட முடியாதபடி, தானாக ஓர் ஒதுக்கம் வந்துவிட, பெரியவர்கள் அதை உடைக்க முயற்சிக்கவும் இல்லை. தாய்மாராவது, எங்கேனும் சந்தித்தால், ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வார்கள். ஆண்கள்தான் அடியோடு விலகிப் போனார்கள்.

ஒருவருக்கு குற்ற உணர்ச்சி, அடுத்தவருக்குக் கொதிப்பு!

இப்போது, எதுவும் சொல்லாமல் அழும் மகள், தோழியிடம் மனம் விட்டுப் பேசுவாளோ என்று தோன்றவும், கணவர் காது கேட்கவே, மல்லிகை, சுபாங்கியைக் கூப்பிட்டாள்.

தேவதாசனுக்கும் மகள் அழுவது தாங்கவில்லைதானே? மனைவியைத் தடுக்கவில்லை.

வினாடிக் கூடத் தாமதிக்காமல், சுபாங்கியும் ஓடி வந்தாள்.

இங்கே கிச்சுக் கிச்சுக் காட்டினால், அங்கே சிரிக்கிறவர்கள் ஆயிற்றே! ஒரு பார்வையிலேயே கேட்டுவிட்டாள். "அண்ணன் உன்னைச் சந்தித்தாரா?" என்று!

மெல்ல விவரம் வெளியே வர, சந்தோஷம் வருத்தம் இரண்டுமாக உணர்ந்தாள், அவள்.

அண்ணன் திருந்திவிட்டான் என்ற மகிழ்ச்சி. அதேசமயம், மோனிகாவிடம் வேறு ஒருவனை மணக்கச் சொல்லுகிறானே என்று வருத்தமாகவும் இருந்தது.

மனம் திருந்தி இருப்பவனை, மோனிகாவே மணந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஆனால், மனதில் இருப்பதை அங்கே வாய் திறந்து சொல்லவும் அவளால் முடியவில்லை ஆன்ட்டி, அங்கிள் இருவரின் மனநிலையும் அவள் அறிந்ததே. மகளை மிகவும் வேதனைப்பட வைத்தவனிடம் வெறுப்பு இருப்பது இயல்புதானே? அதில், அவர்களைத் தப்பு சொல்ல என்ன இருக்கிறது என்றது, அவளது நியாய மனம்!

தோழியின் தோளில் சாய்ந்துகொண்டு, மோனிகா புலம்பினாள். "நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து, எங்கெல்லாம் சுற்றியிருக்கிறோம்! அப்படிச் சுற்றிய இடத்தில் வைத்தே, இன்னொருவனை கட்டிக்கொள் என்று என்னிடம் சொல்ல, அவருக்கு எப்படி மனம் வந்தது?" என்று விசித்தாள்.

சட்டென நிமிர்ந்து உட்கார்ந்தார் தேவதாசன் "அதுதான் விஷயம்!" என்றார் கோபமும், எகத்தாளமுமாக, "நம்மையெல்லாம் முட்டாள் என்று நினைத்துவிட்டான்! ஒரு தரம் முகத்தில் கரியைப்



பூசியவன், அடுத்த 'ரவுண்ட்'டுக்கு முயற்சிக்கிறான்!"

மூன்று பெண்களும் திகைப்புடன் அவரைப் பார்த்தார்கள்.

சுபாங்கியின் முகத்தைப் பார்த்ததும், லேசாக முகம் கன்ற "நீ தப்பாக நினையாதேம்மா. உன் அண்ணனின் தப்பை உன் மேல் ஏற்றி, நான் ஒருபோதும் நினைத்ததே இல்லை. அவன் வில்லத்தனத்துக்கு நீ என்னம்மா செய்வாய்?" என்றார் பரிவாக.

"தெரியும் அங்கிள்..." என்ற சுபாங்கிக்கு, மேலே பேச வாயெழவில்லை.

சுகேசனின் செயலில், இவர் புதிதாக என்ன பிழையைக் கண்டு பிடித்தார்?

இந்த வீட்டில் சுகேசனுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை சொல்லவும், அவளுக்குத் தைரியம் இல்லை. எனவே, தொடர்ந்து பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

அவள் விட்டாலும், நல்லவேளையாக, மல்லிகை பேச்சைத் தொடர்ந்தாள் "எ... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், தேவா? சுகேஷும், மோனிக்கு நல்லதுதானே செய்ய எண்ணுகிறான்? நாம் எல்லோரும் சொன்னதைத்தானே, அவனும் சொல்லுகிறான்?" என்று கணவரிடம் கேட்டாள்.

"அடிப் பைத்தியக்காரி, உனக்கு இதில் உள்ள மர்மம் ஒன்றும் புரியவில்லையே. உன் பெண் என்ன சொன்னாள்? அவளும், அவனும் எங்கெல்லாமோ சுற்றியதாகச் சொல்லவில்லை? அதை எத்தனை பேர் பார்த்திருப்பார்கள்? புற்றுக்குள்ளிருக்கும் பாம்பு, தலையை நீட்டுவது போல, எந்தநேரத்தில் யார் இதைப் பற்றி பேசுவார்களோ? மோனிக்குத் திருமணம் பேசினால், இந்த விஷயம் எப்படியும் வெளியே வந்து பரவும். அப்புறம் வேறு எவனும், அவளை மணக்க ஒத்துக்கொள்ள மாட்டான் என்று தெரிந்தே, உதவுவது போல யோசனை சொல்கிறான். புரிகிறதா? அதுவும் அப்படிப் பார்த்துப் பழகிய இடத்திலேயே மறுபடி சந்தித்துக் கேட்பதைப் பார்! அரைகுறையாக மறந்தவர்களுக்குத் திரும்பவும் நினைவூட்டும்

முயற்சி, இது! நல்லவன் போல நடித்து,நம்மை ஏய்க்கவே, இந்தப் புது யோசனை!" என்றார் தேவதாசன்.

மல்லிகாவின் முகத்தில் ஐயம் தோன்ற, பெண்கள் இருவரும் தேவதாசனின் விளக்கத்தை அடியோடு மறுத்தனர்.

"சுகன் மனதிலிருந்து பேசுகிறார், அப்பா. அவர், இப்போது நம்மை ஏமாற்ற எண்ணவில்லை!" என்றாள் பெண்.

அவ்வளவு வெளிப்படையாக சுகேசனுக்கு வக்காலத்து வாங்க, சுபாங்கிக்கு தயக்கமாக இருந்தது.

அதேசமயம் தேவதாசனின் பேச்சை ஒத்துக் கொள்வது போலச் சும்மா இருக்கவும், அவளுக்கு மனமில்லை.

"அண்ணன் இப்போது ரொம்பவும் திருந்திதான் இருக்கிறார், அங்கிள். குடிப்பது அடியோடு இல்லை" என்றாள் மெல்லிய குரலில்.

"குடிக்காதவர்கள் எல்லோருமே நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று, ஒரு கட்டாயமும் இல்லை,சுபாம்மா. ஆனால் சுகேசன் இவளை வேறு ஒருவரை மணம் புரியச் சொல்வது வெறும் ஃப்ராடுவேலை!" என்று தன் கருத்திலேயே உறுதியாக நின்றார் தேவதாசன்.

அப்படி இராது என்று, சுபாங்கியும் உறுதியாக எண்ணினாள். ஆனந்தனின் கூட்டுறவில், அவன் ரொம்பவே மாறிக் கொண்டுதான் வருகிறான் என்று, அவளுக்கு நிச்சயமாகத் தோன்றியது.

அத்தோடு, தேவா அங்கிள் கருதுவது போல, அவன் முழுக் கெட்டவனும் அல்ல! மோனியைக் கைவிட்டு, அவன் இன்னொருத்தியை மணந்ததற்கு எந்த விளக்கமும் சொல்ல முடியாதுதான். என்றாலும், அவர் நினைக்கிற அளவு அண்ணன் வில்லன் என்றால், அந்தத் திருமணம், பிள்ளை எல்லாவற்றையும் இங்கே எதுவும் சொல்லாமல், முழுதாக மறைத்திருக்கலாமே! பவித்ராவை ஏதாவது அனாதை விடுதியில் சேர்த்துவிட்டு, வந்திருந்தால், இங்கே யாருக்கு விவரம் தெரியப் போகிறது?

ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை! பிள்ளையோடு வந்து,



உண்மையைத்தானே சொன்னான்?

மனதில் ஒரு திடம் தோன்ற "சரி,அங்கிள். அதையும் உரசிப் பார்த்துவிடுவோம்! அண்ணன் மாறியிருக்கிறானா, இல்லையா என்று அறிவதற்கு. அவனுக்கு ஒரு சின்ன டெஸ்ட் வைப்போம். அதில் அவன் வெற்றி பெற்றுவிட்டால், அவன் சொல்வது போல..." என்று சொல்லிக்கொண்டே போனவளின் பேச்சில் மோனிகா குறுக்கிட்டாள்.

"அவர் சொல்வது போல?" என்று கேட்டபோது, அவளது குரல் கீறீச்சிட்டது "சுகன் நல்லவரோ, கெட்டவரோ, அவர் சொன்னது போல எதுவும் நடக்க வாய்ப்பே கிடையாது. அதை மட்டும் மனதில் அழுத்தமாக நினைவு வைத்துக்கொண்டு, அதற்கு மேல் எதையும் திட்டமிடுங்கள்!"என்றாள் உறுதியான குரலில்.

சற்று நேரம் அங்கே யாரும் பேசவில்லை.

ஒருவாறு லேசாகத் தொண்டையைக் கனைத்து நிசப்தத்தைக் கலைத்தார் தேவதாசன். "உன் டெஸ்ட் என்ன என்று சொல்லும்மா. மற்றதைப் பிறகு பார்ப்போம்" என்றார் அவர்.

"மோனியை கல்யாணம் செய்யும்படி அவளிடம் அண்ணன் சொன்னாரில்லையா? அவளை மணப்பதற்கு உரிய மாப்பிள்ளையை அண்ணனே பார்க்கட்டும். மெய்யாகவே அப்படி ஒரு மணமகனை அவர் கொண்டு வந்துவிட்டால், அவர் ஜெயித்ததாக அர்த்தம். அவர் நாடகம் ஆடவில்லை என்று நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும், அங்கிள்!" என்றாள் சுபாங்கி.

"என்ன உளறிக் கொண்டு இருக்கிறாய் சுபா? அவர் எவ்வளவு உயர்வான மாப்பிள்ளையைக் கொண்டு வந்தாலும், நான் சுகனைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன். இது நிச்சயம்" என்று அறிவித்தாள் மோனிகா.

"கையில் ஒரு பிள்ளையோடு இருக்கும் ஒருவனை நீ மணக்க, நானும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். அதை நீயும் புரிந்து கொள்" என்று மகளிடம் சீறினார் தேவதாசன்.

பிறகு சுபாங்கியின் பக்கம் பார்த்து "முதலில் உன் சவாலைப் பார்ப்போம், சுபா. மோனிக்கு பொருத்தமாக அவளைப் பற்றிய விஷயங்கள் தெரிந்தும் அவளை மணம் புரியச் சம்மதிக்கும் ஒருவனை சுகேசன் கொண்டு வந்து நிறுத்தட்டும். அதன்பிறகு நல்லது நடந்தால், கடவுள் அருள். இல்லை என்றால், சுகேசன் கெட்டவன் இல்லை என்ற நிம்மதியாவது கிடைக்கட்டும். அவனும் இங்கே ஒரு பிள்ளை மாதிரி வளர்ந்தவன்தானே" என்று முடித்தார் தேவதாசன்.

சுகேசனை அழைத்து, நடந்த விவரத்தைச் சொல்லும்போது, சுபாங்கிக்கு சில சந்தேகங்களும் கூடவே சில நம்பிக்கைகளும் இருந்தன.

இன்னொருவனை விரும்பிய ஒரு பெண்ணை மணக்க முன் வருகிறவர்கள், நம் நாட்டில் மிக மிகக் குறைவு. கொஞ்ச காலத்துக்கு முன் என்றால், அடியோடு கிடையாது என்றே சொல்லிவிடலாம்.

ஆனால், உறவுகள் பற்றிய மனநிலைகள் மாறி வரும், இந்தக் காலக்கட்டத்தில் அது ஓரளவு சாத்தியமே.

ஆனால், அப்படி ஒருவன் கிடைத்தாலும், மோனிகா அவனை மணப்பது, நிச்சயமாக நடக்கிற விஷயம் அல்ல.

ஒருவேளை மோனிகாவும் மனம் மாறி, அந்த மனிதனை மணந்து, அவளுக்கு ஒரு நல்ல குடும்பம் அமையுமானால், அதுவும் அவளுக்கு சந்தோஷமே.

ஆனால் சுபாங்கியின் ஆழ் மனதில் இருந்த ஆசை வேறு!

தேவா அங்கிளிடம் சுகேசன் தன்னை நிரூபித்துவிட்டால், அவரே மனம் மாறி, சுகேசனுக்கே மகளை மணம் முடித்துக் கொடுத்துவிட மாட்டாரா என்று, அவள் ஆசைப்பட்டாள். அது நடக்கும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது.

ஏனெனில் அவனும் பிள்ளை போலத்தான் என்று அவர் முடித்த விதம், அவளது நம்பிக்கைக்கு உரமூட்டியிருந்தது.

ஆனால், இதுபற்றி, உயிர்த் தோழியாக மோனிகாவிடம் கூட,



அவள் மூச்சு கூட விடவில்லை!

ஆழ் மனதில் இருந்த ஆசையோடுதான், மோனிகாவுக்கு ஏற்ற மணமகனைத் தேடுமாறு, சுபாங்கி தன் அண்ணனைத் தனியே சந்தித்துச் சொன்னாள்.

ஆனால், அது பேரிடியாக, அவள் தலையிலேயே வந்து விழக் கூடும் என்று அப்போது அவளுக்குத் சுத்தமாகத் தெரியாது!



# பேசும் பொற்சித்திரமே 10

மோனிகா ஆத்திரப்பட்டுப் பேசியது, சுகேசனை மிகவும் பாதித்திருந்தது.

உன்னைப் போல நினைத்தாயா என்றல்லவா, கேட்டுவிட்டாள்! அதுபோல மட்டமாக, அவளை அவன் கருதியதே கிடையாதே!

அவன் செய்தது, மாபெரும் குற்றம். அந்தப் பிழையை எண்ணி, அவன் வருந்தாத நாள் கிடையாது.

அப்புறமும், இடையில் இருந்த தன்னல எண்ணங்கள் மாறி, மோனிகாவுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைய வேண்டும் என்று அவன் இப்போது மனப்பூர்வமாக விரும்பினான்.

செய்த தப்புக்கு பிராயச்சித்தமாகப் பிறருக்கு உதவி புரிந்தவாறு, வாழ்க்கை முழுவதும் தனித்து வாழவும் அவன் தயாராக இருந்தான்.

ஆனந்தனின் பழக்கமும், பேச்சும் அவனை அந்த அளவு மாற்றியிருந்தன.

உரிய வகையில் உள்ளூர ஓடிய எண்ணங்கள் வேறு. அவனும் அடிப்படையில் கெட்டவன் இல்லையே!

உள்ளூர வேதனை இருந்தாலும், அதை அடக்கிக்கொண்டு, மோனிகாவின் நன்மையை மட்டுமே கருதித்தான், அவன் அந்த யோசனையை அவளிடம் தெரிவித்தது.

ஆனால், அவள், அதை வேறு மாதிரி எடுத்துக் கொண்டது, அவனுக்கு வேதனையை அளித்தது.

அந்த வேதனையையுடனேயே இருந்தபோதுதான், அவன் தங்கை அவனைத் தனியே அழைத்து, மோனிகாவுக்கு உரிய மணமகனை அவன்தான் தேட வேண்டும் என்று தெரிவித்தாள்.

இது புதிய விஷயம் அல்ல. ஆனந்தன் ஏற்கனவே, அவனிடம் கூறியதுதான். அப்போது அதிர்ந்தாலும், மெல்ல, மனதை அதற்குப் பக்குவப்படுத்தி இருந்ததால், இந்த விஷயம் இப்போது அவனை அதிகம் பாதிக்கவில்லை.

ஆனால், அவனை மருட்டிய விஷயம் வேறு.

மோனிக்குத் தகுந்த மணமகன் எங்கே கிடைப்பான்?

அழகு, குணம், படிப்பு, நல்ல குடிப் பிறப்பு... எல்லாவற்றிலும், மிகச் சிறந்த பெண்!

அந்த உன்னத அழகிக்கு ஏற்றவனை எப்படிக் கண்டுபிடிப்பது?

அதிலும் அனியாயமாக, அவன் செய்த தவறால், அவளை எந்த விதத்திலும் குறைவாக எண்ணாதவனாகவும் இருக்க வேண்டும்!

அது மிகவும் முக்கியம் அல்லவா? மற்றபடி, அவளது வாழ்க்கை நன்றாக இருப்பதற்குப் பதிலாக, நரகமாக அல்லவா மாறிவிடும்!

எந்த மாதிரித் தங்கத்தைக் கை நழுவ விட்டதோடு, அந்தத் தங்கத்தின் மாற்றையே மற்றவர் குறை கூறும் நிலைக்கு இறக்கிவிட்டானே!

எண்ணி எண்ணித் தவியாய்த் தவித்தது, அவன் மனம்!

தான் அறிந்த இளைஞர்கள் பலரையும் பற்றி யோசித்துவிட்டு, யாருமே அவனுடைய மோனிக்குத் தகுதியில்லை என்ற முடிவுக்கு வந்தான் சுகேசன்.

மேலே செய்வது அறியாமல், ஆனந்தனிடமே உதவிக்கு வந்து நின்றான்.

"மோனிகாவுக்கு ஏற்ற நல்ல குணவான் யாரையும் உங்களுக்குத் தெரியுமா?"

'லாப்டாப்'பில் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்தி வைத்துவிட்டு, ஆனந்தன் சுகேசனை ஆழப் பார்த்தான்.



மோனிகா திட்டிவிட்டுப் போனது வரை, வார்த்தை மாறாமல், ஏற்கனவே அவனிடம் ஒப்பிக்கப்பட்டிருந்தது.

இப்போது புதிதாக என்ன?

தங்கை வந்து சொன்ன சேதி தெரிந்ததுமே, ஆனந்தனின் கண்களில் பளபளப்பு கூடியது. கிட்டத்தட்ட அவன் எதிர்பார்த்த நிலை வந்துவிட்டதா?

அலுவலகத் திறப்பு விழாவுக்குத் தாயார் வருமுன், இவை எல்லாமே ஒரு முடிவுக்கு வந்துவிடுவது நல்லதுதான்!

சுபாங்கி கூறியதைத் திரும்பத் திரும்பக் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டான் அவன்.

வரிகளுக்குள் வாசிக்கிற பழக்கம் உள்ள அவனுக்கு, ஒளிவு மறைவாய் இன்னமும் சில விஷயங்கள் புலனாயின.

சற்று யோசித்துவிட்டு, "சுகேசன் என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"ஆனந்தன்!" என்று அவனது கைகளைப் பற்றிக் கொண்டான் மற்றவன், "உங்கள் அறிமுகம் மட்டும் கிடைக்கவில்லை என்றால், நான் அடியோடு நாசமாகிப் போயிருப்பேன்! என்னை ஒரு மனிதனாக்கியதே நீங்கள்தான். இதற்கு மேல், நான் என்ன சொல்லட்டும்?" என்று உணர்ச்சிப் பிழம்பாய் கேட்டான் அவன்.

"இப்போது இன்னும் கொஞ்சம் யோசித்துச் சொல்லு'கள். உங்கள் மோனிகாவுக்கு ஏற்ற மணமகனாக என்னைச் சொல்ல முடியும்தானே?"

கைகளை விடுவித்துக்கொண்டு, ரொம்ப சாதாரணமாக 'லாப்டாப்'பை மூடியவாறே ஆனந்தன் கேட்டான்.

அவன் சொன்னதை உள் வாங்கிக்கொள்ள, சுகேசனுக்கு சில வினாடி அவகாசம் தேவைப்பட்டது.

விஷயம் கருத்தில் பதிந்ததுமே "சா...ர்...!"என்று எழுந்து விட்டான். "நீ... நீங்களா.. சார்?" என்று பரபரப்புடன் வினவினான்.

"சொல்லுங்கள் சுகேசன். உங்கள் தேவதைக்கு, நான்

பொருத்தமானவன்தானா?"

உங்கள் மோனிகா... உங்கள்தேவதை! எல்லாமே தெரிந்தவன்!

மறுபடியும் ஆனந்தனின் கைகளைப் பற்றி, இப்போது கண்களில் ஒற்றிக் கொண்டான் சுகேசன். "உங்களை விடச் சிறந்தவர், யார் இருக்கிறார்கள், ஆனந்தன்!"

கண்களில் ஒற்றியிருந்த கைகளில் ஈரம் தெரியவும், ஆனந்தன் எழுந்துவிட்டான்.

"அவசரப்படாதீர்கள் சுகேசன். முதலில் அங்கிருந்து பதில் வரட்டும். இப்போது, நீங்கள் ஒன்று செய்யுங்கள். உங்கள் தங்கை மூலமாகத்தானே, இந்த விஷயம் உங்களுக்கு வந்தது? சுபாங்கி மூலமாகவே பதிலையும் தெரிவியுங்கள். அப்புறம்... சுபாங்கியிடம் விவரம் சொல்லிவிட்டு, அப்படியே போய், ஏதோ லாண்டிரியில் துணி வாங்க வேண்டும் என்றீர்களே! என் காரை எடுத்துப்போய், அப்படியே காருக்கு டீசலும் போட்டு வந்து விடுகிறீர்களா? நிறுவனக்கணக்குத்தான், டாஷ் போர்டில் அதற்குரிய புக் இருக்கும். இதையெல்லாம் இப்போதே முடித்துவிட்டால், நாளைக்கு நாம் எல்லோரும் சேர்ந்து பேச வேண்டியிருந்தால், அதற்கு வசதியாக இருக்கும்" என்றான்.

கார்ச் சாவியை வாங்கிக்கொண்டு சுகேசன் கிளம்பவும், நேரத்தைக் கணக்கிட்டபடி, ஆனந்தன் காத்திருந்தான்.

அவன் அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை. அவன் அறிந்தவரை, அவளுக்கு பொறுமை சற்றுக் குறைவுதானே?

அவன் எதிர்பார்த்தது போலவே, விரைவிலேயே, அவனது வீட்டுக் கதவு படபடவென்று இடிக்கப்பட்டது.

அழைப்பு மணியை அழுத்தக்கூடப் பொறுமை இல்லையாக்கும் என்று எண்ணியவாறு சிறு முறுவலுடன் சென்று கதவைத் திறந்தான் அவன்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க என்று சொல்வார்கள். அதுபோல முகத்தில் கோபக் கனலுடன், சுபாங்கிதான்



நின்றிருந்தாள்.

ஏற்கனே ஆத்திரத்துடன் வந்தவளுக்கு, ஆனந்தனின் முகத்தில் இருந்த சிரிப்பு, இன்னமும் சீற்றத்தை விசிறி விட்டது போல ஆயிற்று.

அவ்வளவுதான்! காட்டுக் கத்தலாகக் கத்தத் தொடங்கிவிட்டாள்.

"என்ன இளிப்பு! என்ன சிரிப்பு? உங்கள் சதி வெற்றி பெற்றுவிட்ட சந்தோஷமா?" என்று சீறினாள்.

அவன் எண்ணியது போல சுபாங்கி வந்துவிடவே, அவளது கோபம், அவனுக்குப் பெரிதாக தெரியவில்லை.

"ஷ் பொது வழியில் எல்லோரும் பார்க்கக் காட்சி நடத்த வேண்டாம் என்று, உனக்கு எத்தனை முறை சொல்ல வேண்டும்?" என்று அவளைக் கை பற்றி, உள்ளே இழுத்துவிட்டுக் கதவைச் சாத்தினான் ஆனந்தன்.

அவளது கையைப் பிடித்து...

ஆத்திரம் இன்னும் பெருக, "கையை முதலில் விடுங்கள்!" என்று அவள் கையை உதறும்போதே, தானாகவே விட்டுவிட்டு, "இப்போது கேள். அது என்ன சதி? என்ன வெற்றி?" என்று கேட்டான் அவன்.

ஒன்றும் தெரியாதவன் போல எப்படிக் கேட்கிறான்!

அவனை உறுத்து விழித்து "ஏன்?" அதை நான் சொன்னால்தான் புரியுமா? அப்பப்பா! சுற்றி வளைத்து எத்தனை நாடகம்! இதற்காகத்தான் பத்து லட்சத்தை விட்டுக் கொடுத்து, இந்த வீட்டுக்கு வந்தீர்களா?" என்று கோபமாகக் கேட்டாள் சுபாங்கி.

"வாட்! என்ன உளறல் இது?" என்றவனுக்கு மெய்யாகவே ஆச்சரியம்தான்.

அந்தப் பத்து லட்சம் விஷயம், சுபாங்கிக்கு எப்படித் தெரியும்?

அவளை வியப்புடன் நோக்கி "பெரிய துப்பறியும் வேலையெல்லாம் நடந்திருக்கிறது போல! யார் சொன்னார்கள்?" என்று விசாரித்தான்.

அப்படியானால், ஏதோ காரணத்துக்காக, பல லட்சம் நஷ்டப்பட்டேனும் இங்கே வந்திருக்கிறான் என்று அவள் ஊகித்தது சரிதான்! அந்தக் காரணத்தை எண்ணும்போது அவளது மனம் சோர்ந்தது.

"அப்படியானால், அது உண்மைதான் என்று ஒத்துக்கொள்கிறீர்கள்தானே?" என்று கேட்டபோது, அவளுக்குத் தொண்டையில் அடைத்தது.

"என்னத்தை ஒப்புவது? விஷயத்தின் அடிப்படையே தெரியாமல், அசட்டுத்தனமாக உளற வேண்டாம்" என்று எரிச்சல் காட்டினான் ஆனந்தன்.

"அது என்ன விஷயம்?" என்று விடாமல் கேட்டாள் சுபாங்கி.

"நேரம் வரும்போது தெரியவரும்" என்றான் அவன் சுருக்கமாக.

"சொல்லாமலே இருந்தால்?"

"சொல்லக் கூடிய நேரம் வரவில்லை என்று அர்த்தம்!"

கோபமும் நிராசையுமாக அவனைப் பார்த்து, நிதானமாகப் பேசினாள் சுபாங்கி "அந்த நேரம் எப்போதுமே வராது என்று எனக்குத் தெரியும். அத்தோடு, நீங்கள் சொல்லாமல் மறைக்கும் உண்மை என்ன என்றும் தெரியும்"

கீழ்ப்பார்வையாக நோக்கி "அது என்ன உண்மை?"என்று கேட்டான் அவன்.

"என்னவா? உங்களுக்கு, மோனிகா மேல் ஆசை! அதற்காக அதிகப் பணம் கொடுத்து வாங்கிய ஃப்ளாட்டை நர்மதா அப்பாவிடம் குறைவான விலைக்குக் கொடுத்துவிட்டு, அவர் வாங்க இருந்த இந்த இடத்தை வாங்கிக்கொண்டு, இங்கே வந்தீர்கள். என் அசட்டு அண்ணனை ஏமாற்றி,. அவன் வாய் மூலமாகவே, அவளை அடைய முயற்சி செய்கிறீர்கள்" என்றாள் அதே நிதானத்துடன்.

"கதை பிரமாதம்!" என்றான் அவன் ஏளனமாக. "ஆனால் இதை நிஜமாகவே நம்பித்தான் சொல்லுகிறாயா?" என்று கேட்டான்.

ஒருகணம் நிமிர்ந்தவள், உடனே தொய்ந்தாள் "வேறே என்ன



விளக்கம் இருக்க முடியும்?"

"ஏன் இருக்காது? என்னைப் பார்த்துச் சொல், வேறே காரணம் இருக்காதா?" என்று கேட்டு, அவளை நேராகப் பார்த்தான் அவன்.

சிறு மௌனத்தின் பின், ஆனந்தனின் ஏந்திய கையில் சுபாங்கி தன் கையை வைக்க, அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான் அவன்.

தலை முகமெங்கும் அவன் மென்மையாய் வருட, மெய்மறந்து நின்றாள் அவள்.

அவளது நெற்றியில் முத்தமிட்டு "இன்னமும் அந்த விளக்கம் சொல்வாயா?" என்று கம்மிய குரலில் கேட்டான் அவன்.

மறுப்பாக தலையசைத்தவள் விட்ட கண்ணீரில் அவனது டீஷர்ட் நனைந்தது.

ஈரம் உணர்ந்து, அவளை விலக்கி நிறுத்தி "மறுபடியும் என்ன?" என்று கேட்டான் அவன்.

"அவ்வளவு பணத்தை அதிகமாகக் கொடுத்து இந்த வீட்டுக்கு வரும்போது என்னை உங்களுக்குத் தெரியவே தெரியாதே!" என்று குரல் நடுங்கக் கேட்டாள் அவள்.

"தெரியாதுதான்!" என்று ஒப்பியவன், சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

அவன் முகத்தில் ஒரு தீவிரத்தைக் கண்ட சுபாங்கியும், அவனது மௌனத்தைக் கலைக்கவில்லை.

பாண்ட் பாக்கெட்டில் கைகளை நுழைத்துக் கொண்டு, அறையின் நீளத்தை ஒரு தரம் அளந்துவிட்டு, ஆனந்தன் திரும்பி வந்தான்.

"கொஞ்சம், கொஞ்சமென்ன ரொம்பவே சிரமமான காரியம்தான். ஆனால், மறுப்பின்றி, மறு கேள்வி கேளாமல் நீ என்னை நம்ப வேண்டும், சுகி. நான் சில முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறேன். அவற்றில் ஒன்று... உன் அண்ணன் மோனிகாவின் திருமணம். அந்த வீட்டில், சுகேசனை ஒப்புக்கொள்ள வைப்பதற்கான ஒரு படிதான். என்னை மணமகனாகக் காட்டச் சொன்னதும். என்

முயற்சிகளில் ஒன்று மட்டும்தான் அந்தத் திருமணம். அதைப் போலவே மற்றதும் எல்லாமே மற்ற மனிதர்களைச் சார்ந்து இருப்பதால், வெற்றி, தோல்வி என்பது என் கையில் இல்லை! ஆனால் உனக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்! அந்த நம்பிக்கை எனக்கு யானை பலம் தரும்" என்று முடித்தான் ஆனந்தன்.

நம்புவதை சொல்லாமல் சொல்வது போல, மறுபடியும் தன் கையை அவனது கையின் மீது வைத்தாள் சுபாங்கி.

சட்டென்று அவளை இறுக அணைத்தவன், அணைத்த வேகத்திலேயே அவளை விட்டு விலகினான்.

"இதற்கு மேல், தனியே இருக்கக் கூடாது. வா. வெளியே போய், குடியிருப்பின் குட்டிப் பூங்காவுக்குப் போய் பேசலாம். நமக்கு நிறைய வேலை இருக்கிறது. நாளைக்கு எல்லாவற்றையும் ஒரு முடிவுக்கு கொண்டு வந்து விட வேண்டும்" என்று அவன் கூற, இருவருமாக அங்கே போய் உட்கார்ந்து பேசினார்கள்.

முதலில் நடந்த பேச்சு பெரும்பாலும், அன்று மோனிகா வீட்டில் நடந்தது பற்றித்தான்.

"உங்களை காட்டி, அண்ணன் தன்னை நிரூபித்துவிட்டார் சரிதான். ஆனால், அதையே பிடித்துக்கொண்டு, மோனியை உங்களுக்கு மணமுடிக்க அங்கிள் முயன்றால் என்ன செய்வது, ஆனந்தன்? நீங்களும் மணக்கச் சம்மதம் என்று கூறியிருக்கிறீர்களே!" என்று சுபாங்கி கவலைப்பட்டாள்.

"மோனிகா மேல், அவ்வளவு நம்பிக்கை இல்லாமல், என் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்வேன் என்றா நினைத்தாய்? எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள இ[illegible]ாத ஒரு பெரிய துரோகத்தையே ஒதுக்கி, சுகேசனையே நினைத்துருப்பவள், ஒருபோதும் மாற மாட்டாள். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. ஆனால் சுகேசனை நல்லவனாக ஒத்துக் கொள்ளும் தேவதாசன் சார், அவருக்குப் பெண்ணைக் கொடுக்கவும் சம்மதிக்க வேண்டுமே! அது மட்டும் நடந்துவிட்டால், ஏதோ ஆறுதல் பரிசாக உங்கள்



தங்கையையாவது தாருங்கள் என்று சுகேசனைத் தைரியமாகக் கேட்டுவிடுவேன்...

அவன் மெல்லிய குரலில் சாதாரணம் போலச் சேர்த்ததை கவனித்து "ஹே... நானா, ஆறுதல் பரிசு?" என்று சுபாங்கி அதட்ட, இருவருக்கும் சிரிப்பு வந்தது.

"மோனிகா திருமணம் பற்றி பேச என்று, அந்த வீட்டாரையும், கூடவே உன் பெற்றோரையும் நம் வீட்டுக்கு கூட்டி வருவது உன் பொறுப்பும்மா. இப்படி வாராவாரம் சுகேசன் வரும்போது ஏதாவது பேசுவதும், அப்புறம், அத்தோடு கிடப்பில் போடுவதுமாக இருப்பது, சற்றும் சரியல்ல. ஏதோ செய்கிற மாதிரியான மாயையில் காலம் சும்மா ஓடிக்கொண்டே இருக்குமே தவிர, வேலை என்று எதுவும் நடக்காது. உன் அண்ணனின் வேலை நிறைவேறாமல், நம்மதைத் தொடங்கவே முடியாது. எதற்காகவும், கால வரையறையின்றி காத்திருப்பதை நான் அனுமதிக்க மாட்டேன், சுகி. எனவே எல்லாம் நாளைக்கு முடிவாகியே தீர வேண்டும்!"

கண்டிப்பான குரலில் ஆனந்தன் பேசுவதை, சுபாங்கி ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

கூடவே 'நம்வீடு' நம்மதை' என்று அவன் கூறியது பரவசத்தையும் அளிக்க, இன்னும் அதிகமாக அந்த 'சுகி' மகிழ்ச்சியோடு முறுவலித்தாள் அவள்.

இருள் பரவத் தொடங்கிய நேரம்.

சுற்று மதில் கேட் வழியே, இடுப்பை சற்று நெளித்து, நெளித்து நடந்தபடி உள்ளே வந்த பெண்ணைக் கண்டதும், ஆனந்தனும் சுபாங்கியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நல்லவேளை! இவளுக்குச் சனிக்கிழமையும் வேலை நாள். இவள் மட்டும் வீட்டில் இருந்திருந்தால் இந்த அளவுக்கு, அங்கிள் இறங்கி வந்திருக்கவே மாட்டார். சும்மாவே வெகுளித்தனமாகப் பேசுவதுபோல, அங்கிளை கிளப்பி விட்டுக்கொண்டே இருப்பாளாம். மோனி சொன்னாள்" என்றாள் சுபாங்கி.

லேசாகத் தோளைக் குலுக்கினான் ஆனந்தன் "உன் அங்கிளைக் கிளப்பிவிட, அடுத்தவர் தேவையில்லை என்பது, என் கருத்து. ஆனால் நாளைக்கு இந்தப் பெண்ணை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் அவன்.

"இன்றைய அளவில், ராணியை பெரிதாக எடுத்து, யாரும் எதையும் அவளிடம் சொல்லப் போவது இல்லை. நாளைக்கு... உடுமாற்றுக்கு இரண்டு சல்வார் செட் வாங்கிக் கொள் என்று பணம் கொடுத்து, அவளை வெளியே அனுப்பிவிடும்படி, மோனியிடம் சொல்லிவிட்டால், பிரச்சினை தீர்ந்தது"என்றாள் சுபாங்கி.

"என்னமா லஞ்சத்தை ஒழிப்பதற்காகப் போராட்டமெல்லாம் நடத்துகிறார்கள். முதலில் இவங்க வீட்டுக்குள்ளே வந்து பாருங்கப்பா!" என்றான் ஆனந்தன் கிண்டலாக.

"ஊகூம். இதன் பெயர் அன்பளிப்பு சார். லஞ்சமில்லையாக்கும்!" என்று அவள் இலகுக் குரலில் கூற, இருவரும் சேர்ந்து நகைத்தனர்.

"எப்படியோ ஒரு முடிவு எட்டும்வரை, அவள் அந்தப் பக்கம் வராதிருந்தால், போதும். முடிவு பண்ணிவிட்டால் அங்கிள் மாற மாட்டார். அப்புறம் அவளால் பிரச்சினை இராது. அவளும் பாவம்., எத்தனையோ ஆசைகளை அடக்கி வளர்ந்த சின்னப் பெண். இந்தக் குறுக்கு வழிகள் பயன் தராது என்று புரிந்து, தானாகத் திருந்தி விடுவாள்" என்றாள்.

மறுநாள் என்னென்ன, எப்படியெப்படி செய்வது என்று இருவருமாகப் பேசி முடிக்கவும், சுபாங்கி எழுந்தாள் "பவித்ராவைப் பார்க்க வேண்டும். அண்ணன் விவரம் சொல்லவும், சும்மா அவளை அம்மா கையில் திணித்துவிட்டு வந்துவிட்டேன்"

"ஆமாமாம். என் காதைப் பிடித்து நன்றாக முறுக்க வேண்டும் என்று ஓடி வந்திருப்பாய். கடைசியில்..."என்று அவன் சிரிக்கவும் அவள் முகம் சிவந்தது.

"ஷ் போங்கப்பா. பவிக்குட்டியை வைத்துஅங்கிள் என்ன ஆட்டம் ஆடப் போகிறாரோ என்று, எனக்கு அது மட்டும் கவலையாகவே



இருக்கிறது!" என்றாள் அவள்.

"அது... எதுவானாலும் சமாளிப்போம்! ஆனால், அவர்கள் எல்லோரையும் நம் வீட்டுக்குக் கூட்டி வருவது, உன் பொறுப்பு" என்றான் ஆனந்தன்.

சுகேசன் தவிர யாரையும் மணக்க முடியாது, அதனால் எங்கே வருவதிலும் அர்த்தமில்லை என்று திட்டவட்டமாகக் கூறிய மோனிகாவைத் தன்னை நம்பி வருமாறு வற்புறுத்தி சம்மதிக்க வைத்தாள் சுபாங்கி.

மோனிகாவுக்குப் பிடிக்காத எதுவும் நடக்காது என்ற உறுதிமொழியோடு, நல்லதே நடக்கும் என்ற பூடக வார்த்தைகளும் சேர்ந்து, பெற்றோரோடு அவளையும் வர வைத்தன.

இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல், தன் வீட்டில் இருந்து பேசலாம் என்று, இரு குடும்பத்தினரையும், ஆனந்தன் தன் வீட்டுக்கு அழைத்திருந்தான்.

பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று முறுக்கிக் கொண்டபோதும், ஒருவேளை மகளுக்கு ஒரு நல்ல விடிவு பிறக்குமோ என்ற ஆசையில், தேவதாசன் மனைவியோடு வந்து சேர்ந்தார்.

மகளின் பிடிவாதம், கணபதி, செந்திருவை கொண்டு வந்து சேர்த்தது.

பொதுவாக எல்லோருடனும் நல்லுறவுடன் பழகும் ஆனந்தன் பேசாமல் அமர்ந்திருக்க, அவன் வீட்டில், சுகேசன் எல்லோரையும் வரவேற்று, உட்கார வைத்தது, விசித்திரமாக இருந்தது.

எல்லோரும் வசதியாக அமர்ந்ததும், சுகேசன் எழுந்து பேசினான்.

மகள் மோனிகாவுக்குப் பொருத்தமான ஒரு மாப்பிள்ளையைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை, தேவதாசன் தன்னிடம் ஒப்படைத்ததாகக் கூறி, அப்படி அவன் பார்த்துத் தேர்ந்தெடுத்த வரன், ஆனந்தன் என்று தெரிவித்தான் "அங்கிளுக்கு மாப்பிள்ளையைப் பிடித்திருந்தால்..."என்று அவன் மேலே

பேசுமுன், ஆத்திரத்துடன் எழுந்த மோனிகா, படபடவென்று பொரிந்து கொட்டிவிட்டாள்.

"இந்த மாதிரி பேச உங்களுக்கு வெட்கமாயில்லை? யாருக்கு, யார் மாப்பிள்ளை பார்ப்பது? பழைய படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' கதாநாயகன் என்று நினைப்பா? உங்கள் அங்கிளுக்கு மாப்பிள்ளையை பிடிப்பதா? அப்படிப் பிடித்திருந்தால், அவரையே கட்டிக் கொள்ளச் சொல்லுங்கள். அதற்குமேல், இந்தப் பேச்சு யாரேனும் பேசினால், நான் மனுஷியாக இருக்க மாட்டேன் நினைவிருக்கட்டும்!" என்று வெடித்தவள், சுபாங்கியிடம் திரும்பினாள்.

"என்னவோ, எனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது என்று வாக்குக் கொடுத்தாயே! ஒருவருக்கு வாக்கு கொடுக்குமுன், அதை நிறைவேற்ற முடியுமா என்று யோசிக்க வேண்டாம்?" என்று காய்ந்துவிட்டு, "இங்கே நடப்பது எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் போகிறேன்" என்று கிளம்பினாள்.

அவளை வழி மறித்து நின்று "மோனி, ப்ளீஸ்யா. இப்போது என்ன, ஆனந்தனோடு உனக்கு நிச்சயமா, ஆகிவிட்டது? அங்கிள் கேட்டதை, அண்ணன் செய்திருக்கிறார். அவ்வளவுதானே? ஏற்பதும், மறுப்பதும் உன் விருப்பம்தானே? உன் அப்பாவின் நிபந்தனையை அண்ணன் நிறைவேற்றி இருக்கிறார். சரியாக நிறைவேற்றியிருந்தால், அண்ணன் திருந்தி நல்லவர் ஆகிவிட்டார் என்று, அங்கிள் ஒத்துக் கொள்ள வேண்டும், அவ்வளவேதானே?" என்று கேட்டு, அவளை உறுத்து விழித்தாள்.

தோழி எதையோ சொல்லாமல் சொல்ல முயல்வது புரிய "என்னவோ? அவர்களுக்கிடையில் என்னை இழுத்திருக்க வேண்டாம்" என்று மறுபடியும் சோஃபாவில் அமர்ந்தாள் மோனிகா.

நிம்மதியாக பெருமூச்சுவிட்டு "என்ன அங்கிள், இப்போதுநீங்கள் சொல்லுங்கள். அண்ணன் உங்கள் நிபந்தனையைச் சரிவர நிறைவேற்றி இருக்கிறாரா? ஆனந்தன் பற்றி, உங்களுக்கு



திருப்திதானா?" என்று அவரிடம் வினவினாள்.

உச்சுக் கொட்டினார் தேவதாசன் "எனக்கு திருப்தியாய் இருந்து என்னம்மா செய்வது? உன் தோழிதான் ஒத்துக் கொள்ள மறுக்கிறாளே!" என்று அலுத்துக் கொண்டார் அவர்.

"அது விஷயம் உங்கள்பொறுப்பு, அங்கிள். இப்போது பேச்சு, என் அண்ணன் நல்லவராக மாறிவிட்டாரா, இல்லையா என்பதுதான். அதற்கு பதில் சொல்லுங்கள்" என்று உரிமையோடு, அவரிடம் அதட்டிப் பேசினாள் சுபாங்கி.

"நான் நல்லவன், கெட்டவன், என்பதில் என்ன சுபா இருக்கிறது? மோனிக்கு ஒரு நல்ல வாழ்வு அமைவது அல்லவா முக்கியம்? அவள் இப்படி மறுக்கிறாளே!" என்றான் சுகேசன் கவலையோடு.

தொடர்ந்து "மோனி ப்ளீஸ்! ஆனந்தன் ரொம்ப..." என்று அவன் மோனியிடம் மன்றாடவும், சுபாங்கி குறுக்கிட்டாள். "அண்ணா ப்ளீஸ் நீ கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கிறாயா? மோனி நன்றாக வாழ வேண்டும் என்கிற அக்கறை எனக்கு இல்லையா? எல்லாம் வரிசையாகப் பார்ப்போம். இப்போது முதல் விஷயம், முதலில்! சொல்லுங்கள் அங்கிள், அண்ணன் இப்போது நல்லவர்தானா? இல்லையா?" என்று தேவதாசனை விரட்டினாள்.

முறுவலித்து "அதே வாயாடி, அப்படியே இருக்கிறாய்!" என்று செல்லமாகக் கூறியவர், தொடர்ந்து "சுகேஷும் அப்படித்தான். இடையில் பிடித்திருந்த மாயை விலகி, எங்கள் பழைய பிள்ளையாய் மாறிவிட்டான்" என்றார் அவர், திருப்தியோடு.

சட்டென அவர் முன் மண்டியிட்டு, அவரது கையைப் பற்றிக்கொண்டு "என்னை மன்னித்து விடுங்கள், அங்கிள்!" என்று விசித்தான் சுகேசன்.

"நல்லாருப்பா, நல்லாயிரு" என்று அவன் கையை அவர் தட்டிக் கொடுக்க, அடுத்த சோஃபாவில் அமர்ந்திருந்த கணபதி, கையை நீட்டி மகன் தலையை வருடினார்.

"அப்பா!" என்று இப்போது அவர் மடியில் முகம் புதைத்தான்

பிள்ளை.

உணர்ச்சிகள் தாக்கம் ஒருவாறு குறைந்து மறைய, சுபாங்கியின் குரல் மறுபடி தெளிவாக ஒலித்தது "ஏன் அங்கிள், மோனியோ, வேறு யாரையும் மணக்க மாட்டேன் என்கிறாள், அண்ணனும் நல்லவனாக மாறிவிட்டான். அவனுக்கே, அவளைத் திருமணம் செய்து கொடுத்தால் என்ன?"

வியப்பும், திகைப்புமாக, அவரவர் உணர்ச்சிகளுக்கு தக, எல்லோரும் சுபாங்கியைப் பார்த்தனர்.

அசையாமல் உட்கார்ந்திருந்தவன் ஆனந்தன் மட்டுமே.

முதலில் சுய உணர்வுக்குத் திரும்பியவன் சுகேசன். "ஐயோ வேண்டாம், சுபாம்மா. புதுப்பூ மாதிரி, மோனி. அவளைப் போய் எந்தத் தகுதியும் இல்லாத என்னோடு இணைக்க வேண்டாம். விட்டுவிடு"என்று தங்கையைத் தடுத்தான்.

பெண்ணைப் பெற்றவராக, தேவதாசனுக்கு இன்னொரு கவலை இருந்தது.

"யாரோ பெற்ற பிள்ளைக்காக, என் மகள் ஆயா வேலை பார்த்து உடல் தேய்வதை, என்னால் எப்படி ஒப்ப முடியும்"

முதல் தடவையாக ஆனந்தன் வாய் திறந்தான் "பவித்ராவை, அவளுடைய தாத்தாவும், பாட்டியும் பார்த்துக் கொள்வார்கள். உங்கள் மகளும் மருமகனும் தந்தை, தாய் என்று சில கடமைகளை மட்டும் செய்தால்,போதும்! அதுவும் பெயரளவில்தான்" என்றான் அவன்.

"அதெப்படி..." என்று தேவதாசன் கூறிக் கொண்டிருந்தபோது "தம்பீ!"என்று குரல் கேட்டு. ஆனந்தன் திடுக்கிட்டு திரும்பினான்.

இந்த உலகத்தில் அவனை இப்படி அழைப்பது...

அவசரமாகத் திரும்பிப் பார்த்தால், அவனது வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தவள், அவனுடைய் தாய் மரகதமேதான்! "அம்மா!"என்றான் அவன் ஆச்சரியத்தோடு!

அடுத்த வாரம் வரவேண்டிய தாய் இப்போது எங்கே வந்தாள்?



இன்னமும் அவன் வேலை முடியவில்லையே!

மரகதம், மகனைக் கண்குளிரப் பார்த்தது, ஓரிரு வினாடிகளே!

அதற்குள் ஒரு சோஃபாவின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தள்ளுவண்டியில் அமர்ந்து தன் திராட்சை விழிகளால் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை, அவளது கவனத்தை ஈர்த்துவிட, ஆவலாகக் குழந்தையின் அருகே சென்று, "இவள்தான் என் பேத்தியா? தம்பி?" என்று கேட்டாள்.

மின் கம்பியையே தொட்டுவிட்ட அதிர்ச்சியில், அங்கிருந்த அத்தனை பேரும் வாயடைத்துப் போயினர்!



# பேசும் பொற்சித்திரமே 11

திடுமென வந்தபுதிய பெண்மணியை ஆனந்தன் 'அம்மா' என்கிறான்!

அந்த அம்மா, பவித்ராவைப் 'பேத்தி' என்கிறாள்!

அப்படியானால், ஆனந்தன் பவித்ராவுடைய தாய்மாமனா?

தெள்ளிய நீரோட்டமாகச் சென்று கொண்டிருந்த இரண்டு குடும்பங்களின் நிம்மதியை சந்தோஷத்தை அடியோடு புரட்டிப் போட்ட, அந்த எழிலரசியுடைய அண்ணனா?

இங்கே வீட்டை வாங்கிக்கொண்டு வந்ததில் இருந்து ஒரு நல்ல கனவானாய்க் கருதி வந்த இவனது இன்னொரு முகம் எப்படிப்பட்டது?

ஐயமும் வியப்புமாக எல்லோரும் விழிக்கையில், வேறு எதையும் கவனியாமல், கண்ணீருடன் பேத்தியைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருந்தால் மரகதம்.

ஆனந்தனின் கவனத்துடன் கூடிய பார்வை எல்லோரையும் சுற்றி வந்து, சுபாங்கியிடம் நிலைத்தது.

கசப்போ வெறுப்போ இல்லாமல் 'ஓ இதற்காகத்தான், இவ்வளவு நஷ்டப்பட்டு, இங்கே வந்தாயா?' என்று உண்மை புரிந்து, மலர்ந்த

விழிகளால் அவனை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஆனந்தனின் பார்வை சந்திக்கவும் 'உன் நம்பிக்கை எனக்கு யானை பலம்' என்று அவன் சொன்னது நினைவு வர 'நான் உன் பக்கம்' என்று சொல்லாமல் சொல்வது போலப் புன்னகை செய்தாள் அவள்.

புரிந்து கொண்டதன் அடையாளமாகக் கண்மூடித் திறந்தவன், உடலில் நேர்ந்திருந்த சிறு தொய்வு மறைய, மறுபடியும், ஒரு தரம் எல்லோரையும் பார்வையால் வலம் வந்தான்.

லேசாகத் தொண்டையைச் செருமி "என்ன? என்னைப் பார்த்தால் வில்லனோ இப்போது என்று சந்தேகம் வருகிறதோ?" என்று ஒரு தயக்கமான அரை முறுவலுடன் கேட்டான் அவன்.

மற்றவர்கள் யோசனையோடு 'இல்லை... ஆனால்' என்பது போலப் பார்க்க, சுகேசனிடம் வார்த்தைகள் பீறிட்டன.

"எப்படி ஆனந்தன்? எப்படி அந்தப் பேயும் நீங்களும் ஒன்றாக... ஒரே வயிற்றில் பி...பிறந்திருக்க முடியும்? நேர் எதிர்த் துருவங்கள். ஒரே இடத்திலா? தன்னைத் தவிர எதையுமே எண்ணாத அவளும், பிறருக்காக... எனக்காக இவ்வளவு செய்யும் நீங்களும்... நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லையே! என்னைக் கெடுத்து குட்டிச் சுவராக்கிக் குடிகாரனாக மாற்றி நாசமாக்கிய அவளும்... நிலமை புரிய வைத்து, அதே குடியை விடச் செய்து, மனிதனாக்கி... அதிலும் ஒருநல்ல மனிதனாக்கிய நீங்களும் உடன் பிறப்புகள் என்றால்... எட்டாத கற்பனையில் கூட, அது எப்படி முடியும்?" என்று அவன் சொற்களை கொட்டக் கொட்ட மற்ற முகங்கள் மெல்லத் தெளிவாகத் தொடங்கின.

குற்றால அருவியாய் கொட்டிய வார்த்தைகள் மரகதத்தின் கவனத்தைப் பேத்தியிடமிருந்து ஈர்க்க, அவளும் திகைத்து நின்றாள்.

மகனிடம் சொல்லாமல் கொள்ளாமல் திடுமென வந்தது சரியில்லை போலத் தெரிகிறதே என்று தோன்றக் கவலையுடன்



மகனைப் பார்த்தாள்.

ஒரு பெருமூச்சுடன், ஆனந்தன் பேசத் தொடங்கினான்.

"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் என்பது போல, எங்கள் இருவரின் பிறப்பும் நான் ஆண், எழில் பெண் என்பது தவிர, ஒரே மாதிரிதான். ஆனால் வளர்ப்பில்தான்..." என்றவன் தொடருமுன், செந்திரு குறுக்கிட்டாள்.

அந்தக் குடியிருப்பில், வாரக் கடைசிகளில் வந்து கூடவே இருந்தபோதும், ஆனந்தனைத் தினசரி பார்த்துப் பேசிப் பழகுகிறவள் அவள்.

அந்த உரிமையில் "உங்கள் அம்மாவைப் பார்த்தால் தப்பாக பெண்ணை வளர்க்கக் கூடியவர் போலத் தெரியவில்லையே ஆனந்தன்!" என்றாள் அவள். அவளோடு சேர்ந்து, "ஆமாம்ப்பா" என்ற மல்லிகைக்கும் சேர்த்து நன்றி சொல்லிவிட்டு, எழில் வளர்ந்த கதையைச் சுருக்கமாகச் சொன்னான், ஆனந்தன்.

"அப்பா இல்லாத நிலையில் மூத்த தலைமுறைப் பெரியவர்களின் அளவு கடந்த செல்லமும், அவர்கள் கொடுத்த பெரும் பணமும் சேரவே., அம்மாவால் கட்டுப்படுத்த முடியாத அளவு, எழில் கைமீறிப் போய்விட்டாள். அவளால் அம்மா பட்ட துன்பம் கொஞ்சமல்ல. அதனாலேயே அந்த சுமார் இரண்டு ஆண்டுகாலம் அவளால் சுகேசன் என்ன சித்திரவதை அனுபவித்திருப்பார் என்று தெரிந்திருந்தாலேயே,அவருக்கு உதவி செய்தே தீர வேண்டும் என்று முடிவு செய்தேன். முதலில், நான் வந்தது பவித்ராவுக்காகத்தான் ஆனால் சுகேசனைப் பற்றி அறிந்ததும், அவருக்கு நல்லது நடப்பது தலையாய விஷயம் ஆகிவிட, அதற்காக முயற்சி செய்யத் தொடங்கினேன். என்னால் ஆனதைச் செய்திருப்பதாகவும் நினைக்கிறேன். இனி என்ன முடிவானாலும் உங்கள் கையில் என்று குறிப்பாக தேவதாசனைப் பார்த்தான் ஆனந்தன்.

"உங்கள் பழைய கதையெல்லாம் எனக்கு வேண்டாம்ப்பா" என்று

ஒதுக்கியதன் மூலம், ஆனந்தனின் விளக்கத்தை ஒத்துக் கொண்டதை, அவர் தெரிவித்தார்.

ஆனால் பவித்ரா விஷயத்தில் அவரது பழைய நிலை மாறவில்லை.

விஷயம் புரிய "என் பேத்தியை நான் வளர்க்கிறேன்"என்று மரகதம் முன்வர, ஆனந்தன் அதை மறுத்துப் பேசினான்.

"அம்மா பவித்ரா சுகேசனுடைய பெற்றோரிடம் இப்போது போலவே வளர்வதுதான் நல்லது" என்று அவன் கூற, அவன் தாயின் பேச்சில் அதிர்ந்து போயிருந்த செந்திருவின் இறுக்கம் தளர்ந்தது.

ஆனால் "ஏன் தம்பி, நான் பேத்தியை தப்பாக வளர்ப்பேனா? எழில் ஏன் அப்படி ஆளாள் என்று உனக்குமா தெரியாது?" என்று மரகதம் வருத்தத்துடன் கேட்டாள்.

தாயைப் பரிவுடன் நோக்கி "தெரியும்மா. அவளை நினைத்தே, நீங்கள் பவிக்குட்டியிடம் அதிக கண்டிப்பு காட்டி விடக்கூடும் என்பதுதான் என் பயம்! அதைப் போன்ற எந்த விதப் பிரச்சினையும் இல்லாமல் பவித்ரா இங்கே இயல்பாக வளருவாள்" என்றான் அவன்.

"அதப்படிடா? மாற்றாந்..."என்று விடாமல் தொடர்ந்த தாயின் பேச்சில், ஆனந்தன் குறுக்கிட்டான் "ஷ் அம்மா நீங்கள் பயப்படுவது போல எதுவும் நடக்காது."என்றவன், சுகேசனை நோக்கி "இது உங்கள் செய்தி, ஆனாலும் நானே சொல்லப் போகிறேன் சாரி!" என்று மன்னிப்புக் கேட்டுவிட்டு, சுகேசன் முறுவலுடன் தலையாட்டவும் தொடர்ந்தான்.

"சுகேசன் அலுவலகத்தில் சிங்கப்பூர் கிளைக்குச் செல்ல, அவருக்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. மனைவியோடு, இருவரும் அங்கே போய்விட்டாலும், தேவைப்படும்போது, வந்து பெற்றோராகக் குழந்தைக்கு எல்லாம் செய்வார்கள். மேற்கொண்டு நடப்பது கடவுள் சித்தம். இந்த வகையில் தேவதாசன் அங்கிளின் ஆட்சேபமும், அடிபட்டுப் போகிறது. செந்திரு, ஆன்ட்டி, அங்கிள் இருவரும் மொட்டு மொட்டென்று ஒருவர் முகத்தை ஒருவர்



பார்த்துக் கொண்டு.. தனிமையில் கிடக்க நேரிடாமல் பவியை தொடர்ந்து நல்லபடியாக வளர்ப்பார்கள். அந்த நம்பிக்கை எனக்கு முழுதாக இருக்கிறது"

தாயின் முகத்தில் தோன்றிய அடிபட்ட வலியை காணாதவன் போல, சுபாங்கியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஆனந்தன் தன் பேச்சை தொடர்ந்தான். "அப்படி அவர்கள், பவிச் செல்லத்தை ஒழுங்காக வளர்க்கிறார்களா என்பதை, அவ்வப்போது மாமியார் வீட்டுக்கு வரும்போது, நான் ரொம்பக் கவனத்துடன் கண்காணிப்பேன்..." என்றான் பேச்சோடு பேச்சாக.

பேத்தி தன்னிடம் இருக்கப் போவதில்லை என்ற வருத்தத்துடன் அவனையே வருடியவண்ணம், அசுவாரசியமாகப் பேச்சை கேட்டிருந்த மரகதம் விலுக்கென நிமிர்ந்தாள்.

"ஏ தம்பி.... நீ என்ன சொன்னாய்? மா... மாமியார் வீடா, அப்படியென்றால்... அப்படியென்றால் நீ நீ திருமணம்" என்று வாயெல்லாம் பல்லாகத் தடுமாறினாள்.

ஆனந்தனின் கண் குறிப்பில், அதற்குள் அவளுடைய மகன் அருகே வந்து நின்றிருந்த சுபாங்கியை ஆவலும் மகிழ்ச்சியுமாகப் பார்த்தாள்.

அதற்குள் பேச்சின் பொருள் மற்றவர்களுக்கும் புரிய, சின்னவர்கள் ஆர்ப்பரித்துக் கைதட்டினார்கள்.

ஆவலாக நோக்கி, "ஆனந்தன் தம்பி, நான் கேட்டது... என் காதில் விழுந்தது மெய்தானே?" என்று ஆர்வமும் மகிழ்ச்சியுமாக கணபதியும் செந்திருவும் பார்வையாலும், சொற்களாலும் கேட்டார்கள்.

"பேச்சு நடுவே ஒரு நல்ல விஷயத்தை நழுவ விட்டு, பிரதிபலிப்பு எப்படி இருக்குமோ என்று பார்த்தேன். பரவாயில்லை. தைரியமாக காலில் விழலாம் வா. அம்மா, ஆன்ட்டி, அங்கிள் மூவரும் சேர்ந்து நில்லுங்கள், திரும்பத் திரும்ப விழ வைத்து, இடுப்பை ஒடிக்காதீர்கள். சும்மாவே சுகேசன் திருமணத்தை முடித்து

வைப்பதற்குள், நாங்கள் இருவரும் ரொம்பவும் அசந்து போனோம்" என்று மூவரின் பாதங்களில் பணிந்து எழுந்தார்கள்.

"சந்தடி சாக்கில், சொந்த வேலையை முடித்துக்கொண்டு, அசதி என்று தப்பிக்கப் பார்க்கிறீர்களா? பெண்ணுக்கு அண்ணன் நான்! என் காலில் விழாமல் ஒன்றும் நடக்காது, தெரியுமா?"

"அதெல்லாம் நாங்கள் சிங்கப்பூருக்கு தேனிலவு வரும்போது பார்க்கலாம். அப்போது வேண்டுமானால், பெண்டாட்டி காலில் விழுவதற்கு பதிலாக, மாறுதலுக்கு மச்சான் காலிலும் ஒரு தரம் விழுந்து வைக்கலாம்"

"ஷ் என்ன பேச்சு இது?" என்று சுபாங்கி ரகசியமாக அதட்ட, "என்னது? கூடாதா? உன் காலில் மட்டும்தான் விழ வேண்டுமா?" என்று உரக்கக் கேட்டான் ஆனந்தன்.

எல்லோரும் ஓஹோஹோ என்று ஆர்ப்பரிக்க, சிவந்த முகத்தை மறைக்க இயலாமல், தானும் அந்தக் கோலாகலத்தில் புன்னகையோடு இணைந்து கொண்டாள் சுபாங்கி.

ஆனந்தனுடைய 'சுகி'

முற்றும்

Owned Published Edited and Printed by SP.RAMU, Published at 6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Phone: 2844 0617, 2848 3163. Telefax: 2848 0610. Printed at Sri Parameswari Printers & Binders, 9, Swami Aachari Street, Pudupakkam, Chennai - 600 016. Editors: SP.RAMU. Editor incharge: Bharathi. E-mail: vivekpublications@usa.net.






வசந்தம் இல்லா வாலிபம் எதற்காக?

ஆண்மை பிரச்சினையா?
நரம்புத் தளர்ச்சியா?
குழந்தையின்மையா?

குறுகிய காலத்தில் தீர்வு

உங்கள் ஆசை கனவுகளை சித்த மருத்துவத்தில் நிறைவேற்றலாம்



V. பொன்ராஜ் RIMP

ஆண்மைக்குறைவு, குழந்தையின்மை, நரம்புத் தளர்ச்சி, இவை, ஒழுக்கம், நமது அன்றாட பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு பழக்கங்களால் ஏற்படும் வியாதிகள் ஆகும். மற்ற வியாதிகள் போல் இதுவும் குணப்படுத்தக்கூடிய வியாதிகளே. பதினெட்டு சித்தர்களால் பழங்கால ஓலைச் சுவடிகளில் எழுதி வைக்கப்பட்ட அற்புதமான ஆரோக்கிய ரகசியங்களை நமது முன்னோர்கள் கண்டுபிடித்து சித்த வைத்திய முறையை உருவாக்கினார்கள். கடந்த கால கெட்ட பழக்கங்களால் ஆணுறுப்பு சிறுத்துப் போகுதல், மனைவியுடன் தாம்பத்யம் ஆரம்பிக்கும் பொழுதே விந்து வெளியேறுதல், வீரியசக்தி இல்லாமல் விந்து நீர்த்துப்போகுதல், சர்க்கரை வியாதி, பிளட் பிரஷர் போன்றவற்றிற்கு தொடர்ச்சியாக மாத்திரைகள் சாப்பிட்டு வருவதால் ஆணுறுப்பில் எழுச்சியின்மை மற்றும் செக்ஸ் உணர்வில்லாமை, திருமணம் செய்தால் உடல் ரீதியாக மனைவியை திருப்தி செய்ய முடியாமல் போய்விடுமோ என்ற பயம், சரியான காலத்தில் மனைவியுடன் உறவு வைக்காததால் ஏற்படும் குழந்தையின்மை பிரச்சினை, தூக்கத்தில் விந்து வெளியேறுதல் இவை அனைத்திற்கும் எங்களது மூலிகை ஆராய்ச்சி மையம் மூலமாக எங்களது முன்னோர்களால் பரம்பரையாக செய்து வந்த சித்த மருத்துவமுறையில் விரைவில் குணமடைய மருந்துகளும், ஆலோசனைகளும் வழங்கி வருகிறோம். மருந்து இல்லாமல் தாம்பத்யம் குறித்த தங்களது சந்தேகங்களுக்கு டாக்டரின் இலவச ஆலோசனையை நேரில் பெறலாம். உலகெங்கும் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளுக்கும் எங்களது மருந்துகளை அனுப்பி அதன் மூலம் பலனடைந்தோர் பலர்.

சொரியாசிஸ், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கும் சிறப்பான சிகிச்சை செய்து தருகிறோம்

| | | | | |
|---|---|---|---|---|
| பரமக்குடி<br>3ம் தேதி 7 AM to 6 PM<br>அஸீப் லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | சிவகாசி<br>14ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் சிதம்பரம்<br>பஸ்நிலையம் அருகில் | மதுரை<br>5ம் தேதி 7 AM to 6 PM<br>நியூ காலேஜ் ஹவுஸ்<br>டவுன்ஹால் ரோடு 04522342971 | கோவை<br>6ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் புளு ஸ்டார்<br>காந்தி நிபுரம் அருகில், காந்திபுரம் | திருப்பூர்<br>7ம் தேதி 7 AM to 6 PM<br>குமார் லாட்ஜ்<br>பஸ்நிலையம் அருகில் |
| திண்டுக்கல்<br>8ம் தேதி 7 AM to 6 PM<br>குறிஞ்சி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | சென்னை<br>9, 10ம் தேதி 6 AM to 6 PM<br>ஹோட்டல் இம்பீரியல் பிளாசா<br>எழும்பூர் ரயில் நிலையம் எதிரும் | வேலூர்<br>11ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் கன்னா<br>பஸ் ஆஸ்பத்திரி அருகில் | ஓசூர்<br>12ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் ஸ்ரீ கவுரி சங்கர்<br>ஸ்டேட் பாங்க் அருகில் | சேலம்<br>13ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் செல்வம்<br>பஸ் நிலையம் அருகில் |
| ஈரோடு<br>14ம் தேதி 7 AM to 6 PM<br>ஆக்ஸ்ரோடு லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | திருச்சி<br>15ம் தேதி 7 AM to 6 PM<br>அஜந்தா லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | தஞ்சாவூர்<br>16ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் அசோக்<br>பஸ் நிலையம் அருகில் | நாகப்பட்டினம்<br>17ம் தேதி 7 AM to 6 PM<br>பூம்புகார் லாட்ஜ்<br>பஸ்நிலையம் அருகில் | பாண்டிச்சேரி<br>18ம் தேதி 7 AM to 6 PM<br>ஹோட்டல் சப்தகிரி<br>பஸ்நிலையம் அருகில் |
| கோவில்பட்டி<br>19ம் தேதி 7 AM to 6 PM<br>தேனா லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | சங்கரன்கோவில்<br>20ம் தேதி 7 AM to 6 PM<br>அசம்பினி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | தென்காசி<br>21ம் தேதி 7 AM to 6 PM<br>சீனிவாசா லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில் | திருநெல்வேலி<br>22ம் தேதி 7 AM to 6 PM<br>நெல்லை லாட்ஜ்<br>மேம்பாலம் கீழ் | மார்த்தாண்டம்<br>23ம் தேதி 7 AM to 6 PM<br>ஸ்டார் லாட்ஜ்<br>பழைய சினிமா தியேட்டர் அருகில் |

சென்னை
28,29ம் தேதி 9 AM to 9 PM

உடல் தர சிகிச்சை ஒவ்வொரு மாதத்திற்கும் சிகிச்சை கட்டணம் ரூ.10,500/, ரூ.8,500/, ரூ.7,500/, ரூ.6,500/, ரூ.5,500/ தரமான சிகிச்சை ரூ.3,500/, ரூ.2,600/, ரூ.1,600/, ... Dr.V.பொன்ராஜ் A/C.no. 30655222629 State Bank of India, Beach Road Tuticorin ... Western Union Money Changer ...

தேவஞான சித்த வைத்தியசாலை அறக்கட்டளை ஆராய்ச்சி மையம்
1, 222, புதுக்கிராமம் (வசந்த் & கோ காம்ப்ளக்ஸ் பின்புறம்) தூத்துக்குடி 628 003